731

உ

முருகன் துணை.

அகத்திய மகாமுனிவர்

புலத்திய முனிவருக்குபதேசித்த

அனுபோக

# மாட்டு வைத்தியம்

நடுக்காண்டம்



மதுரை புக்ஷாப்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

மு. கிருஷ்ண பிள்ளையவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

ரைட்] 1935 [விலை ரூ. 0–12–0

உ

முருகன் துணை

அகத்திய மகாமுனிவர்

புலத்திய முனிவருக்குபதேசித்த

அனுபோக

# மாட்டு வைத்தியம்

## நடுக் காண்டம்

மதுரை, தம்புசாமி நாயுடு அவர்கள்
குமாரர்

**த. குப்புசாமி நாயுடு அவர்களால்**

சேகரித்து சீர்திருத்தப்பெற்று

மதுரை புக்ஷாப்
பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு
மு. கிருஷ்ண பிள்ளையவர்களால்
பிரசுரிக்கப்பெற்றது.

ரிஜிஸ்தர் காப்பிரைட்] 1935 [விலை ரூ. 0-12-0

1C2 X135

# நூன்முகம்.

'பாண்டிநாடே பழம் பதியாக' என்று ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளியபடி உலகில் பாண்டி நாடாகிய இத்தமிழ் நாடு மிகவும் பழமையான ஓர் நாடு.

அகாமுத லெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு என்றபடி கடவுள் உலகத்திற்கெல்லாம் எப்படி மூலபுருஷனே அ தைப் போல் பல்வேறு பாஷைகளுக்கெல்லாம் தமிழே மூல பாஷை என்று கூறுவது மிகையாகாது. தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும், மற்ற நாடுகளுக்கும் பாஷைகளுக்கும் இல்லாத சிறப்புகள் அனேகமுள. அவற்றில் முதன்மையாக நம் நாட்டு சித்தர்களே நமக்கோர் சிறப்பு எனலாம். இக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்த மேல்நாட்டார்கள், நாகரிகம் இன்னதென் றுணராத காலத்திலேயே நம் நாட்டு சித்தர்கள் எல்லா இலக்கணங்களிலும் தேற்சி பெற்று அதைப் பாமரர்களுக்கு உபதேசித்து வந்தனர். முடிவேந்தர்களும், புலவர்களும் அந்தணர் முதலிய யாவர்களாலும் மிகவும் போற்றப் பெற்று தமிழ் நாட்டில் தெய்வ அம்சங்களாக தோன்றிய இச் சித்தர்கள் யோகம், ஞானம், வாதம், வைத்தியம், சோதிடம், மந்திரம் முதலிய அரிய பெரிய தத்துவங்களையும், கலைஞானங்களையும் ஆராய்ந்து உண்மை யுணர்ந்து பலரும் பயனடையும்படி நூறாயிரக்கணக்கான பாடல்களை திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

ஜீவகாருண்யமே சிறந்த தருமம் என்று கருதப்படும் பொழுது நம் உற்பத்தி முதல் நிரியாண வரை பெற்ற தாயைப் போல் நமக்கு பால் கொடுத்து நமது வாழ்க்கையை சுகமாகவும் இன்பகரமாகவும் செயதுவரும் தாயினும் சிறந்த பசுவை நாம் நம் கண்ணின் மணியைப்போல் காப்பது நம் கடமையன்றோ. தாயற்ற குழந்தைக்குத் தாயாகவும், நோயாழிக்கு ஜீவாதாரமான உணவைக் கொடுக்கக்கூடியதாகவும், வீ ட் டி ற் கு லெக்ஷிமியாகவும் இருந்து வருவது பசுவன்றோ. காமதேனுவாகிய இப்பசுவைக் காப்பது நாம் செய்யும் சிறந்த தருமங்களில் ஒன்றானதால் சித்தர்களில் சிறந்த

அகத்தியமா முனிவர் புலத்திய முனிவருக்கு உபதேசித்த மாட்டு வைத்தியத்தை ஏழு வருட காலங்கள் பற்பல விடங்களிற் சென்று ஏட்டுப் பிரதிகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து "அனுபோக மாட்டு வைத்தியம்" என்னும் இப்புத்தக வாயிலாக நான் வெளியிடத் துணிந்தேன்.

இப்புத்தகத்தில் குணம்குறி, நிறம், சுழி, சுத்தம், சுபாவம் அதற்குறும் பிணியின் குணங்குறி செய்கை முதலியவற்றால் இப்பிணி யின்னதென உணர்ந்து அதற்குரிய அவிழ்தங்களும் அதனைப் பிரயோகிக்கும் முறைகளும் அதற் குபகாரணமான சூட்டினங்களும் மிகத் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

பசு மாட்டிற்கு உண்டாகிய சில கொடிய நோய்கள் அப்பசுவின் பாலை அருந்தும் மானிடர்களுக்கும் உண்டாகும் என்று இக்காலத்து ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றனர். ஆகையால் ஒவ்வொருவரும் மாட்டின் நோயைக் கண்டு சிகிச்சை செய்யும் திறமையுள்ளவர்களாக வேண்டுமென்று கருதியே சென்னை பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு மு. கிருஷ்ண பிள்ளை அவர்கள் இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட முன் வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இங்ஙனம்,

☞ த. குப்புசாமி நாயுடு,

வாத வைத்ய யோகஞான சோதிட

நூலாராய்ச்சிப் புலவர்,

மதுரை.

உ

# மாட்டுவயித்தியம் அட்டவணை.

## நடுக் காண்டம்


| விஷயம் | பக்கம் கிர். | விஷயம் | பக்கம் கிர். |
|---|---|---|---|
| அங்கி நோய் | 85 | காரை நோய் | 75 |
| அங்கிரி நோய் | 84 | கிராணிக் கழிச்சல் | 47 |
| அமுதநெறி நோய் | 69 | கிராமுட்டி நோய் | 11 |
| அழல் நோய் | 94 | குசநோய் | 3 |
| அழல்வாரி நோய் | 16 | குடல் நோய் | 90 |
| ஆள்வாரி நோய் | 18 | குடல்முட்டி நோய் | 10 |
| இங்சூ நோய் | 3 | குடல் முறுக்கு நோய் | 91 |
| இரத்த உதிர நோய் | 61 | குடலெரி நோய் | 75 |
| இரத்தக் கழிச்சல் | 45 | குடல் வாதம் | 52 |
| இரவி நோய் | 2 | குட்ட நோய் | 91 |
| இராகு நோய் | 5 | குரல் நோய் | 90 |
| ஈரல் உலர்த்தி நோய் | 21 | குரல்முட்டி நோய் | 10 |
| ஈரல்முட்டி நோய் | 7 | குருநோய் | 3 |
| உதிர நோய் | 57 | குலைப்பன் நோய் | 92 |
| உதிரங்கொண்ட நோய் | 63 | குழல் நோய் | 94 |
| உதிரச் செங்கமாரி நோய் | 64 | குளிவு நோய் | 93 |
| உதிரமண்டலி நோய் | 60 | குளிர் நோய் | 93 |
| உலர்த்தி நோய் | 20 | குளிர்ந்த நோய் | 94 |
| எரிநோய் | 72 | குன்றி நோய் | 86 |
| எரிகால் நோய் | 73 | குன்றிக்காய் நோய் | 87 |
| எருதுப்புரை | 1 | குன்னிநோய் | 85 |
| எருவுலர்த்தி நோய் | 21 | கேது நோய் | 5 |
| எலும்புருக்கி நோய் | 80 | கொடு நோய் | 93 |
| எழுநாரை நோய் | 79 | கோமாரி நோய் | 65 |
| கடவுள் வணக்கம் | 1 | கோரை நோய் | 76 |
| கரணை நோய் | 83 | சருநோய் | 27 |
| கருக்கல் நோய் | 35 | சனி நோய் | 4 |
| கருங்காலி நோய் | 55 | சாரை நோய் | 77 |
| கருஞ்சூரி நோய் | 56 | சிறுபுள்ளி நோய் | 5 |
| கருநாடி நோய் | 35 | சிறுபுள்ளு நோய் | 7 |
| கருநோய் | 26 | சீதக்கழிச்சல் | 43 |
| கருமணி நோய் | 36 | சுரநோய் | 34 |
| கருமலை நோய் | 57 | சுரிநோய் | 73 |
| கல்லுதிர நோய் | 63 | சுழட்டி நோய் | 15 |
| கழிச்சல் | 43 | சுழத்தி நோய் | 11 |

## நடுக்காண்டம் அட்டவணை


| விஷயம் | பக்கம் நிர். | விஷயம் | பக்கம் நிர். |
|---|---|---|---|
| சுழல்வணங்கி நோய் | 15 | பக்கவாதம் | 51 |
| சுள்ளை நோய் | 15 | பச்செருக்கல் நோய் | 35 |
| சூட்டுக்கோல் விபரம் | 2 | பந்தக்கால் நோய் | 74 |
| சூரிநோய் | 56 | பருநோய் | 23 |
| சூரை நோய் | 77 | புதநோய் | 3 |
| சூலை நோய் | 55 | புலமாரி நோய் | 67 |
| செங்கமாரி நோய் | 64 | புள்ளி நோய் | 5 |
| செம்புள்ளி நோய் | 6 | பெருங்காலி நோய் | 56 |
| செம்மாரி நோய் | 69 | பெருஞ்சூரி நோய் | 57 |
| செரு நோய் | 31 | பெருநாடி நோய் | 36 |
| செவிப்புத்து நோய் | 42 | பெருநோய் | 28 |
| செவ்வுதிர நோய் | 63 | பெருமணி நோய் | 37 |
| சொரி நோய் | 71 | பெருமலை நோய் | 57 |
| தடிமீரல் முட்டி நோய் | 9 | பெருவிரட்டி நோய் | 24 |
| தலைப்புத்து நோய் | 41 | பொரி நோய் | 70 |
| தலைவிட நோய் | 41 | மகாவிருட்டி நோய் | 25 |
| தவளை நோய் | 81 | மண்டை நோய் | 38 |
| தவளைப்புள்ளி நோய் | 6 | மருநோய் | 33 |
| திமிர்வாதம் | 49 | மன்னி நோய் | 85 |
| திரட்டியீரல் முட்டி நோய் | 9 | முடக்குவாதம் | 53 |
| தீராதயெருக்கல் நோய் | 34 | முன்காலிடுக்கி நோய் | 20 |
| தெருநோய் | 30 | யானைச்சொரி நோய் | 72 |
| தொண்டை நோய் | 37 | யானை வாதம் | 50 |
| நருநோய் | 31 | வரிநோய் | 71 |
| நனவாரி நோய் | 19 | வாதசூலை | 53 |
| நன்வாரி நோய் | 19 | வாத நோய் | 47 |
| நாக்குப்புத்து நோய் | 42 | வாதப் பிடிப்பு | 53 |
| நாரைக்கால் நோய் | 74 | வாய்கோமாரி நோய் | 67 |
| நாரை நோய் | 77 | விரிநோய் | 72 |
| நித்திய நியமம் | 1 | விருட்டி நோய் | 21 |
| நெஞ்சிடுக்கி நோய் | 20 | வீரமுட்டி நோய் | 11 |
| நெரு நோய் | 27 | வெரு நோய் | 31 |
| நெறி நோய் | 69 | வெள்ளி நோய் | 4 |

உ

ஓம் கணபதி துணை.

அகத்திய மகாமுனிவர்

புலத்தியருக்குபதேசித்த

# மாட்டு வயித்தியம்,

## நடுக் காண்டம்.

### கடவுள் வணக்கம்

### காப்பு.

ஆதிநடு முடிவாகி யண்ட பிண்டத்
தப்பாலுக் கப்பாலா யயன்மா லாகிப்
பாதிமதி யணிந்தருத் திரனு மாகிப்
பரவுமகேஸ் பரவடிவாய்ப் பரம ஞானச்
சோதிசதா சிவவொளியாய் வெளியாய் ஸ்தூல
சூக்குமகா ரணமாமுச் சுடராய்த் தோன்றி
நீதியாய் நிரஞ்சன நிட்களமா யெங்கும்
நிறைந்துவளர் பரம்பொருளின் பாதங் காப்பே. (1)

### எருதுப்புரை.

காப்பான மாட்டினத்தின் நோயின் செய்கை
கழிறினேன் மருந்துவகை சூட்டின் தன்மை
மூப்பான முதற்காண்டத் துரையா தெல்லாம்
மொழிகுவேன் நடுக்காண்ட மிதனி லப்பா
கோப்பான வெருதுகட்டுங் கொட்டில் நல்ல
குணமான வசதிகாற் றோட்டம் வேண்டும்
தாப்பான நிலங்கெட்டி யாகச்சாய் வாய்ச்
சலம்விட்டால் தங்காம லோடில் நன்றே. (2)

### நித்திய நியமம்.

நன்றாகச் செய்துகட்டி வெள்ளி தோறும்
நற்சாம்பி ராணியிடப் பிணிநா டாது
ஒன்றாகச் சகடமதிற் பூட்டு மாட்டுக்
குபசாந்தி யாய்த்தினமு மந்தி சந்தி

தொன்றாக தேகமெங்கும் பலமாய்த் தேய்த்து
சொல்லசுத்தம் நீக்கிவே றிடத்திற் கட்டி
அன்றாடம் நற்றீனி யூட்டிவந் தால்
அழகான மேனிகொண் டிலங்கும் பாரே. (3)

### சூட்டுக்கோல் விபரம்.

பார்க்கவே சூட்டுக்கோல் விபரஞ் சொல்வேன்
பத்துவகை யாமிரும்பில் மாட்டு லாடம்
சேர்க்கவே யுழுதொடிந்த கொழுவி னோடு
செப்பம்பு தேய்ந்தமுனை கவர்தீ வர்த்தி
ஏர்க்கவே மண்வெட்டிக் கோணி யூசி
இயலும்பன் னரிவாளுங் கம்பை யாணி
கோர்க்கவே முனையொடிந்த கதிருங் கூட
கூட்டிடுவாய்க் கீரைச்சட் டுவமுந் தானே. (4)

### இதுவுமது.

தானப்பா யிவைபத்து *மெற்கி ராண
சமயத்தி லொன்றாக நெருப்பி லிட்டு
கோனப்பா சூட்டுக்கோல் பலவா றாகக்
கூசாமற் சிறிதுபெரி தாகச் செய்து
ஏனப்பா நோய்களுக்குத் தக்க வாறு
ஏற்றதொரு கோலதனாற் கவனம் வைத்து
தேனப்பா பரங்குன்றில் வாழுங் கந்தன்
திருவடியைப் போற்றிசெய்து சூட்டைப் போடே. (5)

### இரவி நோய்.

போடவே நோய்களெல்லாம் வீரிட் டோடும்
புகலுவே னிரவியென்ற நோயின் செய்கை
கூடவே குப்புற்றுக் கொண்டு நிற்கும்
குணமாகக் காணத்தை மாவி டித்து
நாடக்காற் படிமாவைக் காடி தன்னில்
நலமாகக் கலக்கி* திரி நாளு மூட்டித்
தேடவே யிடதுவிலாக் கீழ்வ யிற்றுந்
திடமாகச் சூடிடநோய் சாந்த மாமே. (6)

* எல்—சூரியன். * திரி—மூன்று.

## இந்து நோய்.

ஆமப்பா இந்துவென்ற நோயின் செய்கை
அறைகிறேன் நாற்காலுந் தளர்ச்சி யாகும்
தாமப்பா வதற்கஞ்சு பிடியாந் தும்பை
தனைக்கொணர்ந்தே யரைத்துநல் லெண்ணெய் தன்னில்
வாமப்பா கலக்கி*முத் தினம தூட்டி
வளமான நாற்காலுஞ் சூடு போட
போமப்பா யிப்பிணியுங் குசநோய் செய்கை
புகலுவே னாரம்ப காலந் தொட்டே. (7)

## குசநோய்.

தொட்டுமே யிரண்டுவிலா வற்றிப் போகும்
சூடாக வெப்போதுந் தேகங் காயும்
விட்டுமே போவதற்கு மருந்தைக் கேளு
வேப்பிலையின் சாறுடனே வெந்நீர் தானும்
மட்டுமே வகைக்குமரைப் படியா மத்தில்
வசம்புபெருங் காயங்காற் பலம தாக
இட்டுவகைக் கரைப்பலமா மிளகுதிப் பிலியும்
இசைசுக்குப் பலமொன்றை யரைத்துக் கூட்டே. (8)

## புத நோய்.

கூட்டியே கலந்தொன்றாய் நாள்மூன் றூட்டி
குணமான தின்பின்பு பருத்தி வித்தை
ஆட்டியே யெருமைக்குப் பசுவின் பாலும்
ஆவுக்கு யெருமைப்பால் படிதா னொன்றில்
நாட்டியே கலக்கிநாள் மூன்ற தூட்ட
நலமாகும் புதனென்ற நோயின் செய்கை
நீட்டியே மேல்மூச்சு விட்டு நிற்கும்
நீங்கிடவே மருந்தொன்றைச் சொல்லக் கேளே. (9)

## குரு நோய்.

சொல்லவே குன்றிமணிச் செடிச மூலங்
தோண்டியே காடியைத்தான் தெளித் திடித்து
புல்லவே சாறுமரைப் படியெ டுத்து
புகட்டிடுவாய் மூன்றுநாட் சாந்த மாகும்


* முத்தினம்—மூன்றுதினம்.

ஒல்லவே குருவென்ற நோயின் செய்கை
உடம்பெங்கும் வெடித்துநடக் காதி ளைக்கும்
வெல்லவே அவரையுட னவுரியிலை வகைக்கு
விளங்குங்கைப் பிடியிரண்டு கொண்டு வந்தே. (10)

## வெள்ளி நோய்.

கொண்டுவந் தேபூண்டு பலம தொன்று
கூட்டியே வசம்புபல மரைய ரைத்து
பண்டுபசு வின்பாலிற் கலக்கி யூட்டிப்
பதரும விடதுவிலாச் சூடு போட ——— ———
விண்டுமரு கன்கிருபை தன்னாற் சாந்த
மேவுமே வெள்ளியென்ற நோயின் செய்கை
கண்டுபார் நாற்காலு முதறி நிற்கும்
கழறதற்கு வெங்காயம் பலந்தான் பத்தே. (11)


## இதுவுமது

பத்தியத னுடன்வசம்பு பலந்தா னொன்றைப்
பாங்காக பிடித்துவிளக் கெண்ணெய் விட்டு
மத்தித்துக் கொடுத்துமறு நாளி லுப்பும்
வகையாகப் புகையூர விரண்டுஞ் சேர்த்து
சித்திபெறக் காடியதிற் கலக்கி யூட்டி
தீங்கின்றி யிடதுவிலாச் சூடு போட

சத்திவேற் கிருபையினா லிந்த நோயுங்
தங்காம லோடிப்போ மின்னங் கேளே. (12)

## சனி நோய்.

கேளப்பா புலத்தியனே கவன மாகக்
கெம்பீரச் சனியென்ற நோயின் செய்கை
சூளப்பா நாக்கதனைச் சுருட்டி யுள்ளே
சுருக்கிட்டாற் போலாக யிழுத்துக் கொள்ளும்
கோளப்பா வில்லாதிந் நோயுந் திர
குணமான முடக்கத்தான் சமூலந் தன்னை
நாளப்பா கொண்டுவந் திடித்துச் சாறு
நன்றாகப் பிழிந்துமரைப் படிகொ டுத்தே. (13)


## இராகு-கேது நோய்.



கொடுத்துநாற் காலுஞ்சூ டிடவே தீரும்
கூறக்கே ளிராகென்ற நோயின் செய்கை
அடுத்துவயி றாதும்நீர் விடுத்து நிற்கும்
ஆதுவிலக வுப்பிலியின் வேரை வாங்கி
தொடுத்துமே பருத்திச்சா றதில வைத்துத்
துணிவாக மூன்றுநாட் கொடுக்க நன்றாம்
கடுத்துவருங் கேதென்ற நோயின் செய்கை
கண்பீளை சாடும்பற் கடிக்கும் பாரே. (14)

## இதுவுமது.

பார்க்கவே ஆணுடம்பும் பவன வாயும்
பண்டிரத்த மாகவிழுஞ் செவியுந் தாழும்
ஏர்க்கப்பேய்க் குமட்டிக்காய் கொண்டு வந்தே
யிடித்திடித்துச் சாறுபடி யொன்று வாங்கி



கோர்க்கநல் லெண்ணெய்குயப் பால்வ கைக்கு
கூறுழக்கு வீதஞ்சந் தனமும் நாழி
சேர்க்கவே கலக்கியிட் டடவி லாவிற்
றிடமாகச் சூடிடநன் றாகும் பாரே.

## புள்ளி நோய்.

நன்றான புள்ளிநோ யதனின் செய்கை
நவிலுவேன் தினியுணச் செமித்தி டாது
ஒன்றான வோசையுடன் கழிந்து நிற்கும்
உற்றமிள குப்புந்தை வேளை கூட்டி
குன்றாம லரைத்திளநீர் கலக்கி யூட்டி



குணமாக நெற்றியிற்சூ டிடவே தீரும்
மன்றான சிறுபுள்ளி நோயின் றன்மை
வழுத்தக்கேள் முதுகுநெளிந் திருக்கும் பாரே. (16)


## சிறுபுள்ளி நோய்.

பாரப்பா வுடம்பெங்கும் மயிர்சி லிர்க்கும்
பண்பான பின்னங்கால் நடுங்குந் தீர
நேரப்பா யெண்படிநீர் பாண்டத் திட்டு
நினைவாகப் பச்சரிசி யுழக்கி னோடு

வேரப்பா வேம்புபெரு மாத்தின் பட்டை
வேண்டியிரு பட்டையினைத் தட்டிப் போட்டு
ஏரப்பா தீயெரித்து வற்றக் காய்ச்சி
இரண்டுபடி கூழாக்கி யூட்டு வாயே. (17)

## செம்புள்ளி நோய்.

ஊட்டநல மாம்வேறு வகையைச் சொல்வேன்
உத்தமனே சிறுதும்பைச் சாறுசிறு நீரும்
நாட்டவே வகைக்குமொரு படியாய்ச் சேர்த்து
நலமாகக் கொடுத்திரண்டு விலாவிற் சூடு
தீட்டவே சுகமாஞ்செம் புள்ளி நோயின்
செய்கையது கண்சிவக்கும் வாய்நீர் சிந்தும்
தேட்டவுண வருந்தாது மயிர்சி லிர்க்கும்
திடமின்றி நாற்காலுஞ் சோர்வுண் டாமே. (18)




## தவளைப் புள்ளி நோய்.

உண்டதற்கோ ரகத்தியிலைப் பிடியும் நான்கு
உற்றதொரு கொன்னையிலை முன்போ லாகக்
கொண்டதனைச் சேர்த்திடித்துப் புளித்த காடி
குணமாகக் கலக்கிநாள் மூன்ற தூட்டி
தொண்டதற்கு யிடதுவிலாத் தலையிற் சூடு
சுட்டிடவே சுகமாகுந் தவளைப் புள்ளி
கண்டதனின் செய்கைவாய் திறந்தி டாது
கழறதற்கு யிந்துப்புக் காயங் கூட்டே.

தலை




விலா




## இதுவுமது.

கூட்டியரைத் தேபசும்பால் நாழி தன்னில்
குழப்பியூட் டிடநன்று மின்ன மொன்று
தாட்டிகமா மெலுமிச்சம் பழங்கா ணூறு
தன்னுடனே பழம்புளிவி ளாங்காய் போலக்
கோட்டியிலா நெற்சாதம் பிடிதா னென்று
கூசாம லரைத்துக்கா டியிற்க லக்கி
ஊட்டியே வலக்காலிற் சூடு போட
உத்தமனே சாந்தமுமா மின்னங் கேளே. (20)




## சிறுபுள்ளு நோய்.

கேளப்பா சிறுபுள்ளு நோயின் செய்கை
கிட்டிலுடல் வற்றிவருந் தூக்க முண்டாம்
நாளப்பா பொய்மேய்ச்சல் மேய்ந்தி ருக்கும்
நடைதளருந் தீருதற்கு வெள்வெங் காயம்
தாளப்பா தேங்காயி னளவ ரைத்து
தானுமொரு படிபசுவின் பாற்க லக்கி

கோளப்பா யில்லாம லூட்டிச் சூடு
குணமாக யிடதுவிலாப் போட நன்றே. (21)

## ஈரல்முட்டி நோய்.

நன்றாமீ ரல்முட்டி நோயின் செய்கை
நவிலவே வயிறாது மிரைதின் னாது
அன்றாட மேதிகைத்துக் கொண்டு நிற்கும்
அதுவிலக மிளகோமம் வகைக்க ரைக்கால்
குன்றாத படிகூட்டி லவங்கப் பட்டை
கூறிடுநற் சீரகமுங் கரியசீ ரகமும்
ஒன்றாக வதிமதுரந் திப்பிலியிவ் வகைக்கு
உற்றபல மரையாக நிறுத்து வாங்கே. (22)

## இதுவுமது.

வாங்குவாய் சுக்கதுவும் பலந்தா னென்று
வளமான கிராம்பதுவுங் காற்ப லந்தான்
சோங்குடைய பாகையிலைப் பிடிதா னுன்கு

சுருக்காக வரைத்துக்காற் படிவேப் பெண்ணெய்
பாங்குறவிட் டேபிசைந்து மாட்டுக் கூட்டி
பண்பாக விலாவிரண்டிற் சூடு போடத்
தீங்குறு தின்னமொரு யீரல் முட்டி
செய்கைவாய் நீர்வடியு மிரைதின் னாதே. (23)


## இதுவுமது.

தின்னவுடற் குளிர்ந்திருக்கும் புல்ல ரிக்கும்
செருமுமசைப் போடாது கண்சி வக்கும்
அன்னநோய் தீருதற்குக் கடுகுதிப் பிலியும்
அக்கிரா காரமஞ்சள் வகைக்குமரைப் பலமாம்

பின்னமிலாக் குரோசாணி யோமத் தோடு
பிறங்குமிள காய்ப்பழங் கஸ்தூரி மஞ்சள்
சொன்னவகைக் கொருபலமாய் நிறுத்துக் கொண்டு
சுக்குவெண் பூண்டுதனிப் பலமி ரண்டே. (24)

## இதுவுமது.

பலங்காலாம் பெருங்காய மெருக்க லம்பூப்
பச்சையாய்ப் பிடியொன்று சேர்த்தி டித்து
பிலமான சாராயம் விட்டு நன்றாய்ப்
பிசைந்தூட்டி யதன்பிறகு வெந்நீர் காட்டி
சலனமிலா திடதுவிலாச் சூடு போடத்
தானகலு மின்னமொரு யீரல் முட்டி
கலங்கவரு மதன்செய்கை புல்ல ரிக்கும்
கண்பீளை சாடும்வயி றூதும் பாரே. (25)




## இதுவுமது.


பார்க்கவிரை தின்னாது பற்க டிக்கும்
பண்பிலாப் புழுக்கைபோற் சாணம் போடும்
மார்க்கமின்றி யிரத்தநீர் விடுக்குந் தீர
மழுக்காரைத் தொலியினொடு மஞ்சகுருந் தொட்டி
சேர்க்கவே சமூலமதைக் கொண்டு வந்து
செப்பும்வகைக் கொருமாங்கா யளவ ரைத்து
தீர்க்கமிரு படிகாடி தனிற்க லக்கி
திடமுடனே புகட்டியபின் னாகக் கேளே. (26)

## இதுவுமது.

ஆகவே பிரண்டைதனைக் கொண்டு வந்து
அதையிடித்து மேனியிற்றூ வாலை யிட்டு
சேகரமா முன்னங்காற் சூடு போடத்
தீருமப்பா யின்னமொரு யீரல் முட்டி
சோகமுடன் வருகுமதன் செய்கை தன்னைச்
சொல்லுவேன் வயிறூதுங் கண்சி வக்கும்
பாகமாஞ் செவிதாழு மிரைதின் னாது
பண்புடைய வாயில்நீர் வடியுந் தானே. (27)



## இதுவுமது.




வடிவதற்கு வசம்புபலங் காலி னோடு
மாபரங்கிப் பட்டையரைப் பலமுங் கூட்டி
துடியான வெண்பூண்டு பலமி ரண்டு
சொல்லியதோர் மிளகுகாற் படியுஞ்சேர்த்து
கொடியமழுக் காரைத்தோல் மாங்காய் போல
கூட்டியரைத் தேதும்பைச் சாறுமொரு படியில்
குடிக்கவதைக் கலக்கிவிட்டு வெந்நீர் காட்டி
குணமாக விலாவிரண்டிற் சூடு போடே. (28)

## இதுவுமது.

போடவே குணமாகும் வேறுவித மாகப்
பொருந்தவரு மீரல்முட்டி நோயின் செய்கை
கோடவே தீவனமும் அரைவாய் மேயும்
குனிந்ததலை நிமிராது முன்னங்கா லால்
சாடவே பூப்பரண்டிப் பரண்டி நிற்கும்
சாந்தமுற மிளகுவெள் ளுள்ளியிரு வகைக்கு
நாடவே பலமொன்றுங் குப்பை மேனி
நற்கையி னாற்பிடியொன் றதனிற் சேர்த்தே. (29)

## தடியீரல்முட்டிநோய்.



சேர்த்தரைத்தே யிளவெந்நீர் தனிற்க லக்கிச்
சேயனே கொடுத்துமுன்காற் சூடு போட
நேர்த்திதடி யீரல்முட்டி நோயின் செய்கை
நிலமதனில் நெஞ்சாலே நகர்ந்து செல்லும்
பார்த்திடவே தலைகுலுக்கு மோங்கா ரிக்கும்
பண்பாகு மிலுப்பபறப்பு மெலுமிச் சங்காய்
ஆர்த்திட்ட மளவரைத்துப் பசுவின் வெண்ணெய்
அதுமாங்கா யளவாகக் கூட்டி யூட்டே. (30)


## திரட்டியீரல் முட்டிநோய்.




ஊட்டியபின் னவுரியிலை சிற்றவுரி யிலையும்
உத்தமனே சுக்கதுவுஞ் சேர்த்த ரைத்து
தேட்டமாய் நெஞ்சதனிற் பூசிமுன் கால்
திடமகாகச் சூடிடவே நோயுந் தீரும்

தாட்டிகமாய்த் திரட்டீரல் முட்டி நோயின்
தன்மைமுன்னங் காலிரண்டு மாறி மாறி
நாட்டிநிற்குஞ் சிலசமய மாற்ற முண்டாம்
நற்றலையைக் கீழ்நோக்கிப் பார்க்கும் பாரே. (31)

## இதுவுமது.

பார்ப்பதுடன் தீனியரை வாயாய் மேயும்

பரிகாரந் தானதற்கு வெள்ளைப் பூண்டு
சேர்ப்பதுவும் பலமொன்று மிளகுபல மரையாம்
திகழ்குப்பை மேனிகையாந் தகரையொரு பிடியாம்
ஓர்ப்பாகத் தானரைத்துக் காடியொரு படியில்
உறக்கலக்கி யூட்டியிரு விலாவிற் சூடு
நேர்ப்பாக யிட்டுமே கந்த வேளை
நெஞ்சகத்திற் போற்றிசெய்யப் பிணியும் போமே. (32)

## குடல்முட்டி நோய்.

பிணியகலுங் குடல்முட்டி நோயின் செய்கை
பிசகாது செவிதாழு முகமும் வீங்கும்
அணியான நடைதளரும் நாக்கும் வாயும்

அழன்றுதிரம் போல்வடியு மகலு தற்கு
பணிமுருக்கம் பூவதுவும் பலந்தான் பத்து
பண்பான மாதளையின் பிஞ்சுபல மேழு
துணிவாக வரைத்துச்சா ராயமொரு படியில்
சுகமுறநீ கொடுத்துவிலா வதனிற் சூடே. (33)

## குரல்முட்டி நோய்.

சூடிடுவாய் குரல்முட்டி நோயின் தன்மை
சொல்லக்கேள் முகம்வீங்குஞ் செவியுந் தாழும்
நாடிடுவா யதிலிரத்தம் வடியும் பாரு
நடையதுவுந் தள்ளாடுந் தீரு தற்கு
தேடிடுவாய் மாதளம்பூப் பலந்தான் பத்து
திகழும்மா தளம்பிஞ்சு பலம தஞ்சு
பாடிடுவாய் முருக்கம்பூப் பலந்தான் பத்து
பண்பான கிராம்பதுவும் பலமி ரண்டே. (34)

## வீரமுட்டி நோய்.

பலமான திவையெல்லாஞ் சேர்த்த ரைத்து
பாங்குசா ராயமரைப் படியா மத்தில்
கலக்கியே கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
கருத்தாக யிடதுவிலாச் சூடு போட
நலமாகும் வீரமுட்டி நோயின் செய்கை
நவிலுவேன் திகைத்துநெஞ் சால்ந டக்கும்
விலகலவங் கப்பட்டை யேல மோடு
விண்டவிரு வகைக்குக்காற் பலம தாமே. (35)

## இதுவுமது.

ஆமப்பா வதிமதூரப் பட்டையரைப் பலந்தான்
அத்துடனே வோமங்காற் படியுங் கூட்டி
தாமப்பா வரைத்துக்கா டியிற்க லக்கித்
தானூட்டச் சுகமாகு மின்ன மொன்று
ஏமப்பா விலுப்பைப்பிண் ணாக்கு தன்னை
எலுமிச்சங் காயளவ தரைத்துத் தண்ணீர்
நாமப்பா கலக்கியிட் டிருவி லாவில்
நலமாய்ச்சூ டிட்டிடவே சாந்த மாமே. (36)

## கிராமுட்டி நோய்.

சாந்தமாங் கிராமுட்டி நோயின் செய்கை
சாற்றுவேன் வயிறூதுந் திகைத்து நிற்கும்
மாந்தலதி மதூரமைந் தரைய தாகும்
மாலவங்கப் பட்டையரைப் பலம தோடு
காந்தியுள ஓமமுந்தான் படிய ரைக்கால்
காடிவிட் டரைத்துக்கா டியிற்க லக்கி
போந்தவே புகட்டியிட விலாவிற் சூடு
போட்டிடவே நன்றாகும் புவியிற் றானே. (37)

## சுழத்தி நோய்.


புவியதனிற் சுழத்தியென்ற நோயின் செய்கை
புகலுவே னரைவாயா யிரையெ டுக்கும்
*துவிதக்கண் நாட்சென்றால் தெரியா தப்பா
தோன்றுமக் கண்வாக்கிற் சுழலும் பாரு

* துவிதக்கண்—இரண்டுகண்.

†சவியில்லா தேசாய்ந்து நடக்குந் தீர
சரியான அபின்கஞ்சா மருளூ மத்தை
*நவியமாஞ் சுடலையா வரையின் வித்து
நால்வகையுஞ் சேர்ந்துகாற் பலம தாமே. (38)

## இதுவுமது.

பலமான சுழல்வண்டு முப்ப தப்பா
பகர்ந்தசரக் கெல்லாம்நன் றாய ரைத்து
நலமான பனங்கள்ளுப் படியு மொன்று
நாட்டுச்சா ராயமரைப் படியுஞ் சேர்த்து
கலந்தூட்டி மாலையிலே வெந்நீர் காட்டி
கணக்காகக் கால்முகத்துஞ் சூடு போட



விலகிவிடு மிந்நோயு மின்னோர் செய்கை
வீங்கித்தொப் புளைச்சுற்றி யிருக்கும் பாரே. (39)

## இதுவுமது.

பாரப்பா சுழன்றுவரு மதவுந் தீர
பகர்ந்திடுநெல் லிப்பருப்பு பலம தொன்று
நேரப்பா திப்பிலிகாற் பலத்தி னோடு
நிகரில்லா தோமமரைப் பலமுங் கூட
சீரப்பா கடுக்காயு மேழு சேர்த்துத்
திடமான யானைக்கொம் பாலி டித்து
சேரப்பா யிரண்டுபடி பசுவின் பாலில்
செம்மையாய்க் கலக்கிநீ யூட்டு வாயே. (40)

## இதுவுமது.

ஊட்டியதன் பின்பாக வெந்நீர் காட்டி
உற்றதோர் முதுகிற்சூ டிடவும் நன்றாம்




தாட்டிகமா மின்னமொரு சுழத்தி நோயுந்
தான்வருகு மதன்செய்கை செக்கைப் போல
கோட்டியெனச் சுற்றிவருஞ் செவியுந் தாழுங்
குணமின்றி மண்போலச் சாணம் போடும்
மேட்டிமைசே ரிந்நோயுந் தீரு தற்கு
வேல்முருக னிணையடியைப் போற்றி செய்தே. (41)

† சவி—அழகு. * நவியம்—புதுமை.

### இதுவுமது.

செய்யவெளிச் சிப்பிசினுஞ் சுழலின் வண்டு
செப்பும்வகைக் குப்பலங்கால் சுக்குச் சோறு
துய்யநாய்க் கடுகுசீ ரகம்வ கைக்கு
துலங்கவொரு கைநிறைய தாகப் போட்டு
நய்யவிதை யரைத்தெடுத்து வைத்துக் கொண்டு
நல்லநொச்சி யிலைகுழித்தா மரையிலையுங் கூட
பய்யமா விலிங்கயிலைத் தலைசுருளி யிலையும்
பண்புவள் ளிக்கொடியு மிவற்றின் சாறே. (42)


### இதுவுமது.

சாறதுவும் வகைக்குக்காற் படிய தாகத்
தானெடுத்துக் காடியொரு படியுஞ் சேர்த்து
ஆறவே முன்னரைத்த மருந்துங் கூட்டி
அன்பாகக் கொடுப்பதுடன் விலாவிற் சூடு

*பாறலுக்கு யிட்டிடவே சுகமுண் டாகும்
பார்த்திடுவா யிந்நோயும் வேற தாகச்
சீறவரு மதன்செய்கை கண்சி வக்குஞ்
செவ்வாயில் வெண்ணுரையாய்த் தள்ளும் பாரே. (43)

### இதுவுமது.

தள்ளவே சுழற்சியதாய்ச் சுழன்றி ருக்குந்
தானகலப் பசுவின்கோ மியத்தி னோடு
*வெள்ளசத்தின் மூத்திரமும் வகைக்கு நாழி
விரும்பியதன் புழுக்கைபலங் காலுங் கூட்டி
உள்ளபச்சை நெற்றவிடு படியி ரண்டு
உற்றநா யுருவியவரைப் பலமுஞ் சேர்த்துக்
கள்ளமிலா தரைத்துமுன் கோமி யத்தில்
கலக்கியே கொடுத்துப்பின் சீந்தித் தண்டே. (44)

### இதுவுமது.

தண்டதனை யிடித்துச்சா றெடுத்து மாட்டின்
சரீரத்திற் றவாலையிட்டு வலவி லாவில்

அண்டச்சூ டிடநன்றும் நோயும் வேறு
அதன்செய்கை வெண்நிறமாய்ச் சாணம் போடும்

* பாறல்—ஒருது. * வெள்ளசம்—வெள்ளாடு.

மண்டனிலே வட்டமதாய்ச் சுற்றி நிற்கும்
வாயதிலே நீர்வடியுந் தீரு தற்கு
வண்டபேய்ப் பீர்க்கங்காய் காய்ந்த கூடு
வளமாங்கொல் லங்கோவைக் கிழங்கி னேடே. (45)


## இதுவுமது.

ஓடச்சீந் திக்கிழங்கும் வகைவ கைக்கு
வொருமாங்கா யளவரைத்துப் படிவெந் நீரில்
சாடநீ கலக்கியிட்டு வெந்நீர் காட்டச்
சார்ந்தபிணி தீர்ந்துவிடு மின்ன மொன்று
நாடவரு மதன்செய்கை மூக்கு வீங்கும்
நடித்தாப்போற் சுழன்றுமே சுழன்று நிற்கும்
சூடவது தீருதற்கு இரண்டு கொம்பைச்
சுற்றிச்சூ டிட்டிடவே சுகம தாமே. (46)

## இதுவுமது.

ஆமப்பா யிந்நோயின் னெருவி தந்தான்
அடுக்குமதன் செய்கைக்கண் பீளை சாடும்
வேமப்பா நடக்காது சுழன்றி ருக்கும்
விலகுதற்குக் கொன்றையிலைப் பிடியி ரண்டு
தாமப்பா வசம்புகாற் பலம ரைத்துத்
தனியான பச்சைமஞ்ச ளிடித்துச் சாறு
வாமப்பா வுழக்குமொரு படியாங் கஞ்சி
வாகாக கலக்கியிட் டிடநோய் போமே. (47)

## இதுவுமது.

நோயகல நாய்க்கொட்டா னிலைய ரைத்து
நுவலுங்கா டியிற்கலக்கிக் கொடுத்துப் பின்னும்
நேயமுன்சொல் நாய்க்கொட்டா னிலையை மோரில்
நீயிட்டுக் காய்ச்சியதைக் குடிக்கச் செய்து
சேயனே விலாவதனிற் சூடு போட்டுச்
செந்திலம் பதிவளருங் கந்த நாதன்

தூயமல ரிணையடியைத் துதியுஞ் செய்தால்
துற்பிணியும் நீங்கிநற் சுகமுண் டாமே. (48)


## சுழல்வணங்கி நோய்.

உண்டாகுஞ் சுழல்வணங்கி நோயின் செய்கை
உற்றதொரு தொப்புளதைச் சுற்றி வீங்கும்
அண்டாம லகலவிந் துப்புக் காயம்
அரைத்துசம னிடையாகப் பசுவின் பாலில்
கொண்டாடிக் கலக்கியிட் டானைக் கொம்பைக்
கூசாம லுரைத்துவீக் கத்திற் பூசித்
தொண்டாக விலாவிற்சூ டிடவே தீருஞ்
சொல்லிடுவே னின்னமொரு வகையுந் தானே. (49)



## இதுவுமது.

தானப்பா சுழல்வணங்கி நோயின் செய்கை
தன்வாலைத் தான்சுழற்றிச் சுழற்றி வீசும்
கோனப்பா அதற்குத்திப் பிலிக டுக்காய்
குற்றமிலா தோமம்வகைக் கோர்ப லந்தான்
வேனப்பா பொடிசெய்து பசுவின் நெய்யில்
வேண்டியே நாள்மூன்று கொடுத்துப் பின்பு
ஆனப்பா யிடதுவிலா வதனிற் சூடு
அன்பாக யிட்டிடநோ யகலும் பாரே. (50)



## சுழட்டி நோய்.

பார்க்கவே சுழட்டியென்ற நோயின் தன்மை
பலகாலும் நீருண்ணு தருவ ருத்து
தீர்க்கமாய் மனங்கொண்டு புல்மே யாது
செய்கையறிந் திம்மருந்தைக் கொடுக்க வேண்டும்
மூர்க்கமாய் முத்தினவா வரையின் வேரை
முன்னுளிற் றட்டிவைத்து மறுநா டன்னில்
சேர்க்கசம நல்லெண்ணெ யிளநீர் கூட்டி
தெளிவாகக் கலக்கிநீ புகட்டு வாயே. (51)

## சுள்ளை நோய்.


வாயப்பா *ஆத்தாத்தா ளென்று சொல்லி
வலதுவிலா வதனிற்சூ டிடநன் றாகும்
தூயப்பா சுள்ளையென்ற நோயின் செய்கை
துடிதுடித்தே யோட்டமா யோடி யோடிப்



* ஆத்தாத்தா—ஆத்தா ஆத்தா.

போயப்பா திரியுங்காற் சுழற்றி வைக்கும்
பொருந்துபல் லைக்கடிக்குந் தீரு தற்கு
நேயப்பா கருடனென்ற கொடியைச் சுட்டு
நீர்விட்டுக் குளப்பிமேற் பூச நன்றே. (52)

## அழல்வாரி நோய்.



பூசியே குறுக்கதனிற் சூடு போட
போமப்பா அழல்வாரி நோயின் செய்கை
ஊசிகொண்டு குத்தவரு மிரத்தம் போல
உடம்பெங்குங் கசிவுறுங்கண் பீளை சாடும்
கூசிப்பல் லைக்கடிக்குஞ் செவியுந் தாழும்
குணமாக வரைப்படிநல் லெண்ணெ யோடு
வாசிபெறச் சந்தனமுங் கொடுப்பைச் சாறும்
வகைக்குமொரு படியாகச் சேக ரித்தே. (53)

## இதுவுமது.

சேகரிக்கக் காற்படியா *மணங்கின் பாலுந்
திரட்டியே கலக்கியூட் டிடவு மன்றேல்
தாகமுட னிரண்டுபல மிளக ரைத்துத்
தான்காடி யிற்கலக்கி நாள்மூன் றூட்டச்
சோகமெலாம் நீங்கிவிடு மிந்நோய் வேறு
சொல்லவதன் செய்கைகண் பீளை சாடும்
பாகமிலா திரத்தம்போல் நீர்வி டுக்கும்
பற்கடிக்குஞ் செவிதாழுந் தீரு தற்கே. (54)

## இதுவுமது.

தீர்ந்திடவே மாங்கொட்டைப் பருப்பி னோடு
திகழுமா தளம்பிஞ்சு விளாவின் பிஞ்சு
சார்ந்தமாந் தளிராலம் விழுதுங் கூட்டித்
தானரைத்தோர் படியாவின் பாற்க லக்கி
ஓர்ந்தூட்ட நலமாமீ தன்றிக் கேளு
உகந்ததென்னம் பூவிரிதா னென்று மப்பா
ஆர்ந்தநெல்லிக் காயிரண்டு படியுஞ் சேர்த்து
அரைத்துக்கா டியிற்கலக்கிக் கொடுக்க நன்றே. (55)

* அணங்கு—பெண்.

### இதுவுமது.

நன்றாகு மின்னமொரு முறையைக் கேளு
நற்சாதிக் காயுடனே மாச்சக் காயும்
குன்றாமல் வகைக்கிரண்டு காய தோடு
கூட்டுசா திப்பத்ரி கிராம்பு தானும்
ஒன்றாகாப் பலந்தனியாய் மூன்று வீசம்
உற்றசீ ரகமிளகு லவங்கப் பட்டை
தொன்றாக தனித்தனியே யரைப்ப லந்தான்
சொலற்கரிய வெற்றிலையும் பல்மி ரண்டே. (56)

### இதுவுமது.

பலமாகு மிவையெல்லா மரைத்து நன்றாய்
பசுவெண்ணெய் மாங்காயி னளவ தன்னில்
நலமாகக் குழப்பியே கொடுத்துப் பின்பு
நாடிவெந்நீர் படியெட்டில் மிளகதரைப் பலமும்
சலனமின்றி பொடிசெய்துப் போட்டுக் காட்டத்
தானகலு மிப்பிணியு மிதுவு மன்றி
விலகப்பூ லாவிலையும் பிடிதா னைந்து
வில்லுமா தளையின்பிஞ் சதுவும் பத்தே. (57)

### இதுவுமது.

பத்தென்ற பிஞ்சரைத்துத் தயிர்நாழி தன்னில்
பண்பாகக் கலக்கியூட் டிடவே தீரும்
நத்திவரு மழல்வாரி நோய்மற் றொன்று
நாடுமதன் தன்மைகோற் புறமும் வீங்கும்
சித்திரத்தம் போலநீர் விடுக்குந் தீர
தனித்தனியாம் வசம்போமங் காற்ப லந்தான்
அத்திக்கா யரைப்படியாம் பருத்திக் காயும்
அதிற்பாதி சேர்த்துநன்றா யரைத்தி டாயே. (58)

### இதுவுமது.

அரைத்தாவின் பால்நாழி கலக்கி யூட்டி
அதன்பின்பா டாதோடை யிலைசங்கி னிலையும்
விரைவாய்ச்சா றெடுத்ததனிற் பெருங்கா யத்தை
மிகப்பொடித்துப் போட்டுமே குழப்பிக் கோலில்

நிரையாகப் பூசிடவே வீக்கம் வற்றும்
நினைவாக மலைதோறும் வாழுங் கந்தன்
மரைமலரின் பாதமதைப் போற்றி செய்து
வணங்கியடி வயிற்றிற்கூ டிடநன் றாமே. (59)

## ஆள்வாரி நோய்.

நன்றாகு மாள்வாரி நோயின் செய்கை
நாடியே யாணிடத்தி லிரத்தம் வீழும்
கன்றுக்கண் ணீர்வடியும் பீளை சாடும்
காதுசாய்ந் திருக்கும்பல் லைக்க டிக்கும்
தொன்றாக நாழிநல் லெண்ணெ யோடு
சுத்தசந் தனமுமொரு பிடியும் போட்டு
ஒன்றாகப் பேய்க்குமட்டிக் காயின் சாறும்
உழக்குடனே குயப்பாலு முழக்கு விட்டே. (60)

## இதுவுமது.

விட்டுமே கலக்கியூட் டிடநன் றாகும்
விளம்புவே னிதற்கின்னோர் வகைய தப்பா
கட்டுமஞ் சிட்டிசெருப் படியி னோடு
கண்டங்கத் திரியிலையும் முசுமு சுக்கை
ஓட்டுபிரண் டைத்தண்டு தனிய தாக
உற்றபல மைந்தினொடு துத்தமொரு கழஞ்சு
குட்டுதுரு சொருகழஞ்சு கூடப் போட்டு
குணமாக முப்படிச்சா றிடித்து வாங்கே. (61)

## இதுவுமது.

வாங்கியே கொடுத்திடநன் றாகும் வேறு
வகைசொல்வேன் பத்துநாட் சென்ற பின்பு
சோங்குடைய தவளையும்நண் டுடும்பு பன்றி
சொன்னஜெந்துக் களினெய்யும் வகைவ கைக்கு
பாங்காகக் காற்படிவீ தந்தான் சேர்த்து
பாண்டத்தி லிட்டுவெளவ் வாலைப் போட்டு
தேங்கவே குழியில்வைத் தோடு மூடிச்
சிறக்கவதன் மேலாக மண்ணைத் தள்ளே. (62)

## இதுவுமது.

தள்ளியொரு மண்டலந்தான் சென்ற பின்பு
தானெடுத்தே யொருபடிநெய் யதிலே விட்டு
கள்ளமிலா தெட்டுநா ளிரண்டு போது
கணக்காகக் கொடுத்துவர வுதிர்ந்த ரோமம்
உள்ளபடி முளைக்குமிதை யுணர்ந்து பாரு
உத்தமனே யிருபுறமுஞ் சூடு போட
வள்ளல்குரு வடிவேலன் பாதம் போற்றி
வழுத்துவேன் புலத்தியனே மாநி லத்தே. (63)

## நனவாரி நோய்.

நிலமதனில் நனவாரி நோயின் செய்கை
நிகழ்த்தவே யுடம்பெங்குங் குளிர்ந்தி ருக்கும்
பலத்தகற் றுழைச்சோ றதனைப் போல
பண்பான வாயதனில் வடியும் பாரு
*அலத்தலென வயிறாதும் நடையுங் குன்றும்
அதுவிலகச் சன்னிநா யகம்வ சம்பு
கலத்தலன்றி வகைக்குமரைப் பலம தாகக்
கண்டிடுவா யத்துடனே வெள்ளைப் பூண்டே. (64)

## நன்வாரி நோய்.

பூண்டிலுப்பை நிம்பைப்பிண் ணாக்குதனித் தனியே
பொருந்துபலங் காலாந்தை வேளைச் சாறு
தூண்டுதும்பைச் சாறுமொரு படிவ கைக்குச்
சொல்மருந்தைச் சேர்த்தரைத்துக் கலக்கி யூட்டி
வேண்டுமிரு விலாவிலுஞ்சூ டிடவே தீரும்
விளம்பக்கேள் நன்வாரி நோயின் செய்கை
ஈண்டிரத்தம் போலாக நீர்வி டுக்கும்
இருதயமும் வீங்குமது தீரு தற்கே. (65)

## இதுவுமது.

தீரவோ ரிலையின்தா மரைவிஷ்ணு கிரந்தி
திகழவிரு சமூலமதுஞ் சமம தாக
சேரவே யாவின்மோர் விட்டி டித்து
திட்டமொரு வேளைபடிச் சாறு வீதம்

---

* அலத்தல்—துன்புறல்.

நேரவே மூன்றுநாட் கொடுத்துப் பின்பு
நினைவாக யிடதுவிலாச் சூடு போடத்
தூரம்போந் தொல்லுலகி லிந்த நோயுஞ்
சொல்லக்கே ளென்மைந்தா பிணிமற் றென்றே. (66)

## நெஞ்சிடுக்கி நோய். முன்காலிடுக்கி நோய்.

மைந்தனே நெஞ்சிடுக்கி நோயின் வண்மை
வயிறதுவும் வீங்கிக்கால் கூட்டி நிற்கும்
முந்தவதன் வாயில்நீர் வடியுந் தீர
மொழிகுவேன் வீழியிலை யரைத்து நாழி
தொந்தமா யெருமைமோ ரதிற்க லக்கிச்
சுகமாகக் கொடுத்திடவே சாந்த மாகும்
பந்தமுன்னங் காலிடுக்கி நிற்கும் நோய்க்கு
பகரும்வெந் தயத்துடனே மிளகுசீ ரகமே. (67)

## உலர்த்தி நோய்.

சீரப்பா விகுளியிலை சமம தாகச்
சிறக்கச்சேர்த் தரைத்துக்கா டியிற்க லக்கி
நேரப்பா வூட்டிடநோய் நிவர்த்தி யாகும்
நிகழ்த்துவே னுலர்த்தியென்ற நோயின் வண்மை
பாரப்பா நாட்குநா ளுடலம் வற்றிப்
பாவையாய்ப் போகுமது தீரு தற்கு
தேரப்பா தசத்தோலா வேப்பம் பட்டை
திகழவொரு படித்தண்ணீ ரதனிற் போட்டே. (68)

## இதுவுமது.

போட்டுமே காய்ச்சியரைப் படிய தாக்கி
பொருந்தைந்து தோலாவுப் பதனைச் சேர்த்து
தேட்டமாய்க் கொடுத்திடுவா யின்ன மொன்று
செப்பகத்திச் சாறுபடி யரையு மூட்டு
மீட்டவே வசம்புபல மரைய ரைத்து
மிதிபாக விலையுமணத் தக்காளி யிலையும்
நாட்டவகைக் கரைப்படிச்சா றெடுத்துச் சேர்த்து
நன்றாகக் கலக்கியதைக் கொடுக்க லாமே. (69)


## எருவுலர்த்தி நோய்.

ஆமப்பா வதுவன்றிக் கஞ்சாங் கோரை
அதனிலையுஞ் சாறுபடி யரையெ டுத்து
வாமப்பா கொடுத்திடுவா யின்ன மொன்று
வழுத்துவிளக் கெண்ணெய்ப்படி காவி னோடு
தாமப்பா பேய்க்குமட்டிச் சாறுபடி காலுந்
தான்சேர்த்துக் கொடுத்திடவே சாந்த மாகும்
நேமப்பா யெருவுலர்த்தி நோயின் தன்மை
நிகழ்த்துவேன் றீவனந்தின் னாது பாரே. (70)

## இதுவுமது.

தின்னவே வயிறாதுஞ் செவியுந் தாழும்
திடமின்றிச் சாணந்தா னுலர்ந்து வீழும்
குன்னவே வுடம்பெங்கு மயிர்சி லிர்க்குங்
கூறதற்குக் களிப்பாக்குப் பலம தொன்று
நன்னவே சர்க்கரையு மொருப லந்தான்
நற்கடுக்கா யுடைத்ததோ டிருப தாகும்
உன்னவே கற்றாழஞ் சோறுமரைப் படியாம்
உற்றபழம் புளியதுவு மாங்காயி னளவே. (71)

## ஈரல் உலர்த்தி நோய்.



அளவனைத்து மொருபடிகா டியிற் கலக்கி
அன்பாகக் கொடுத்திடது விலாவிற் சூடு
வளமாகப் போட்டிடவே நிவர்த்தி யாகும்
வருமீர லுலர்த்திநோ யதனின் வண்மை
தளமாகத் தீவனந்தின் னாது தின்றால்
தானதுவுஞ் செமியாமற் சாணம் போடும்
உளவாகக் காற்றுந்தான் பரியுந் தீர
உரைத்திடுவே னதிமதுரம் பலமி ரண்டே. (72)

## விருட்டி நோய்.

இரண்டுடனே யேலமது மரைப்ப லந்தான்
இயல்மிளகு வெள்ளறுகு தைவேளை வகைக்கு
திரண்டதொரு மாங்காயி னளவ ரைத்து
செப்புமுன் னளவுபசும் வெண்ணெய் கூட்டி

மிரண்டிடா தாவின்பால் நாழி தன்னில்
விருப்பமாய்க் கலக்கித்தந் திடநோய் தீரும்
முரண்டிவரும் விருட்டியென்ற நோயின் செய்கை
மொழியவதன் றேகமதுந் தடிக்கும் பாரே. (73)

## இதுவுமது.

பார்க்கவதன் கழுத்ததனைக் கட்டி வீங்கும்
பாங்கின்றி நாசியுந்தா னடைத்து மூச்சு
தீர்க்கமாய் விடாதபடி திகைத்து நிற்கும்
திடமாக மயிர்சிலிர்க்குந் தீரு தற்கு
மார்க்கமாந் தைவேளை முருங்கையிலை யோடு
வல்லசிறு தும்பைநொச்சிக் கொழுந்தி ருள்ளி
சேர்க்கவகைக் கொருபிடியா யெடுத்த ரைத்துச்
சிவசிவா காடியிரு படியி லூட்டே. (74)

## இதுவுமது.

ஊட்டநன்று மின்னமொரு வகையைச் சொல்வேன்
உற்றகாற் பலமிலுப்பை யறப்ப ரைத்து
ஆட்டமுளக் குதிரைமூத் திரமு முக்கு
அத்தோடு பன்றிநெய்ப் படிகால் சேர்த்து
தேட்டமுடன் கலக்கியிட் டிடவே தீரும்
திடநசிய மிலுப்பைப்பிண் ணாக்குக் கொஞ்சம்
சேட்டபேய்ப் பீர்க்கிசிறு தும்பைச் சாறு
சேர்த்துமே பன்றிநெ யொன்றாய்க் கூட்டே. (75)

## இதுவும்மது.

ஒன்றாகக் கலக்கியே வடியுங் கட்டி
உற்றநா சியிற்பிழிவா யதன்பின் பாக
நன்றாம்வெந் நீர்காட்டிப் பன்றி விட்டை
நற்பாக்கி னளவுபெருங் காயத் தோடு
பொன்றியதோர் மாட்டின்முட் டெலும்புஞ் சேர்த்து
பொடிசெய்து புகைகாட்டக் குணம தாகும்
வென்றியாம் வேறுவகை விருட்டி நோயின்
விபரங்கேள் வாயில்நீர் வடியுந் தானே. (76)

### இதுவுமது.

தானான மயிர்சிலிர்க்குங் குருகு ருக்குந்
தன்னுடி தான்வீங்கும் நுதன்ம டிக்கும்
தேனான தீனிதின்ன துடலுங் குன்னித்
திகரமெடுத் தேயுழலுந் தீரு தற்கு
வேனான நாயுருவி பிடிய ரைத்து
விளக்குநெற் றவிடுபடி யொன்ற தோடு
ஆனான குதிரைநீர்ப் படிய தொன்று
அத்தோடு பன்றிநெய் படிகாற் கூட்டே. (77)

### இதுவுமது.

கூட்டியே பிசைந்துருட்டிக் கொடுத்துப் பின்பு
குணமாக வெந்நீரைக் குடிக்கச் செய்து
வாட்டியே தொண்டை நுதற் சூடு போட
வளமாமிந் நோயதுவும் வேறுவ கையாக
நாட்டிலே வருகுமதன் வண்மை சொல்வேன்
நற்றெண்டை யைக்கட்டி வீக்க முண்டாம்
தாட்டியாய் வயிறாதுங் கஞ்சி வக்கும்
ததும்பிவாய் நீர்வடியுந் தீரு தற்கே. (78)

### இதுவுமது.

தீரவே மிளகுசுக்கு வெள்ளைப் பூண்டு
திரமாமு வகைக்குமரைப் பலம தாகும்
வாரவே கரியசீ ரகம்வ சம்பு
வகைக்குநிறை காற்பலமீ ருள்ளி தானும்
சேரவிரு பலமைந்து எருக்கிலையின் பழுப்பு
தேடுபேய்ப் பீர்க்கினிலை யோடுசங் கிலையும்
நேரவே மருஞ்சூரை வேரின் பட்டை
நிகழ்த்திடுவேன் மழுக்காரைத் தொலிவ கைக்கே. (79)

### இதுவுமது.

வகைக்குமாங் காயளவா யரைத்துத் தானும்
வளமான காடிபடி யிரண்டிற் போட்டு
திகைக்காமற் கலக்கியே யூட்டத் தீரும்
திறமாக யின்னமொரு வகையைச் சொல்வேன்

மிகைவசம்புந் திப்பிலியும் வகைப்ப லங்கால்
மிளகுபல மரைசுக்குப் பலம தொன்று
துகையான பெருங்காய மூன்று வீசம்
தூ*வேளை *மேனிவகைப் பிடிய தொன்றே. (80)

## இதுவுமது.

பிடியுடனே பன்றிரத்தஞ் சிறிது சேர்த்துப்
பின்பிடித்துக் கவளமதாய் வாயி லூட்டி
குடிக்கவெந் நீர்காட்டி யிடவி லாவிற்
குணமாகச் சூடிடவே சாந்த மாகும்
படியதனி லின்னமொரு வகையைச் சொல்வேன்
பாங்குபேய்ப் பீர்க்கிலையுஞ் சங்குகிழங் கிலையும்
துடியாஞ்சீ ரகமரைத்துக் காடி கூட்டி
சுருக்காகக் கொடுத்திடவே சுகம தாமே. (81)

## பெருவிரட்டி நோய்.

ஆமப்பா பெருவிரட்டி நோயின் செய்கை
அதன்தலையைக் குப்புற்றுக் கொண்டு நிற்கும்
தாமப்பா கண்டுங்கும் பீளை சாடும்
சரீரமதுங் குன்னிக்கொண் டிருக்கும் வாயில்
தீமப்பா நீர்வடியுந் தொண்டை கட்டித்
திகரெடுக்குங் கறட்டென்று சத்தங் கேட்கும்
வாமப்பா நாநீட்டி யிளைக்கும் நாய்போல்
வயிறாதுங் கண்டவுடன் மருந்து மீயே. (82)

## இதுவுமது.

ஈயவே வெள்ளுள்ளி யெலிப்பு ழுக்கை
இசைமிளகு சுக்கோமங் கரியசீ ரகமும்
தூயபெருங் காயமுடன் புகையி னூரல்
சொல்வசம்புந் தனித்தனியே பலமுங் காலாம்
வாயவமுக் கிராவேரும் பலம தொன்று
வழுத்துவெளிச் சிப்பிசினு மரைப்ப லந்தான்
நேயமா மரிதாரம் விராகனிடை யொன்றும்
நிகழ்*வேளை *மேனியிலைப் பிடியி ரண்டே. (83)

*வேளை-நைவேளை. *மேனி—குப்பைமேனி.

### இதுவுமது.

இரண்டுடனே பேய்ப்பீர்க்கின் சாறுபடி காலும்
இசைந்தகற் றாழஞ்சோ றதுவுமரைப் படியாம்
திரண்டபசு வெண்ணெயுமாங் காயைப் போல
திறமாகச் சேர்த்தரைத்துக் கொடுக்க நன்றாம்
மிரண்டிடா தின்னமொரு வகையுஞ் சொல்வேன்
மிக்கவுயர் மலையில்வாழ் தாழங் காயை
சுரண்டிவில்லை யாயறுத்துக் காயப் போட்டுத்
தூளாக்கி யரைப்படியா யளந்து கொண்டே. (84)

### இதுவுமது.

கொண்டுநற் சுக்கதுவும் பலம தொன்று
கூசாது மிளகுபல மரையுஞ் சேர்த்து
பண்டுதிப் பிலிப்பலங்கா லிந்த மூன்றை
பதத்துடனே யிளவருப்பாய் வருத்துப் பின்பு
துண்டுபொடித் தெலிப்புழுக்கை சிரங்கை சேர்த்து
துடரும்பேய் பீர்க்கின்காய்ச் சாறுமொரு படியில்
கண்டுரைத்த தெல்லாமொன் றாய்க்கு ழப்பி
கணக்காகக் கொடுக்கநன் றாகு மென்னே. (85)

### இதுவுமது.

என்னவே யின்னமொரு மருந்து சொல்வேன்
ஏற்றதேங் காயுடைத்துச் சில்ல தாக்கி
உன்னதமா யுலர்ந்தபின் மாவு செய்து
உற்றபேய்ப் பீர்க்கின்சா றதனை விட்டு
நின்னவே பிசைந்துவெள் ளுள்ளி சுக்கு
நற்பஞ்சு கொளுஞ்சியிலை யெலிப்பு ழுக்கை
பின்னமிலா தவையெல்லாஞ் சேர்த்த ரைத்த
பிறகுகழு நீறதனிற் கலக்கி யூட்டே. (86)

### மகாவிருட்டிநோய்.

ஊட்டியே யிடதுவிலாச் சூடு போட
உற்றநோ யகன்றுமிக மேன்மை யுண்டாம்
நாட்டிலே மகாவிருட்டி நோயின் செய்கை
நன்வாயில் நீர்வடியு மண்டை வீங்கும்

வாட்டியே தொண்டைக்குள் திரண்ட டைக்கும்
வயிறூது மயிர்சிலிர்க்குந் தீரு தற்கு
தாட்டிகமாய்த் தாழையின்கா யதனைச் சீவி
தானிடித்துச் சாறுபடி காலெ டுத்தே. (87)

## இதுவுமது.

எடுத்துமே பேய்ப்பீர்க்கின் சாறு ழக்கு
எலிப்புழுக்கை யொருசிரங்கை சுக்குவெள் ளுள்ளி
அடுத்துமே வகையொன்றுக் கொருப லந்தான்
அதனுடனே கொளுஞ்சியிலைப் பிடியு மொன்று
கொடுத்திடவே யரைத்துச்சா றதிற்க லக்கி (88)
குணமாக யிடதுவிலாச் சூடு போட
தொடுத்திடுவேற் படையுடைய சுவாமி நாதன்
துணையதனு லெந்நாளுஞ் சுகம தாமே.

## கருநோய்.


ஆமப்பா கருநோயின் செய்கை சொல்வேன்
அம்மாடும் வெயிலதனில் நின்றி டாது
வாமப்பா யிடதுசெவி தாழ்ந்து நிற்கும்
வலப்புறஞ்சாய்ந் தேமேயுந் தண்ணீர் தன்னில்
தாமப்பா கிடக்குமது விலகு தற்கு
தான்பருத்திப் பிஞ்சுபடி யொன்றி னேடு
தேமப்பா அயிரைமீன் கழுவுந் தண்ணீர்
திகழுமொரு படியதுவுஞ் சாளாய் மீனே. (89)

## இதுவுமது.

மீனதனைத் தானரைத்துப் பனையின் கள்ளு
மிக்கபடி மூன்றதனிற் கலக்கி யூட்டு
தேனமுத மாகுமோர் மருந்தைக் கேளு
திடகடுக்காய் விரைநீக்கி யிடித்தெ டுத்து
ஊனமிலாக் காடியதிற் கலக்கி நன்றாய்
ஊட்டியே வலதுவிலாச் சூடு போட
ஞானபண் டிதனுன முருக வேளின்
நற்கருணை யாலிந்நோய் சாந்த மாமே. (90)

## சருநோய்.

சாந்தமுற வின்னமொரு வகையைச் சொல்வேன்
தநயனே காக்கையின்மேற் றோலியைப் போக்கி
சேந்தவெலும் பதைநீக்கி யரைத்து நன்றாய்
திறமாங்கா டியிற்கலக்கி யூட்டிப் பின்பு
பாந்தமா யிடதுவிலாச் சூடு போடப்
பண்பாகுஞ் சருநோயின் பான்மை கேளு
போந்தவெயி லதிற்றிரியு மமர்ந்து மேயும்
புகலுமுடம் பொடுங்கிநிற்குந் தீரு தற்கே. (91)




## நெருநோய்.

தீரவே பேய்க்குமட்டிக் காயி ரண்டு
திரமாயா வரைப்பட்டைப் பலம தொன்று
நேரவரைத் தொருபடிகா டியிற்க லக்கி
நினைவாகக் கொடுத்துவிலா வதனிற் சூடு
பாரவே யிட்டிடநோய் சாந்த மாகும்
பகருவேன் நெருநோயின் வண்மை தானும்
சாரவே வயிறிரையும் வாய்நீர் சிந்தும்
சாணம்நா றும்பீளை சாடுஞ் *சக்கே. (92)



## இதுவுமது.

சக்கதற்கு சுக்குபல மிரண்டி னோடு
சாருமெருக் கலைமொட்டுப் பிடியுஞ் சேர்த்து
சிக்கனமா யரைத்தாவின் பாற்க லக்கி
திடமாகக் கொடுத்துவிலாச் சூடு போட
தக்கவியா தியுந்தீரு மின்ன மொன்று
சாற்றுவேன் மலராத யெருக்க லம்பூ
புக்கைந்து பலமுமதிற் பாதிசீ ரகமும்
புகழாக வரைத்துக்கா டியிற்க லக்கே. (93)



## இதுவுமது.

கலக்கியே நாள்மூன்று கொடுத்துப் பின்பு
கவனமா யிடதுவிலாச் சூடு போட
விலக்கிடுந்தா னின்னமொரு வகையைச் சொல்வேன்
வெங்காயம் நான்குபலஞ் சீரகமோர் பலமாம்



*சக்கு—கண்.

துலக்கோமம் பலமொன்று புளியுமிரு பலமாம்
தொன்மைகா டிச்சோறு பிடியி ரண்டு
இலக்காகுங் குளியின்று மரையுமொரு பிடியாம்
இவையரைத்து மோரதனிற் கலக்கி யூட்டே. (94)

## இதுவுமது.

ஊட்டநன்றும் வேறுவகை யின்னுஞ் சொல்வேன்
ஒங்குமதி மதுரமொடு கரியசீ ரகமும்
நாட்டவே வகைக்கிரண்டு பலமா மத்தை
நன்றாக வேயரைத்துக் காடி தன்னில்
கூட்டியே கலக்கிநீ கொடுக்கத் தீரும்
கூறக்கேள் மற்றுமொரு வகைய தப்பா
தாட்டிகப் பழம்புளியுங் கரியசீ ரகமும்
தக்கக்கீழ் வாய்நெல்லி யோமந் தானே. (95)

## பருநோய்

தானாக வகைக்கு மொரு பலம ரைத்து
தக்ககா டியிற்கலக்கிக் கொடுக்கத் தீரும்
வேணுக வரும்பருநோய் விபாஞ் சொல்வேன்
விபரீத மாயுதிரம் விடுக்கும் பாரு
கூனுகக் குறுகியிரு காலும் வீங்குங்
குணமாகத் துளசியிலை தனைய ரைத்து
தேனுன காடியதிற் கலக்கி யூட்டத்
திருமினி வேறுமுறை செப்பு வேனே. (96)

## பெருநோய்.

செப்புவேன் சுக்குத்துண் டதுவு மூன்று
சேர்கிளுவைச் சாறுபடி காலி னேடு
ஒப்புபடி மோரதனி லூறப் போட்டு
ஊட்டிடவே சுகமாகும் பெருநோய் செய்கை
இப்புவிநோய் களிலிதுவு முதன்மை யாகும்
இந்தநோ யெந்தருதுக் களிலு முண்டாம்
வெப்புமின்றிக் குளிர்ந்துசெவி தாழ்ந் திருக்கும்
மிக்சோம்ப லாய்த்திகைக்கு மேலும் பாரே. (97)

## இதுவுமது.

பார்க்கமயிர் சிலிர்க்குந்தீ வனந்தின் னாது
பகாற்ப நீர்விடுக்குஞ் சிவப்ப தாக
சேர்க்கவிரத் தோட்டமதுந் துரித மாக
சிலதுபல மாஞ்சிலது பலமு மின்றி
தீர்க்கமா யோடிக்கொண் டிருக்குஞ் *சக்கு
செவிகளிலும் நீர்வடியுஞ் சிலமாட் டுக்கு
ஆர்க்கவே கண்பட்டை வீங்குங் கண்ணில்
அக்கினியின் பொறிபோல விருக்கு மென்னே. (98)

## இதுவுமது.

என்னசில வெருதுக்கு மஞ்சட் போலாய்
இருக்குமே காட்டுமாட் டதனை யொக்க
உன்னியே முட்டவருங் கீழ்வி ழுந்து
உதறிப்பின் கறட்டென்று யிழுத்துக் கொஞ்சம்
மன்னவே தெளிவடைந்த வாறி ருந்து
மடிந்துவிடுஞ் சிலசெருமிக் கொண்டி ளைக்கும்
நன்னவே சாணியொடு சீத ரத்தம்
நாடிவிழுங் கண்டுவே றிடத்திற் கட்டே. (99)

## இதுவுமது.




கட்டிச்சீக் கிரமாகச் செய் மருந்து
கடும்புலியின் கறியுமயி லிறகுங் கூட்டி
அட்டியிலா தூட்டிமுது குடன்வி லாவில்
அரியச்சூ டிடநன்று மதன்மே லாக
முட்டிமுக்கிச் சாணம்போ டாதி ருந்தால்
மொழியும்விளக் கெண்ணெயரைப் படியி னோடு
சட்டியிற்காச் சியவெந்நீர்ப் படியுமொன் றரையில்
தான்கலந்து மலவாயிற் பீச்ச நன்றே. (100)

## இதுவுமது.

நன்றான தின்பிறகு மசாலா வொன்று
நவிலுவேன் சீரகமு மூன்று தோலா
தொன்றான வெங்காயம் பலமும் நான்கை
சுருக்காய்ச்சேர்த் தரைத்துக்கேழ் வரகின் கூழு

* சக்கு—கண்.

குன்றுமற் படியிரண்டு தயிருபடி யொன்று
கூசாமற் கலக்கிநாள் மூன்ற தூட்டு
ஒன்ருக யின்னமொரு முறையைக் கேளு
ஒப்பற்ற வீருள்ளிப் பலமி ரண்டே. (101)

## இதுவுமது.

பலமான சதகுப்பை மஞ்சட்சீ ரகமும்
பகரும்வகைக் கொருபலமாய்ச் சேர்த்த ரைத்து
குலவுதயி ரிருபடியிற் கலக்கி நான்கு
கூறுசெய்து நாளொன்றுக் கிரண்டு போது
நலமாகக் கொடுத்துப்பின் காய்ந்தபுலிக் கறியை
நங்நீர்விட் டரைத்ததனிற் கலக்கி நன்ருய்
பிலமாக நாள்மூன்றி னுதயங் தன்னில்
பிரியமாய்க் கொடுக்கவிங்நோய் சாந்த மாமே. (102)

## தெருநோய்.

ஆமப்பா தெருநோயின் செய்கை தன்னை
அறையக்கேள் மூக்கோரங் கறுத்தி ருக்கும்
தாமப்பா வம்மூக்கைச் சுழித்தி மூக்குந்
தானுமிரை தின்னாது தீரு தற்கு
வாமப்பா வெள்ளுள்ளிப் பலம தொன்று
வசம்பதுவு மொருபலமாங் குப்பை மேனி
பாமப்பா பேய்க்குமட்டி யாடு தீண்டாப்
பாளையிலை வகைக்குமொரு பிடியாய்ப் போட்டே. (103)

## இதுவுமது.

போட்டுமெழு காயிடித்துச் சிறுநீர் தன்னிற்
புகட்டிடத்தீ ருமின்னோர் வகைய தப்பா
நாட்டுவேன் வாயதனை மூடிக் கொள்ளும்
நாடியதில் நீர்வடியு மசந்து நிற்கும்
பூட்டுவேன் மூக்கதனைச் சுழித்தி மூக்கும்
புகலுவேன் தீருதற்கு கடுகுவசம் பதுவும்
தீட்டுவேன் வகைக்குமொரு பலம தாக
செப்பெள்ளுப் படிமூன்றுஞ் சேர்த்தி டித்தே. (104)


## நருநோய்.

இடித்திளநீ ரிற்கலக்கி நாள்மூன் றாட்ட
இனிமையா மின்னமொரு வகையைச் சொல்வேன்
பிடித்திடுவே லிப்பருத்தி யிலைமேனி யிலையும்
பிரியமாய்க் கசக்கியச் சாற்றை மூக்கில்
வடித்திந்த யெந்திரத்தை யோலை தன்னில்
வரைந்துகட் டிடநோயுஞ் சாந்த மாகும்
நடித்துவரும் நருநோயின் செய்கை தன்னை
நவிலுவே னரைவயிறுய் மேயும் பாரே (105)

## வெருநோய்.

பார்க்கவத னுடம்புலரும் விலகு தற்கு
பகரும்பேய்க் குமட்டிக்காய்ச் சாறுவிளக் கெண்ணெய்
தீர்க்கமாய் வகைக்குக்காற் படிக லக்கித்
திடமாகக் கொடுத்திடது விலாவிற் சூடு
மார்க்கமா யிட்டிடவிந் நோயுந் தீரும்
வழுத்துவேன் வெருநோயின் வண்மை தன்னை
மூர்க்கமா யலைந்துகொண் டிருக்கும் பாரு
முன்பின்னுய் நாற்காலும் வைக்குந் தானே. (106)

## இதுவுமது.

தானதற்கு வெங்காயம் பலமும் நான்கு
சன்னலவங் கப்பட்டைப் பலமி ரண்டு
வேனவே முள்முருங்கை யிலைமுருங்கை யிலையும்
விளம்புவேன் வகைக்குநாற் பிடிய தாக

மானவே யிவையெல்லாஞ் சேர்த்த ரைத்து
மாகாடி யிற்கலக்கி நாள்மூன் றாட்டி
ஆனவே யிடதுவிலாச் சூடு போட
அகன்றிடுமிந் நோய்வேறு வகைசொல் வேனே. (107)


## செருநோய்

சொல்லவே செருநோயின் வண்மை தானும்
சுடர்வெயிலில் நிற்குமுடல் மெலிந்துகுளிர்ந் திருக்கும்
புல்லவே நிலமதனைப் பறண்டிநீர் விடுக்கும்
புகலதற்கு யிஞ்சிவெந் தயத்தி னேடு

வெல்லவெள் ளறுகுசித் திரப்பா லாடை
வேண்டியே வகைக்குமொரு பலம ரைத்து
நல்லவிரு படிகாடி தனிற்க லக்கி
நாடியே கொடுத்துவிலாச் சூடு போடே. (108)

## இதுவுமது

போடநல மாமின்னோர் செருநோய் செய்கை
பொருந்துமஞ்சள் நிறமாக நீர்வி டுக்கும்
நாடவே நாய்போலச் செருமி நிற்கும்
நவிலுவேன் திருதற்கு நெருஞ்சிச் சாறுத்
தேடவே படியொன்று சுக்குபல மொன்று
திடமாக வேயரைத்துக் கலக்கி யூட்டி
ஓடவே முதுகிற்சூ டிடநோய் தீரும்
உரைத்திடுவே னின்னமொரு முறையைத் தானே. (109)




## இதுவுமது.

தானகுப்பை மேனியிலை யளவுமாங் காய்
தனிவசம்பு பூண்டுமெலு மிச்சங் காய்போல்
வேனவரைத் தேவெந்நீர் கலக்கி யூட்ட
விலகிவிடு மின்னமொரு முறையைச் சொல்வேன்
வானமதைப் பார்த்துமே சுணங்கன் போல
வாலசைத்துச் செருமிநிற்குந் தீரு தற்கு
கானகத்து மூங்கிலிலை மாங்கா யொக்க
காரவெண் பூண்டுமொரு பலத்தைச் சேர்த்தே. (110)

## இதுவுமது.

சேர்த்தரைத்துக் கவளமாய்க் கொடுக்கத் தீருஞ்
செப்புவே னின்னமொரு வகையைத் தானும்
பார்த்திடுவாய்ப் பனங்காடை இறகி னோடு
பண்பான நிலவேரும் வகைக்கு மாங்காய்
பூர்த்தியா மளவரைத்துப் படிவெந் நீரில்
புகட்டியிரு விலாவதனிற் சூடு போட
நேர்த்தியா மின்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
நினைவாக விக்கலுடன் செருமும் பாரே. (111)




## இதுவுமது.

பாரதற்குத் திப்பிலியும் பலம தொன்று
பலமரையாங் கரியசீ ரகத்தைத் தானும்
சேர்விரண் டையும்வறுத்துப் பொடியுஞ் செய்து
திடமாகக் காற்படித்தே னிற்கு ழப்பி
தீரவே கொடுத்திடுவா யன்றி வேறு
செப்பிடுவேன் நிம்பத்தி னிலையும் பட்டை
தேரவே யரைத்துநல் லெண்ணெ யோடு
திகழும்வெண் ணெயுங்குழைத்து நாள்மூன் றூட்டே. (112)

## இதுவுமது.

ஊட்டநன்று மின்னமொரு வகையைச் சொல்வேன்
உத்தமனே செருமும்நீர் வடியு மூக்கில்
மூட்டவே நெஞ்சடைக்குந் தீரு தற்கு
முக்கியமா மிளகுதிப் பிலிவ கைக்கு
நாட்டவே பலமொன்றைப் பொடியுஞ் செய்து
நற்பசுவி னெய்யுமரைப் படியிற் சேர்த்துத்
தேட்டமுறக் குழப்பியபின் கொடுத்து நெஞ்சில்
திடமாய்ச்சூ டிட்டிடவிந் நோயும் போமே. (113)




## மருநோய்.

போமப்பா மருநோயின் செய்கை தன்னைப்
புகலுவேன் நாற்காலும் நடுங்கும் பாரு
தாமப்பா விழிசுருட்டி விழிக்கும் நேரு
தானுமிரை தின்னாது தீரு தற்கு
ஆமப்பா நீர்ப்பூலா வேருந் தேங்கா
யளவரைத்துக் காடிமுப் படியி விட்டு
வாமப்பா கலக்கிநன்று யூட்டத் தீரும்
வகையாக யின்னமொரு விபரங் கேளே. (114)

## இதுவுமது.

கேளப்பா நாய்க்கொட்டான் பட்டை யோடு
கெடியான கருங்காணஞ் சங்கங் குப்பி
நாளப்பா யிலையும்வகை யொன்றரை றுக்கு
நல்லவெலு மிச்சங்கா யளவ ரைத்து



வாளப்பாப் பனங்கள்ளுப் படியு மூன்றில்
வளமாகக் கலக்கியிட் டிருவி லாவில்
சூளப்பாச் சூடிடவே சுகமுண் டாகும்
சொல்லுவேன் சுரநோயுந் தீரு தற்கே. (115)

### சுரநோய்.

தீரமுட்டை யிடுங்கோழி தனைய டித்துச்
சீரகமுங் கடுகுவெந் தயத்தி னோடு
நேரவே யிருள்ளி மிளகுநல் லெண்ணெய்
நிகழும்விளக் கெண்ணெயிவை யெல்லாங் கூட்டிச்
சாரவரைத் தேமூன்று வேளை யூட்டச்
சாந்தமாந் தீராத யெருக்கல் நோயுஞ்
சேரவதன் செய்கையுடல் காந்த லுண்டாஞ்
செப்பவே நாக்குவழு வழுப்பாம் பாரே. (116)


### தீராத யெருக்கல் நோய்.

பார்க்கவே செவிதுடிக்குஞ் சாணந்தா னெருகும்
பண்பாம்நீர் நிறஞ்சிவப்பாய் விடுக்குந் தீர
நீர்க்கடம்பின் பட்டையுல குய்யக் கொண்டான்
நிகழிலைவே ரையுமிடித்துத் தண்ணீர் விட்டு
தீர்க்கமாய்க் காய்ச்சியதைப் புகட்டிப் பின்பு
திடமாக முதுகிற்சூ டிடநோய் தீரும்
மார்க்கமின்னோர் வகையுண்டா மதனைச் சொல்வேன்
மாங்காயி னளவுபங்கம் பாலையிலை வேரே. (117)

### இதுவுமது.

வேரதனை யரைத்தாவின் பாலுமரைப் படியில்
விரைவாய்நீ கொடுத்திடவே யெருக்கல் நிற்கும்
சாரவே சாணமிடா திருக்குந் தீரச்
சாற்றுவே னுப்பிலிவேர்ப் பலம தொன்றை
நேரவே யரைத்துமொரு படிப்பன் னீரில்
நினைவாகக் கலக்கியே கொடுக்க நன்றும்
சேரவின்னம் வேறுவகைப் பொன்னுங் காணி
சிறந்தசமூ லந்தனையுங் கொண்டு வந்தே. (118)

## இதுவுமது.



வந்துதண்ணீர் விட்டிரவில் வேக வைத்து
மறுநாட்கா லையிலிறுத்துச் சீரகந் தான்
முந்துநெல்லிக் காயளவீ ருள்ளி தன்னை
மொழியுமெலு மிச்சங்கா யொக்கச் சேர்த்து
சிந்துரு தரைத்தனிற் கலக்கிப் பின்பு
திடமாகக் கொதிக்கவைத் தெருமைக்
தந்துபசு மோருபசுக் கெருமை மோரிற் [குத்தான்
ருனூட்டி யிடதுவிலாச் சூடு போடே. (119)


## பச்செருச்கல் நோய். கருக்கல் நோய்.

போடநற் குணமாம்பச் செருக்கல் நோயைப்
புகன்றிடுவாய் நீர்வடியு மயிர்சி லிர்க்கும்
நாடபல காலெருகுந் தீர மூன்று
நாட்பெரிய கிலுகிலுப்பைச் சாறை யூட்ட
தேடவிருக் காதுபிணி கருக்கல் நோயைச்
செப்புவேன் தீவனத்தை யதப்பித் தள்ளும்
சாடசில போதுகக்கு முடலம் வற்றுஞ்
சாந்தமுற குகனுரைத்த முறைசொல் வேனே. (120)

## இதுவுமது.

சொல்லவே மேனியிலைப் பிடியும் நான்கு
தூயவசம் பொருபலமுஞ் சேர்த்த ரைத்து
புல்லாவின் பாலுமொரு படிக லக்கிப்
புகட்டிடுவாய் நாள்மூன்ற திவ்வா றுக
நல்லமுறை வேறுவகை காக்கை யொன்றை
நாடுதலை காற்குடலு மென்பி ரோமம்
பொல்லாதை நீக்கிவிட் டரைத்துக் காடிப்
பொருந்தவே கலக்கியிவ்வாற் நாள்மூன் றூட்டே. (121)

## கருநாடி நோய்.



ஊட்டியே யிடதுவிலாச் சூடு போட
ஓடிவிடுங் கருநாடி நோயின் செய்கை
தாட்டிகவாய் நீர்வடியும் வயிறு மூதும்
சாணந்தான் களிம்பதைப்போல் மெதுவாய்ப் போடும்

நாட்டியபல் லைக்கடிக்கு மதுவுந் தீர
நல்வேப்பம் பட்டைவிளாம் பட்டையிரு வகைக்கு
கூட்டியே பலம்பத்தை யிடித்துமிரு படியாம்
குமரனன் றுண்டதினை யரிசி கூட்டே. (122)

## பெருநாடி நோய்.

தினையரிசி யும்போட்டுக் கூழைக் காய்ச்சித்
திடமாக மூன்றுநாட் கொடுத்துப் பின்பு
வினையகல யிடதுவிலாச் சூடு போடு
விளம்புவேன் பெருநாடி நோயின் செய்கை ௩
முனையாகக் கறுப்புநிறங் களிம்பு போலும்
மொழியவே நாற்றமாய்க் கழியும் பாரு
நனையாம்பல் லைக்கடிக்குந் தீரு தற்கு
நல்வேலாம் பட்டைத்தூட் படியுங் காலே. (123)

## கருமணி நோய்.

படியதனில் விளாம்பட்டைப் படிகா லோடு
பண்பான தினையரிசிப் படிதா னொன்றை
துடியான காடியிட்டு வேக வைத்து
துன்பற வேமூன் றுநாட் கொடுத்துப் பின்பு
வடிவேலன் பதந்துதித் திடவி லாவில்
வாகாகச் சூடிடவே சாந்த மாகும்
கொடியில்வருங் கருமணியாம் நோயின் செய்கை
நோக்கம்வே ளுய்த்திகைத்தே மந்தை விட்டே. (124)

## இதுவுமது.

விட்டுமே தனித்துநிற்கும் நிவர்த்தி சொல்வேன்
மிளகுடனே பருத்தியிலை யிரண்டுஞ் சேர்த்து
தொட்டுசிறு மீனதனைக் கழுவுந் தண்ணீர்
துரிதமாய் விட்டரைத்து யெலுமிச் சங்காய்
மட்டுமே திரட்டியிட் டொருவி லாவில்
மாறுமற் சூலமற் றொருவி லாவிற்
கட்டுங்கட் டாரியைப்போற் சூடு சுட்டால்
கடுமையுள நோயதுவு மோடிப் போமே. (125)

## பெருமணி நோய்.

போமப்பா பெருமணிநோ யதனின் செய்கை
புகலவே மிதமிஞ்சிச் சாணம் போடும்
தாமப்பா நாட்குநாள் மெலிந்து நிற்குந்
தானதற்கு யிருபலமா மிலவம் பட்டை
வாமப்பா நாலுபத்துப் பலமீ ருள்ளி
வகையிரண்டுஞ் சேர்த்திடித்துக் கொடுத்துப் பின்பு
நாமப்பா வெந்நீரைக் குடிக்கச் செய்தால்
நலமாகு மற்றுமொரு நோய்சொல் வேனே. (126)

## தொண்டை நோய்.

சொல்லவே தொண்டைநோய் செய்வி தந்தான்
சுருக்காகத் திரண்டுபனங் கொட்டை போல
புல்லவே தொண்டையதை வந்த டைக்கும்
பொருந்துமூச் சையுஞ்செருக்கு மயிர்சி லிர்க்கும்
வல்லவாய் நீர்வடியுஞ் செவியுந் தாழும்
வகையாக வெடிநாறுந் திகர லுண்டாம்
வெல்லவே ஈமொய்க்கு மிரைதின் றாது
விடுஞ்சொருக்கு நீரதுவுந் தீரக் கேளே. (127)

## இதுவுமது.

கேளப்பா யிருபலமாம் பெரியசீ ரகமும்
கெம்பீரப் பீநாறிப் பட்டையிரு பலமாம்
நாளப்பா மிளகாயின் பழமுரைப் பலமாம்
நவிலுமதி மதுரந்தான் பலம தொன்று
வாளப்பாப் பேய்பீர்க்கி னிலைமாங் காய்போல்
வளருமதன் விதையுமெலு மிச்சங் காய்போல்
கோளப்பா விலாதிசங்கி னிலையும் வித்தும்
குறிப்புமேற் சொன்னபடி சேர்த்துக் கொண்டே. (128)

## இதுவுமது.

கொண்டகோ ரங்கிழங்கு பலமி ரண்டு
கூறுதை வேளைபொடு தலைச மூலம்
கண்டதனைத் தனித்தனியா யிடித்துச் சாறு
காற்படிய தாயெடுத்து வைத்துப் பின்பு

விண்டதோ ரகத்தியிலே யெலுமிச் சங்காய்
வீதஞ்சேர்த் திவையெல்லா மரைத்து நன்றாய்
பண்டடுப்பில் வைத்தவெந்நீர்ப் படியுங் கூட்டிப்
பாங்காகக் கலக்கியதை குடிக்கச் செய்யே. (129)

## மண்டை நோய்.

செய்யவதன் பின்னாலே வெந்நீர் காட்டச்
சென்றிடுமிப் பிணியதுவுங் கடலுக் கப்பால்
துய்யதோர் மண்டைநோய் செய்கை சொல்வேன்.
துலங்கவே வயிறாது மண்டை வீங்கும்
பய்யவே யெருக்கலொடு பீச்ச லுண்டாம்
பார்க்கரற் கந்தம்போ லிருக்கு மப்பா
உய்யவே கற்றாழஞ் சோறுபடி யொன்று
உப்புகாற் படிசேர்த்துக் கொடுக்க நன்றே. (130)

## இதுவுமது.

நன்றாக மண்டையிலே சூடு போட
நவிலுவே னின்னமொரு செய்கை தானும்
குன்றாத செவிதாழு மண்டை வீங்கும்
குளிர்ந்தபுல் லிற்படுக்க விருப்ப முண்டாம்
என்றாங்கண் குழியாகும் பீளை சாடும்
இரைதின்னா தேயயர்ந்து நடக்குந் தீர
ஒன்றாக வீழியிலே கருவே லம்பூ
உயரும்வெப் பூலாத்தி யிலையுந் தானே. (131)

## இதுவுமது.

தானப்பா மாங்காயி னளவ தாக
தனித்தனியே யரைத்துபடி யெருமை மோரில்
வேனப்பா கலக்கியே புகட்டிப் பின்பு
விரும்பியே யிடதுவிலாச் சூடு போட்டு
கோனப்பா மண்டைதனைச் சுற்றிச் சூடு
குறிப்பாகச் சுட்டிடவே குணமுண் டாகும்
கானப்பா யிந்நோயி லோர்வி தந்தான்
கண்கூடுந் தலையதுவும் வீங்கும் பாரே. (132)

விலா



மண்டை



## இதுவுமது.

பாரப்பா விழியில்நீர் வடிந்து நிற்கும்
பண்பாடா தோடையிலை தனைக்கொ ணர்ந்து
நேரப்பா பழங்காடி விட்டி டித்து
நினைவாகச் சாறுமரைப் படியெ டுத்து
சீரப்பா கொடுத்துதலை யதனிற் சூடு
திரமாக யிட்டிடவே சுகமுண் டாகும்
சேரப்பா யின்னமொரு மண்டை நோயின்
செய்கையதன் விபரமதைச் செப்பு வேனே. (133)

## இதுவுமது.

செப்புவே னறிவுபல மிரண்டுங் கெட்டு
திடீரெனக்கீழ் விழுந்துவிடுங் குரட்டை மூச்சும்
கப்பியிரு கண்பிதுங்கி மணிபெ ருக்கும்
கனத்ததுடி துடிப்பதா யடிக்கும் நாடி
ஒப்புயர்ந்த மூளையடிப் பட்டுக் காயம்
உற்றதினா லுண்டாமிப் பிணியுந் தீர
*அப்பதனை மொண்டுதலை மீத டித்து
அப்பொழுதே கரியபவ ளத்தைத் தானே. (134)

## இதுவுமது.

கரியபவ ளம்மூன்றே காலாந் தோலா
கனத்ததோ ரிஞ்சியிரண் டரையாந் தோலா
தெரியவரைத் தரைப்படிதண் ணீர்க லக்கி
திடமாகக் கொடுத்துநேர் வாளந் தன்னை
பிரியமுட னரைத்துத்தேங் காயினெ ண்ணெய்
பின்னமிலா தேக்கலக்கிக் கொதிக்க வைத்து
உரியதோர் பிடரிதனிற் றேய்க்கத் தீரும்
உகந்துவரு மின்னமொரு மண்டை நோயே. (135)

## இதுவுமது.

நோயதுவுங் கண்குழியும் பீளை சாடும்
நொந்துமிரு செவிதாழ மிரைதின் றாது
தோயவே மயிர்சிலிர்க்குந் தீரு தற்குச்
சொல்லுமிலைக் கள்ளியுடன் மாவி லிங்கம்

---

* அப்பு—தண்ணீர்.

தூயவகைக் குச்சாறு படியு மொன்று
　　தலங்கவேப் பம்பிசினும் பலந்தான் மூன்று
ஆயவே கடுகுபலங் காலுங் கூட்டி
　　அரைத்துக்கா டியிற்கலக்கிக் கொடுக்கு முன்னே. (136)

## இதுவுமது.

முன்னவனும் விநாயகனைப் பூசை செய்து
　　முறையாக மருந்ததனைக் கொடுத்துப் பின்பு
துன்னவே யிடதுவிலாச் சூடு போடச்
　　சுகமாகு மின்னமொரு நோயின் செய்கை
பின்னமிலா மண்டையைத்தா னிடித்துக் கொள்ளும்
　　பேசுவே னதுதிரக் கற்சுண் ணும்பை
நன்னவே லிப்பருத்திச் சாறெ டுத்து
　　நாடியதிற் குழப்பியே தலையிற் போடே. (137)


## இதுவுமது.

போட்டதன்மே லெருச்சாம்பற் றன்னைத் தூவு
　　புலத்தியனே யின்னமொரு முறைய தப்பா
காட்டமாம் பூவரசின் விதைபொ டித்து
　　கருத்தாக வெண்ணெயதிற் குழப்பி மண்டை
நாட்டமுள மூளைக்குச் சரியாய்ப் பூச
　　நலமாகு மின்னமொரு செய்கை கேளு
தேட்டமாம் வயிறிறையுஞ் சாணி நாறும்
　　தேறியநாற் காலதுவுந் தளரும் பாரே. (138)

## இதுவுமது.


பாரப்பா வதற்குவா ழைக்கி ழங்கும்
　　பகாலம் விழுதுஞ்சேர்த் தரைத்து நன்றாய்
நேரப்பா கொடுத்திடவே சுகம தாகும்
　　நிகழ்த்துவே னின்னமொரு செய்கை தன்னை
சீரப்பா தலையதனை நட்டு நிற்கும்
　　செப்புவயி றாதுங்கண் ணீருஞ் சிந்தும்
தோரப்பா தீருதற்குச் சுக்குப் பூண்டு
　　சிறந்தவா டாதோடை யிலையிம் மூன்றே. (139)

## தலைவிட நோய்.



மூன்றதையுங் காடிவிட் டரைத்து நன்றாய்
மூன்றுதினங் கொடுத்திடது விலாவி லப்பா
தோன்றச்சூ டிட்டிடவே சுகமுண் டாகும்
சொல்லுவேன் தலைவிடநோய் செய்கை தன்னை
*ஆன்றலாய் நிலத்தில்விழுந் தடிக்குங் காதை
அதுவப்பாற் பூப்பறண்டு மசைக்குங் கொம்பை
†மான்றலாய்க் கண்ணில்நீர் வடிந்து நிற்கும்
வைக்கோலும் பசும்புல்லு மேயுந் தானே. (140)

## தலைப்புத்து நோய்.



தானதற்கு வேப்பிலையும் பிடியி ரண்டு
தன்னுடனே யுப்புபலங் காலுங் கூட்டி
ஊனமற வரைத்திரண்டு படியாங் காடி
உறக்கலக்கி யேகொடுத் திடவி லாவில்
நூனமுறச் சூடிடவே சுகமுண் டாகும்
நுவலுவேன் தலைப்புத்து நோயின் செய்கை
ஈனமிலாக் காலைவெட்டிக் கொண்டு நிற்கும்
எதிர்ப்பட்ட மனிதரையு முட்டும் பாரே. (141)

## இதுவுமது.

பார்க்கவுடல் மெலியும்பொய் மேய்ச்சல் மேயும்
பகருவேன் தீருதற்கு வசம்பு பூடு
சேர்க்கநா யுருவியிலை வேரின் பட்டை
திடமான வுப்புவகைக் கரைப்ப லந்தான்
மார்க்கமா யரைத்துவிளக் கெண்ணெய் நாழி
வாங்கியதிற் கலக்கியிட் டதன்பின் பாக
தீர்க்கமாய் நெஞ்சுவிலாச் சூடு போட
தீர்ந்துவிடு மின்னமொன் றந்த நோயே. (142)

## இதுவுமது.

நோயதனின் செய்கைதீ வனந்தின் னாது
நுவலுங்கா திரத்தம்விழும் வீக்க முண்டாம்
தூயமண்டை தணிக்காலாற் சொறிந்து நிற்கும்
தொடாமற் றீருதற்கே யமுக்கி ராவேர்

* ஆன்றல்—மிகுதி. †மான்றல்—மயக்கம்.

பாயவே குளப்பாளை வேர்வ கைக்குப்
பலமொன்றும் நாயுருவி வேரைந்து பலமாம்
ஆயவே யிவையெல்லா மரைத்து நன்றாய்
ஆவின்பாற் படியொன்றிற் கலக்கி யூட்டே. (143)

## இதுவுமது.

ஊட்டவே சாந்தமுறு மின்ன மொன்றை
யுரைக்கிறே னமுக்கிரா வேருஞ் சுக்கும்
நாட்டமுக்கா வேளையின்வே ரிவ்வ கைக்கு
நவிலுவேன் பலமொன்று மிளகுதிப் பிலியும்
தேட்டமாம் வகையொன்றுக் கரைப்ப லந்தான்
செப்புவசம் பதுபலங்கால் காயந் தானும்
வாட்டமிலாப் பலமுமுவ் வீசஞ் சேர்த்து
வகையாகத் தானரைத்துச் சாரா யத்தே. (144)

## செவிப்புத்து நோய்.

சாராயந் தனிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
தான்குடிக்க வெந்நீரைக் காட்டி யப்பா
நோயம் மாட்டுமண்டை சூடு போட
நீங்கிவிடுஞ் செவிப்புத்து நோயின் செய்கை
பூராய மாயுரைப்பேன் மண்டை வீங்கும்
பொருந்துசெவி நீர்வடியுந் தீரு தற்கு
நோயச் சிறுசெருப் படியின் சாறு
*நிம்பநெய் பெருங்காய மூன்றுங் கூட்டே. (145)

## நாக்குப்புத்து நோய்.

கூட்டியே காய்ச்சிநன்றாய்ச் செவியி லூற்றிக்
குணமாயக் காதிற்கூ டிடநோய் தீரும்
மேட்டிமைநாக் குப்புத்து நோயின் செய்கை
விளம்புவேன் வாயில்நுரை யாகத் தள்ளும்
தாட்டிகஞ்சேர் நாக்கின்மேற் றொலிப டர்ந்து
தானிருக்குந் தீவனந்தின் னாது தீர
காட்டில்விளைந் திடுமுளுந்து படியு முக்கால்
கனத்தமிள கிரண்டுபல மஞ்ச ளொன்றே. (146)

* நிம்பநெய்—வேப்பெண்ணெய்.

## கழிச்சல்.

ஒன்றல்ல கோழிமுட்டை யொன்ப தப்பா
உற்றகருப் புக்கட்டிப் பலமும் பத்து
நின்றசெக் காடுமெள் ளெண்ணெய்படி யரையில்
நீகலக்கிப் புகட்டிடவே நோயுந் திரும்
நன்றதல்ல கழிச்சலுண் டாகு மாகில்
நவிலுவேன் பெருநோயைச் சேர்ந்த தாகும்
அன்றதற்கு மூலகா ரணத்தி னாலே
அணுகாம லிருந்தாக்கால் வகைசொல் வேனே. (147)

## இதுவுமது.

சொல்லுவேன் முதன்மழையா லுண்டாம் புல்லை
தோன்றுமற் றின்றதினல் வருகு மப்பா
மெல்லினமா யேதேனும் வேது போடு
மேலுங்கா சுக்கட்டி யரைய ரைக்கால்
நல்லசுக்கு கிராம்பதுவுங் காலே வீசம்
நவில்மிளகு காலுடனே மூன்று வீசம்
வெல்லமுன் சொன்னவிடை தோலா வாகும்
வேகமுட னிவையெல்லாம் பொடியாய்ச் செய்தே (148)

## இதுவுமது.

செய்துமரைப் படிவெந்நீர் தனிற்க லக்கித்
திடமாகக் கொடுத்திடவே சாந்த மாம்பின்
உய்யவே கான்காணத் திலைபலமும் நான்கை
யுகந்ததண்ணீர் விட்டரைத் ததனின் கூட
துய்யவெழு வெலுமிச்சம் பழஞ்சா றூற்றி
தோயவொரு படிவீத மன்று டந்தான்
பய்யவுத யத்தினிலே கொடுத்து வந்தால்
பலமிகுந்து மாடுதெளிந் தோடும் பாரே. (149)

## சீதக்கழிச்சல்.

பார்க்கச்சீ தக்கழிச்ச லென்ற நோயைப்
பகருவேன் சலமிரத்த மாகச் சாணி
மார்க்கமின்றி யிடுமதுவுந் தீரு தற்கு
வல்லகிராம் பேலமதி மதுரமொரு வகைக்கு

சேர்க்கக்காற் பலமாக லவங்கப் பட்டை
செப்புமரைப் பலமாம்பூ லாத்தித் தோலும்
ஏர்க்கவெலு மிச்சங்கா யளவு கூட்டி
இதமாக வரைத்தெருமைப் பாலுமரைப்படியே.. (150)

## இதுவுமது.

படியதனிற் கலக்கியே கொடுக்க நன்றும்
பகருவே னின்னமொரு முறையைக் கேளு
துடியான சாதிக்கா யிரண்டின் கூட
சொல்லுஞ்சா திப்பத்திரி மூன்று வீசம்
கடிமிளகு மாச்சக்காய் கிராம்பு காலாம்
காலிரண்டு சீரகமும் லவங்கப் பட்டை
வடிவான வெற்றிலையும் நாற்கா லாக
வகைவகைக்குத் தனித்தனியே பலமாய்ச் சேரே. (151)

## இதுவுமது.

சேர்த்தரைத்து மாங்காயி னளவாம் வெண்ணெய்
திரட்டியதிற் குழப்பியே யூட்டிப் பின்பு
நேர்த்தியா யரைப்பலமா மிளக ரைத்து
நினைவாக வெந்நீரிற் கலக்கிக் காட்டச்
சீர்த்தியா மின்னமொரு வகையைக் கேளு
சீதரத்த முங்கலந்து சாணம் போடும்
பூர்த்தியாங் கொம்பினடிப் பக்கம் வீங்கும்
பொருந்து மின்னேய் வருங்காலம் புகலுவேனே. (152)

## இதுவுமது.

புகலுவேன் மழைகாலத் தந்தி யத்தும்
பொருந்துமே பனிகாலத் தாரம் பத்தும்
பகலவனு லுண்டாம்வே னிற்கா லத்தும்
பற்றும்நோய் தீருதற்குத் தேக முற்றும்
மிகநன்றும் வேதுவெது வேணும் போட்டு
விளக்கெண்ணெய் படியரைக்கால் பேதிக் கிட்டால்
அகலுமக லாதிருந்தா லதைப்பின் னாட்டு
அறைகிறே னின்னமொரு வகையைக் காணே. (153

### இதுவுமது.

காணவே சதைசதையாய்க் கழிந்து நிற்கும்
கணக்கதற்கு மிளகுபல மொன்ற ரைத்து
பூணவே நல்லெண்ணெய் படிய ரைக்கால்
புகலுந்தா ழைவிழுதின் சாறுபடி யொன்று
தோணவே கலக்கியொன் ருக வூட்டச்
சுகமாகு மின்னமொரு வகையைக் கேளு
சாணமுட னிரத்தசலஞ் சவ்வும் வீழும்
தான்முக்குந் தீருதற்கு வகைசொல் வேனே. (154)

### இதுவுமது.

சொல்லவே யாவரம்பூப் பிடியும் நான்கு
சுகமாம்பூ லாத்திவேர்ப் பட்டை தானும்
அல்லவே படிநான்கு மிளகைப் போன்ற
அத்திப்பிஞ் சதுபடியொன் ருகச் சேரு
வெல்லவே பச்சரிசி மாவுமரைப் படியாம்
விரும்பியிவை யனைத்துமொன் ருய ரைத்து
புல்லவே கழுநீரிற் கலக்கி யூட்டப்
பொருந்தியநோ யகன்றுவிடு மின்ன மொன்றே. (155)

### இரத்தக் கழிச்சல்.

ஒன்றிரத்தக் கழிச்சலுட செய்கை சொல்வேன்
உபாயமா யிருந்தாப்போ லிருந்துண் டாகும்
நின்றுகத கதப்புடனே நடுக்கங் காணும்
நீழ்செவியுந் தாழுமுத லெருகு மப்பால்
குன்றியே சீதரத்த சவ்வுதுற் கந்தக்
குழம்பலாய்க் கழியுமிக வருத்த மாக
அன்றுமுக்கிக் கொள்ளுமடி வயிறும் நோகும்
அடிக்கடிதான் சுற்றுமுற்றும் பார்க்கும் பாரே. (156)

### இதுவுமது.

பார்க்கும்பல் லைக்கடிக்குஞ் சத்தம் போடும்
பண்பின்றி முதுகதனை வளைந்து நிற்கும்
சேர்க்கைமூச் சதிகரிக்கும் நாடிபட படக்கும்
தீரவதற் கபி னுங்காற் றேலா வோடு

கோர்க்கசிற்று மணக்கெண்ணெய் படியுங் காலே
கூட்டியே யூட்டிடுவாய் வேண்டு மானல்
தீர்க்கமாய் மறுநாளுங் கொடுக்க நன்றாஞ்
செப்புவே னிதுவன்றி யின்னங் கேளே. (157)

## இதுவுமது.

கேளப்பா வயின்றோலா காலே வீசம்
கீர்த்திவான் மிளகிரண் டரையாந் தோலா
வாளப்பா நெய்ப்படிதான் மூன்று வீசம்
வகையாயிம் மூன்றினையுஞ் சேர்த்தே யூட்டி
வேளப்பா வடிவயிற்றி லொத்த னந்தான்
மேலிட்டே யாறுபடி யிளவெந் நீரை
கோளப்பா யில்லாம லாச னத்துள்
குழற்கொண்டு பீச்சிடவே குணமுண் டாமே. (158)

## இதுவுமது.

உண்டாகுங் கஞ்சியதிற் றவிட்டைப் போட்டே
யூட்டிடுவாய் சாந்தமுற மின்ன மொன்று
கண்டெட்டு மாதளம்பிஞ் சதை யறுத்து
கணக்காஞ்சா திக்காய்நான் காக வெட்டி
பண்டுமுன் பிஞ்சதனிற் பொதிந்து முள்ளாற்
பதியவே தைத்து நெருப் பிட்டுச் சுட்டு
துண்டாய்நீ யெடுத்துமோர் விட்ட ரைத்து
சுகமாகக் காற்றோலா வயி னுஞ் சேர்த்தே. (159)

## இதுவுமது.

சேர்த்துமொரு படிநீரிற் கலக்கி யூட்டி
செய்கையறிந் தேபின்னும் நாளொன் றுக்கு
ஆர்த்திடவே காலையுச்சி மாலே தன்னில்
அன்பாகக் கொடுத்திடலா மாவி னெய்யில்
பூர்த்திவா ழைக்கனியைத் துவட்டி யூட்டப்
புகன்றநோ யகன்றுவிடு மின்ன மொன்று
சீர்த்தியுள நாடிபட படத்த டிக்குந்
தீரப்பா சிப்பயறு மெள்ளுமிரு வகைக்கே. (160)

## இதுவுமது.

வகைக்குக்காற் படியாஞ்சீ ரகமீ ருள்ளி
வன்பலம தொன்றுமஞ்சட் பலமுங் காலாம்
மிகையாகும் விடத்தலையா வரைக்கொ ழுந்தும்
மேலுமிந்த யிருவகைக்கும் பிடிமூன் றாகும்
பகையாம விவையெல்லாஞ் சேர்த்த ரைத்து
பகரெருமைத் தயிரதனிற் கலக்கித் தானும்
துகையாக நாள்மூன்று கொடுக்க நன்றாஞ்
சொல்லுவே னின்னமொரு வகைதான் பாரே. (161)

## இதுவுமது.

பார்க்கவே தென்னம்பூம் பாளை யொன்றை
பசுவின்பால் விட்டிடித்துச் சாறு வாங்கி
தீர்க்கவரைப் படிவீதம் நாளொன் றுக்கு
திடமாக மூன்றுநாட் கொடுக்க நன்றாம்
மார்க்கமின்ன மொன்றுகல் லத்திப் பட்டை
வாகுளநா வற்பட்டை சேர்த்தி டித்து
கோர்க்கையாய்த் தண்ணீரில் வேக வைத்து
குணமாக யிறுத்தாற வைத்துக் காட்டே. (162)

## கிராணிக் கழிச்சல்.

காட்டகுண மாங்கிரா ணிக்க ழிச்சல்
காணுமதன் செய்கைநீ ரிறைக்குந் தேகம்
நாட்டவே நாட்குநாள் மெலிவ தாகும்
நவிலுவேன் தீருதற்கு மிளகுதிப் பிலியும்
கூட்டவெங் காயங்கற் றாழஞ் சோறு
குறிப்பாக விவையரைத்துக் கழுநீர் தன்னில்
தேட்டமாய்க் கொடுத்திடது விலாவிற் சூடு
திடமாக யிட்டிடநற் சுகமுண் டாமே. (163)

## வாத நோய்.

உண்டாகும் வாதநோய் செய்கை சொல்வேன்
உறமான நாற்காலும் நடைகூ டாது
திண்டாடுந் தீரசங்கங் குப்பியிலைச் சாறு
திடபடிகால் நிம்பநெய் மூன்று வீசம்

கொண்டாடிச் சேர்த்தேழு நாட்கொ டுத்து
குணமாக யிருவாரங் குடிக்க வெந்நீர்
முண்டாமற் காட்டியெருக் கிலைப ரித்து
முன்பழைய துணிபறப்பி வைத்துக் கேளே. (164)

## இதுவுமது.

கேளப்பா செங்கலதைச் சுட்டு மத்தி
கெடியாக வைத்துக்கா லொத்த னந்தான்
வாளப்பா யிட்டுநாற் காலுஞ் சூடு
வளமாகப் போட்டிடவே சாந்த மாகும்



தாளப்பா யின்னமொரு செய்கை சொல்வேன்
தலைகவிழ்ந்து நிற்குமதன் நடைகூ டாது
கோளப்பா படுத்தாக்கா லெழுந்தி டாது
குணமாக வெண்பூண்டு மிளகு சுக்கே. (165)

## இதுவுமது.

சுக்குவகைக் கிருபலங்கஸ் தூரி மஞ்சள்
சொல்மிளகாய்க் குரோசானி யோமங் தானும்
தக்கவகைக் கொருபலமா மக்ரா காரங்
தனிக்கடுகு மஞ்சள்வகைக் கரைப்ப லந்தான்
முக்கியமாந் திப்பிலிகாற் பலத்தி னேடு
மொழிகுவே னெருக்கலம்பூப் பிடிய தொன்று
பக்குவமா யிடித்துச்சா ராயம் விட்டு
பண்பாகப் பிசைந்தூட்டி வெந்நீர் காட்டே. (166)

## இதுவுமது.

காட்டநன்று மின்னமிந் நோயின் செய்கை
கழறுவேன் நடக்கையிலே நாலு காலும்
மூட்டவே தளர்ந்துவிழுந் தீரு தற்கு
முக்கியமாங் கருங்காணம் படிய தொன்று
நாட்டநாய்க் கொட்டானின் பட்டைபல மைந்து
நல்லாமைக் கீழ்வயிற்றி னேடுபல மொன்று
தாட்டிகசங் கங்குப்பிப் பிடிய தொன்று
தானரைத்துப் பனையின்கள் படியு மூன்றே. (167)

## இதுவுமது.

படியதனிற் கலக்கியொரு வார மூட்டிப்
பண்பாகக் குடிக்கவெந் நீரைக் காட்டி
துடியாக நாற்காலுஞ் சூடு போடச்
சுகமாகு மின்னமொரு முறையைக் கேளு
வடிவாம்பேய்க் கும்மட்டிக் கொழுஞ்சிமஞ் சணத்தி
வருகும்வா தம்மடக்கி யிவ்வகையா மிலையை
நொடியதனிற் கொண்டுவந் திடித்து நன்றாய்
நுவலுவே னடுப்பேற்றி வேக வைத்தே. (168)

## இதுவுமது.

வைத்ததனை நாற்காலும் வேது போட
வல்லநோ யகன்றுவிடு மிந்நோய் வேறு
தொத்தியே வருஞ்செய்கை நாற்கால் வீங்கும்
சொக்கியே நடக்காது காலைத் தாங்கும்
இத்தரையிற் றீருதற்கு மாவிலிங்க மிலையை
இசைந்தவெள் ளாட்டுநீர் விட்டி டித்து
நத்தியொரு படியாஞ்சா றெடுத்து மூன்று
நாளூட்டச் சுகமாகு மின்ன மொன்றே. (169)

## இதுவுமது.

இன்னமுவர் மண்ணதனிற் றண்ணீர் விட்டு
இயில்பாகக் கரைத்துவைத்து நாலு சாமம்
நன்னவே சென்றதின்பின் படியி றுத்து
நாழிபசுத் தயிர்கலந்து நாள்மூன் றூட்ட
தன்னயமா மின்னமொரு முறையைச் சொல்வேன்
தக்கதோர் பழம்பாசி சமூலந் தன்னை
சன்னவே காடியைவிட் டிடித்து நாழிச்
சாறெடுத்து மூன்றுநாட் கொடுநன் றாமே. (170)

## திமிர்வாதம்.

நன்றாகு மார்க்கமொன்று நவிலக் கேளு
நாடியே வீழியிலை தனைக்கொ ணர்ந்து
குன்றாம லாவின்மோர் விட்டி டித்து
கூசாமற் சாறெடுத்துப் படிவீ தந்தான்

ஆன்ருட மூன்றுநாட் கொடுத்துப் பின்பு
அடுத்துமே நாற்காலுஞ் சூடு போட
மன்ருடிக் கொண்டிருந்த நோயுந் தீரும்
வலுத்ததிமிர் வாதநோய் செய்கை தானே. (171)

### இதுவுமது.

தானப்பா காலதனை நீட்டிக் கொண்டு
தத்தளிக்கு மடககுதற்குப் படப டக்கும்
வேனப்பா தீருதற்குப் பற்ப டாகம்
விழியிலை வகைக்கிரண்டு பலம ரைத்து
ஆனவேப் பெண்ணெய்படி மூன்று வீசம்
அதிற்கலக்கிக் கொடுத்துநாற் காலி லுந்தான்
வானப்பா சூடிடவே நோயுந் தீரும்
வழுத்துவே னின்னமொரு முறையும் பாரே.

### யானை வாதம்.

பார்க்கவுவர்த் தரையிலுள்ள நீரு மண்ணும்
படிதயிரி லேகலக்கிப் புகட்டிப் பின்பு
கோர்க்கையாய் விலாவிற்சூ டிடநோய் தீரும்
குறிப்பானை வாதநோய் செய்கை கேளு
தீர்க்கமாய் நாற்காலும் வீங்கி நிற்கும்
தீரசது ரக்கள்ளி கொப்பு தன்னை
மார்க்கமாய்த் துண்டுதுண டாக வெட்டி
மண்பாண்டந் தன்னிற்போட் டடுப்பி லேற்றே. (173)

### இதுவுமது.

ஏற்றிபதி னறுபடித் தண்ணீர் விட்டு
எண்படியாய்ச் செய்துமேற் சட்டி மூடி
போற்றியே கந்தனையும் பூமிக் குள்ளே
புதைத்துவைத் திருந்திரண்டு நாட்க ழித்து
மாற்றமிலா தெடுத்துநாள் மூன்ற தூட்டி
மறவாமல் வெந்நீரைக் காட்ட நன்ரும்
தோற்றமாந் திமிர்வாதந் தனக்குச் சொன்ன
சூட்சமா முறையதனைச் கண்டு செய்யே. (174)

### இதுவுமது.

செய்பிரண்டை யிடித்துச்சட் டியிலே போட்டு
சேயனே வருத்துபழந் துணியிற் கட்டி
பய்யவே வொத்தனந்தான் போட நன்றும்
பகருவேன் பின்னுமெருக் கலம்ப முப்பு
நய்யுங்கள் ளிப்பமுப்புங் குப்பை மேனி
நன்வேலிப் பருத்திபெருந் தும்பையூ மத்தை
உய்யவா தம்மடக்கி குன்றுமணி யிவையி
னுற்றயிலைத் தனிதனியாய்க் கொண்டு வந்தே. (175)

### இதுவுமது

வந்துதண் ணீரிலிட்டுக் கொதிக்க வைத்து
வழுத்துமச் சக்கையெலாந் துணியிற் கட்டி
முந்தவத் தண்ணீரில் முக்கி முக்கி
முறைப்படியொத் தனங்கொடுக்கச் சாந்த மாகும்
சந்தமுனம் வாதத்துக் குரைத்தவெருக் கிலையின்
சார்பாமொத் தனமிட்டு நாலு காலும்
பந்தமுறச் சூடிடவே சுகம தாகும்
பகருவே னின்னமொரு வகைதான் பாரே. (176)

### இதுவுமது.

பார்க்கவே கல்லுப்புப் படிய ரைக்கால்
பண்பாத்துக் கும்மட்டிக் காயு மைந்து
சேர்க்கையா யிவையிரண்டு மிடித் துருட்டித்
திடமாகக் கொடுத்திடவே குணம தாகும்
கோர்க்கையின்ன மொன்றுவெள் ளாட்டு நீரில்
கூறுமா விலிங்கவிலை யிடித்துச் சாறு
தீர்க்கமொரு படியெடுத் தூட்டிப் பின்பு
சேயருந்தும் நீர்த்தொட்டி யருகிற் கட்டே. (177)


### பக்க வாதம்.

கட்டவே சுகமுண்டாம் பக்க வாதம்
கழறவே னதுபின்னங் காலி லுண்டாம்
திட்டமாம் பின்காலிற் பலமில் லாமல்
தியங்கிக்கா லிழுத்திழுத்து நடக்கும் பாரு

பட்டெனவே யிடிப்பிலடி படுவ தாலும்
பழுவான பாரமதை யிழுப்ப தாலும்
பொட்டெனவே தவறிக்கீழ் விழுவ தாலும்
பொருந்துகொம் பொடிந்தாலும் வருகும் பாரே. (178)

## குடல் வாதம்.

வருகுமது தலையிலடி படுவ தாலும்
வருத்தமுறக் கடுநடையாய் நடப்ப தாலும்
பெருகிடுமிந் நோயுண்டாந் தீரு தற்கு
பேசுவேன் குத்திரத்தஞ் சிறிது போக்கி
திருகின்றி யேதேனும் வேது மிட்டு
திகழும்பின் குருக்கதனிற் சூடு போட
உருகுமிந்த நோய்தீருங் குடலின் வாதம்
உரைத்திடுவே னதனுடைய விபரந் தானே. (179)




## இதுவுமது.

தானப்பா வயிறூதும் வாய்நீர் சிந்தும்
தக்கபுல் மேயாம லருவ ருக்கும்
வானப்பா தீருதற்கு மிளகீ ருள்ளி
வகைக்குமொரு பலம்வசம்புங் காற்ப லந்தான்
வேனப்பா முடக்கத்தான் பிடிய தொன்று
விரும்பியரைத் தேகொத்தங் கொழுஞ்சிச் சாறு
கோனப்பா படியிரண்டிற் கலக்கி யூட்டிக்
குடிக்கவெந்நீர் காட்டியிட விலாவிற் சூடே. (180)

## இதுவுமது.


சூடதுவு மிடநன்று மின்னஞ் செய்கை
சொல்லுவே னிரைச்சலுடன் வயிறும் வீங்கும்
நாடவே மேனிமுற்றுங் குளிர்ந்து வீழும்
நன்குற வுத்தமதாளிச் சாறுமரைப் படியில்
சாடசிறு மீனதுவும் படிய தொன்றைத்
தானூறப் போட்டுமறு நாளெ டுத்து
நாடவே யிரண்டுபடிப் பனங்கள் விட்டு
நலமாகக் கலக்கிநீ யூட்டு வாயே. (181)

## இதுவுமது.



ஊட்டியே விலாவிரண்டிற் சூடு போட
உற்றநோ யகன்றுவிடும் நடுக்கு வாதம்
தேட்டமாய் வருகுமதன் செய்கை கேளு
திடமான நாற்காலும் நடுங்கி நிற்கும்
நாட்டமாங் கண்சுருட்டிக் கண்வி ழிக்கும்
நன்வாயில் நீர்வடியுந் தீரு தற்கு
தாட்டிகநல் லெண்ணெய்ப்படி யரைக்கா லோடு
சாரவே தும்பையிலைப் பிடியு மைந்தே. (182)

## முடக்கு வாதம்.



பிடியுமைந் ததையரைத்துக் கலக்கி யூட்டப்
பிணியகலு மிதற்கின்னோர் மருந்தை கேளு
துடியாம்நீர்ப் பூலாவேர் தேங்கா யொக்க
துணிந்தரைத்து மரைப்படியெள் ளதை யிடித்தும்
படிமூன்று பசுவின்பா லுடன் கலக்கி
பண்பாக வூட்டிவிலாச் சூடு போட
கொடியிலிங் நோயகலு முடக்கு வாதம்
நுவலுவே னதுசெய்யுஞ் செய்கை பாரே. (183)

## வாதப் பிடிப்பு.

பார்பின்னங் காலிரண்டு முடங்கி நிற்கும்
பாங்காமுன் காலிழுக்குங் கண்சி வக்கும்
தேர்ந்திடுவாய் பெருங்குரும்பை மருட்கி ழங்கு
செப்புவகைக் கிருபலத்தை யரைத்துக் காடி
சேர்த்துமே கலக்கியிட் டிடநோய் தீரும்
திகழும்வா தப்பிடிப்பு நிவர்த்தி யாக
ஊர்த்தமிள கரணைவே ரிசங்கின் வேரும்
உற்றது துவளைவேர் வகைக்குத் தானே. (184)

## வாத சூலை.

தானப்பா பலமைம்ப தொரு வகைக்கு
தனித்தனியாய்ச் சேர்த்ததனை வெட்டிப் போட்டு
வேனப்பா குழித்தயில மிறக்கிக் கொண்டு
வேண்டிதின் மொன்றுக்குப் படிவீ சந்தான்

வானப்பர் நாள்மூன்று கொடுத்து வெந்நீர்
வளமாகக் காட்டிடவே நோயுந் தீரும்
கோனப்பா யிதுவன்றி வாத சூலை
குறிப்புரைப்பேன் பின்னங்கால் வீங்கும் பாரே. (185)

## இதுவுமது.

வீங்குமது தீருதற்கு மாவி லிங்க
வேர்ப்பட்டை குட்டிவிலா வேரின் பட்டை
சோங்கிரண்டு வகைக்குமிரு பலம தாக
தூயமைப்போ லரைத்தாம ணக்கி னெண்ணெய்
பாங்குகாற் படிகலக்கி நாள்மூன் றூட்ட
பகையான பிணியகலு மின்ன மொன்று
தேங்கியிரு பின்னங்காற் றுடையும் வீங்கும்
தேகமெங்கு மயிர்சிலிர்க்குந் தீரக் கேளே. (186)

## இதுவுமது.

கேளப்பா வொருபலமா மரைப்ப ரைத்து
கிளருமரைப் படிகோழி யாவரையின் சாற்றில்
வாளப்பா கலக்கிநாள் மூன்ற தூட்டி
மறுநாளிற் பழம்பாசி யிலையுமுவர் மண்ணும்
ஆளப்பா சேர்த்தரைத்துப் பசுவின் வெண்ணெய்
அதிற்கலக்கி வீக்கத்திற் பூசநன் றாம்
சூளப்பா சூலைநீர்ச் செய்கை கேளு
சொற்குளம்பு கால்மொழியும் வீங்கும் பாரே. (187)

## இதுவுமது.


பார்க்கநடக் காததுவுந் தீரமாங் காய்
பருமன்கொல் லங்கோவைக் கிழங்க ரைத்து
தேர்சங்கங் குப்பியிலைச் சாறுபடி காலாம்
தேடு*வே சரிவிட்டைச் சாறுபடி யரைக்கால்
சேர்க்கவதன் மூத்திரங்காற் படிய தாக
திகழும்வேப் பெண்ணெய்ப்படி வீசங் கூட்டி
ஆர்க்கவே கொடுத்துப்பின் னிரண்டு வாரம்
அன்பாகக் குடிக்கவெந்நீர் காட்ட நன்றே. (188)

* வேசரி—கழுதை.

## சூலை நோய்.

நன்றாகு மின்னமொரு வகையைக் கேளு
நவில்மலத்தைச் சிறுநீரிற் கலக்கிக் கொண்டு
குன்றாத படிமுக்கால் வீத மாகக்
கொடுத்துவெந் நீர்காட்டச் சாந்த மாகும்
ஒன்றாக முன்பான வாதத் திற்கே
யுரைத்தவொத் தனமதனை யிதற்குப் போட
வென்றாகுஞ் சூலைநோய் செய்கை தன்னை
விளம்புவே னற்காலுந் தளருந் தானே. (189)

## இதுவுமது.



தானான வயிறூதும் தலையுஞ் சாய்க்கும்
தனியாலம் விழுதுவிஷ்ணுக் கிராந்தி தன்னை
வேணாக வரைத்துக்கா டியிற் கொடுத்து
விருப்பமா யிடதுவிலாச் சூடு போட
கோனான பிணியகலும் பின்னுஞ் சொல்வேன்
குறிப்பாங்கண் ணீர்வடியுங் காலும் பின்னும்
மேனான கால்முடங்கி நடக்கா தப்பா
மேலுமரை மேய்ச்சலாய் மேயு மென்னே. (190)

## கருங்காலி நோய்.


என்னவது தீரநாய்க் கொட்டான் பட்டை
இடித்துவேப் பெண்ணெயுடன் கொடுக்க நன்றாம்
துன்னவருங் கருங்காலி நோயின் செய்கை
துலங்குமுக முங்கறுப்ப தாயி ருக்கும்
நன்னவே நாடிதனைப் பூமி தன்னில்
நட்டுக்கொண் டேயிருக்கு முடலம் வீங்கும்
சின்னமா யயர்ந்துநிற்கும் நீர்வி டுக்கும்
தீருதற்கு மிளகுசுக்கு வெள்ளைப் பூண்டே. (191)

## இதுவுமது.

பூண்டுவகைக் கொருபலமாம் வசம்பு காலாம்
புகலுவே னீருள்ளிப் பலமி ரண்டு
வேண்டுதை வேளைசிறு கீரை மேனி
விரும்புவகைக் கொருபிடியாய்ச் சேர்த் திடித்து

ஈண்டுகொடுத் தேபிறகு குமட்டிக் காயும்
ஏற்றக்கீழ்க் காய்நெல்லி கொழுஞ்சியிவை யிலையும்
ஆண்டிடித்து மேனிமுற்றுந் துவாலை யிட்டு
அதன்பிறகு வெந்நீரைக் குடிக்கக் காட்டே. (192)

## பெருங்காலி நோய்.



காட்டியதோ ரெருதுக்கு வலப்பு றத்தும்
கன்றீன்ற பசுவுக்கு யிடப்பு றத்தும்
சூட்டியே நாபிசுற்றி மேலே வாங்கி
சுட்டிடவே சுகமாகு மின்ன மொன்று
மேட்டிமையாம் பெருங்காலி நோயின் செய்கை
விளம்புவேன் வயிறுப்புஞ் சாணி நாறும்
வாட்டியமைக் களிம்பதுபோல் நிறம தாகும்
வாயில்நீர் வடியும்பற் கடிக்கு மென்னே. (193)

## சூரிநோய்.

என்னவது தீருதற்கு வேலம் பட்டை
இருபிடியாம் விளாம்பட்டை யதுபோ லாக
நன்னயமாய்ச் சேர்த்திடித்துத் தினையுங் கூட்டி
நாடிக்கூ ழாக்கியதை நாள்மூன் றூட்டி
முன்னமடி வயிற்றிற்கூ டிடநோய் தீரும்
மொழிகுவேன் சூரிநோய் செய்கை மூக்கில்
துன்னவனற் பொரிபறக்குங் கண்சி வக்கும்
சூட்சமுடன் றீருதற்கு வகைசொல் வேனே. (194)

## கருஞ்சூரி நோய்.

சொல்ல வெதுப் படக்கியிலை மாங்காய் போல
தூயவெள் ளொருபடியுஞ் சேர்த்த ரைத்து
வெல்லவிரு படிமோரிற் கலக்கி யூட்ட
வெம்பிணியும் நீங்கிவிடு மின்ன மொன்று
வல்லதொரு கருஞ்சூரி நோயின் செய்கை
வழுத்துநெல் லுமிதென்னம் பூவ கைக்கு
நல்லதொரு மாங்காயி னளவி டித்து
நாடியொரு படிகாடி கலக்கி யூட்டே. (195)

## பெருஞ்சூரி நோய்.

ஊட்டநன்றும் பெருஞ்சூரி நோயின் செய்கை
உற்றமுன்னங் கார்சியிளைப் பற்றி வீங்கும்
தேட்டமுறச் சுடுதுரட்டி வேரின் பட்டை
திடமாகப் பலமூன்று கொண்டு வந்து
நாட்டமா யரைத்துவெந்நீர் கலக்கி மூன்று
நாளூட்டி மேற்படிவே ரதைய ரைத்து
வாட்டமாம் வீக்கத்தில் மூன்று நாளும்
வளமாகப் பூசிடநற் சுகமுண் டாமே. (196)

## கருமலை நோய்.

உண்டாகுங் கருமலைநோ யதனின் செய்கை
உரைக்கவே வயிறூது மிரைதின் னாது
திண்டாடும் மயிர்சிலிர்க்குந் தீரு தற்கு
திடத்தமணத் தக்காளி சமூலந் தன்னை
கொண்டாடிக் கொண்டுவந் திடித்துச் சாறைக்
கூறுமொரு வேளையரைப் படிவீ தந்தான்
அண்டாது மூன்றுநா ளூட்ட நோயும்
அதன்காது மூக்கிலுமிச் சாறை யூற்றே. (197)

## பெருமலை நோய்.

ஊற்றிடுவா யிதுவன்றி யிலுப்ப ரைப்பு
ஓங்கெருமை வெண்ணெய்வகைக் கொருப லந்தான்
சாற்றிடுமிவ் விரண்டையுமைப் போன்ற ரைத்துத்
தான்கழுநீ ரிற்கலக்கிப் புகட்ட நன்றும்
ஏற்றியதோர் பெருமலைநோய் செய்யுஞ் செய்கை
இயம்பவே முன்னங்கால் வீங்குந் தீர
தோற்றியமா விலிங்கயிலைப் பிடிய தொன்று
சொல்லும்வெள் ளுள்ளியதும் பலம தொன்றே. (198)

## உதிர நோய்.

ஒன்றுடனே வசம்புபலங் காலுங் கூட்டி
உகந்தமைப் போலரைத்துக் கொடுத்துப் பின்பு
நன்றுநா ரத்தங்கா யுப்புஞ் சேர்த்து
நாடியரைத் தேவீக்கத் திட்டதன் மேல்



௨OOO

தொன்றுகூ டிட்டிடவே சுகம தாகும்
சொல்லுவே னுதிரநோய் குணத்தைக் கேளு
என்றும்போ லிரைதின்ன தருவ ருக்கும்
இயல்பின்றி யடிக்கடிதான் கழியும் பாரே. (199)


## இதுவுமது.

பார்க்கமயிர் சிலிர்க்குங்நீர் வடியும் வாயில்
பாங்குபெருங் கிலுகிலுப்பைச் செடிச மூலம்
கோர்க்கையாய்ப் பிடிங்கிவங் திடித்துச் சாறு
குணமாங்காற் படிவீதம் நாள்மூன் றூட்ட
சேர்க்கையா மின்னமொரு செய்கை சொல்வேன்
தின்றவிரை செமித்துடலி லொட்டி டாமல்
தீர்க்கமின்றிக் கழியுமத னுடலம் வற்றுங்
தீருதற்கு வெங்காயம் பலமும் பத்தே. (200)

## இதுவுமது.

பத்துடனே சீரகமும் பலந்தா னைந்து
பாங்காக இரண்டுமரைத் தெருமை மோரில்
நத்தியே கலக்கிநாள் மூன்ற தூட்ட
நலமாகு மின்னமொரு செய்கை கேளு
சித்தியாங் கண்வாயில் வடியு நீரு
சீர்கெட்ட நாற்றமதாய்க் கழியும் பாரு
வெத்தியுற விளாவிலையிண் டங்கொ ழுந்து
விளம்பும்வகைக் குப்பிடிமூன் றுகக் கூட்டே. (201)

## இதுவுமது.



கூட்டியரைத் தேமூன்று படித்தண் ணீரிற்
கொடுத்திடது விலாவதனிற் சூடு போட
நாட்டியவிங் நோயகலுஞ் செய்கை யொன்று
நவிலச்சா ணங்கழியுங் தேகம் வற்றும்
சாட்டிகவிங் நோயகலத் தலைசுருளி யிலையும்
சார்புவன்னி யிலைவகைக்குப் பிடியும் நான்கு
தாட்டிகமா யரைத்துமுப் படித்தண் ணீரில்
தானூட்டச் சுகம்வேறு வகைசொல் வேனே. (202)

## இதுவுமது.

சொல்லவே மயிர்சிலிர்த்துக் கொண்டி ருக்கும்
சுகமாக வெங்காயம் பலந்தான் பத்தை
புல்லவே யிடித்துவடி கஞ்சி சேர்த்து
புகட்டிடுவாய் மூன்றுநா ளிதுவல் லாமல்
நல்லமுளைக் கீரையிலைக் கரியசீ ரகமும்
நவிலுமீ ருள்ளியச மொக்குபழம் புளியும்
ஒல்லவரைத் தேகாடித் தெளிவி ருத்து
உறக்கலக்கிக் கொடுத்திடது விலாவிற் சூடே. (203)

## இதுவுமது.

சூடதுவு மிடநன்றுஞ் செய்கை வேறு
சொல்லிடுவே னுடல்முற்றுங் குளிர்ந் திருக்கும்
வாடவே செவிதாழுஞ் சத்தம் போடும்
வலுவின்றித் தண்ணீராய்க் கழியும் சாணம்
தேடக்கண் குழியாகுந் தீரு தற்கு
திகழ்வசம்பு கடுகுகருஞ் சீரகந் தான்
நாடபழம் புளியதுவும் வகைக்குமொரு பலமாம்
நவிலோமப் பலமிரண் டாகச் சேரே. (204)

## இதுவுமது.

சேர்த்திடுவாய் மஞ்சணத்திக் கொழுந்துபிடி மூன்று
தேறவே யரைத்துக் காடியிற்க லக்கி
நேர்த்தியாய் மூன்றுநாட் கொடுத்துப் பின்பு
நினைவாக யிடதுவிலாச் சூடு போட
சீர்த்தியா மின்னமொரு செய்கை சொல்வேன்
திகைத்ததுவும் நிற்குங்கண் பீளை சாடும்
பூர்த்தியாய் மேயாது வாய்நீர் சிந்தும்
புகலுவேன் தீருதற்கு சிறுமுள்ளி யிலையே. (205)

## இதுவுமது.

முள்ளியுடன் முத்திருக்கின் செவியுஞ் சேரு
முதியபழம் புளியுள்ளி கரியசீ ரகமும்
கள்ளமிலா தரைத்துக்கா டியிற்க லக்கி
கருதியிட் டிடதுவிலாச் சூடு போட

விள்ளநற் சுகமாகும் வேறோர் செய்கை
　　விழிசிவக்கும் நீர்வடியும் பீளை சாடும்
உள்ளவுட லதனிற்கொப் பளங்க ளுண்டாம்
　　ஊக்கமுள நாக்கதனில் வட்டம் போலே. (206)

## இதுவுமது.

வட்டமாங் காசுகா சாய்த்த டிக்கும்
　　வாடியே தலைகவிழும் மயிர்சி லிர்க்கும்
திட்டகுழித் தாமரைகற் பூர வல்லி
　　சேருவகை யொன்றுக்குப் பிடியு மூன்று
முட்டவே கற்றாழஞ் சோறுபல மூன்று
　　முதியபழம் புளியுமதி மதுர மேலம்
நட்டமிலாச் சீரகமீ ருள்ளிவகை வகைக்கு
　　நவிலுமொரு பலமாகக் கூட்டிப் பின்னே. (207)

## இதுவுமது.

பின்னமிலா தரைத்துக்கா டியிற்க லக்கி
　　பிசகாமற் பசுவின்மோர்ப் படியும் விட்டு
நன்னயமாய்க் கொடுத்திடவே சுகம தாகும்
　　நவிலுவே னின்னமொரு முறையைக் கேளு
துன்னநா யுருவியிலை வாழைநற் கனியும்
　　சுசிகாசர்க் கரையுமிள நீரிற் சேர்த்து
முன்னவனைப் போற்றிசெய்து கொடுக்கத் தீரும்
　　முறைசிறந்த தின்னமொரு வகைசொல் வேனே. (208)

## உதிரமண்டலி நோய்.

சொல்லவே பனங்கள்ளுப் படியு மொன்று
　　துலங்குநா வற்கொழுந்து பலமும் நான்கு
நல்லெள்ளு கழுவியநீர் படிதா னென்று
　　நாடுகிளு வைக்கொழுந்து பலமி ரண்டு
புல்லச்சேர்த் தொன்றாகக் கலக்கி யூட்டி
　　போதும்வெந் நீர்காட்டச் சுகம தாகும்
மல்லவரு முதிரமண் டலிநோய் செய்கை
　　வழுத்தவே கண்வாயில் வடியும் நீரே. (209)

### இதுவுமது.

நீரதுடன் வாய்மூக்கி லிரத்தஞ் சிந்தும்
நேர்மையா கிடவுமதற் கிளநீர் தன்னில்
சீரகமு மெலுமிச்சம் பழமு மூன்று
சேருவிளாங் காயளவு நீரின் சோறும்
மோரதுவும் படிமூன்று தனிற்க லக்கி
முறையாய் முத்தினங்கொடுக்கச் சாந்த மாகும்
நீரவிதற் கின்னமொன் றெருமை மோருஞ்
செப்புமிகப் புளிப்பாகப் படியு மூன்றே. (210)

### இரத்த உதிர நோய்.

படியதனி விளநீரும் படிகா லோடு
பாங்கெலுமிச் சஞ்சாறு படிய ரைக்கால்
துடியாங் காடிச்சோறு பிடியு மூன்று
துய்யபலஞ் சீரகத்தை யரைத்துப் போட்டு
கொடியபிணி தீருதற்கு நாள்மூன் றாட்டு
கூறிரத்த உதிரநோ யதனின் செய்கை
கடிதான விரத்தமதாய்ப் பீச்சுந் தீரக்
கழறுவே னதிமதுரப் பட்டை தானே. (211)

### இதுவுமது.

தானவோ டாங்கொடியு மத்திப் பட்டை
தக்கவிளாம் பிஞ்சுள்ளி யொருவ கைக்கு
வேனபலம் பத்துவட்டத் துத்தியிலை யதுவும்
விரும்புமயிர் மாணிக்கத் திலைவ கைக்கு
ஆனபிடி மூன்றாகச் சேர்த்தி டித்து
ஆவின்மோர்ப் படியுங்கா லதிற்க லக்கி
வானநாள் மூன்றாட்டச் சுகமுண் டாகும்
வழுத்துவேன் பழம்புளியும் பலமி ரண்டே. (212)

### இதுவுமது.

இரண்டுடனே ஆம்பலிலைப் பிடியு மொன்று
இவையரைத்துக் காடியதில் நாள்மூன் றாட்டி
முரண்டிடா திடதுவிலாச் சூடு போட
முற்றுமின் னேயகலும் வேறு செய்கை

திரண்டிடாச் சதைசதையாய்க் கழியுந் தீர
செப்புந்தா ழைவிழுதுச் சாறுபடி யொன்று
மிரண்டிடா நல்லெண்ணெய்ப் படியரைக் கால்
மிளகுபல மொன்றதனி லரைத்துப் போட்டே. (213)

## இதுவுமது.

போட்டுநன்றாய்க் கலக்கிநாள் மூன்ற தூட்ட
புகன்றநோ யகன்றுவிடும் வேறு செய்கை
மாட்டுமலஞ் சவ்விரத்தஞ் சலமும் வீழும்
வலுத்துமுக்குந் தீரப்பச் சரிசி மாவும்
காட்டுபடி யரைபூலா வேரின் பட்டை
நல்லாவ ரைப்பூவும் வகைக்குநாற் பிடியாம்
மூட்டுமிள கதைப்போன்ற வத்திப் பிஞ்சு
முறையாகப் படியொன்றுங் கூடச் சேர்த்தே. (214)

## இதுவுமது.

சேர்த்தரைத்து மூன்றுநாட் புகட்டத் தீரும்
செப்புவே னின்னமொரு செய்கை தன்னை
நேர்த்தியின்றி நாற்றமுட னிரத்தம் பீச்சும்
நிகழ்த்தசில போதுசவ்வு சவ்வாய் வீழும்
பார்த்திடுவாய்க் கீருபூ ரென்றி லாக்கும்
பாங்காகக் குன்றுமணிச் சமூலந் தன்னை
கீர்த்தியிரு பதுபலத்தைக் கொண்டு வந்து
கெடியாகக் காடிவிட் டிடித்துத் தானே. (215)


## இதுவுமது.

இடித்துபடிச் சாறெடுத்துத் தினமூன் றூட்டி
இடதுவிலா வதனிற்சூ டிடநன் றாகும்

படித்திடுமற் றொருமார்க்க மிரத்தம் பீச்சும்
பாலாடை போன்றதன்மே லாகத் தோன்றும்
தடித்தநோ யகலக்கல் லத்திப் பிஞ்சு
தான்பத்து பலம்வீழி யிலைநான்கு பிடியும்
குடித்திடமுப் படிக்காடி தனிலி டித்துக்
கொடுத்திடுவாய் மூன்றுநாட் குணமுண் டாமே. (216)

### இதுவுமது.

உண்டாகு மின்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
உடம்புவெப்ப மாயிரத்தந் தண்ணீர் பீச்சும்
பண்டிரண்டு பத்துபல மத்திப் பட்டை
பாங்காகக் கல்லுரலிற் போட்டுக் காடி
கொண்டுதெளித் திடித்திரண்டு படியாஞ் சாறு
கூசாம லெடுத்துநாள் மூன்ற தூட்டி
விண்டபடி வலப்புறத்திற் சூடு போட
விலகிடுமிப் பிணியதுவு மின்ன மொன்றே. (217)



### கல்லுதிர நோய்.

ஒன்றதுவாங் கல்லுதிர நோயின் செய்கை
உடம்பெங்கும் பலாக்காய்முட் போலத் தோன்றும்
நன்றதுவாம் வாயிற்புண் ணுகுந் திர
நவிலபெருங் காயங்கல் மதம்வெள் ளுள்ளி
நின்றவகைக் கொருபலமீ ருள்ளிபலம் பத்து
நிறையரைத்து மூன்றுபடி மோரிற் கூட்டி
வென்றவிப் பிணியகல நாள்மூன் றூட்டு
மெதினியி லின்னமொரு மார்க்கங் கேளே. (218)

### செவ்வுதிர நோய்.

மார்க்கமாஞ் செவ்வுதிர நோயின் செய்கை
வழுத்துவேன் சாணமுட னுதிரம் வீழும்
சேர்க்கக்கண் குழியாகிச் சிவந்தி ருக்கும்
சிலிர்க்குமே மயிரதுவுந் தீரு தற்கு
கோர்க்கையாங் கல்லத்திப் பட்டைபலம் பத்து
கூறியநற் கருவேலாம் பட்டை யோடு
மூர்க்கலவங் கப்பட்டை வகைக்கஞ்சு பலமாம்
மொழிந்தமூன் றையுமிடித்துக் காடி விட்டே. (219)

### உதிரங்கொண்ட நோய்.

விட்டதனைப் பிசைந்துமரைப் படியாஞ் சாறு
விரைவாக வெடுத்தரைக்காற் படிநல் லெண்ணெய்
திட்டமுட னொன்றாகக் கலக்கி மூன்று
தினங்கொடுக்க குணமுதிரங் கொண்ட நோயும்

முட்டநாக் கதுவீங்கி வெளியிற் றள்ளும்
மூக்குதிரம் வடியுமிரை தின்றி டாது
கட்டமிந்நோய் தீரவா வரைவேர்ப் பட்டை
கடியகரு வேப்பிலைகி ரந்திரா யகமே. (220)

## உதிரச்செங்கமாரி நோய்.

நாயகமும் வகைவகைக்குப் பிடியு மூன்று
நன்றாக வரைத்துக்கா டியிற்க லக்கி
சேயனே கொடுத்துப்பின் கிரந்திரா யகத்தைத்
திடமாக வரைத்துடம்பிற் றுவாலை போடு
மாயமா முதிரசெங்க மாரி நோயும்
வழுத்திரத்தம் போலாக நீர்வி டுக்கும்
ஆயநா ழிகைக்கொருக்காற் செருமி நிற்கும்
அதன்மூக்கி லிரத்தம்வரு மகலப் பாரே. (221)

## இதுவுமது.

பார்க்கவீ ருள்ளியதும் பலமி ரண்டு
பண்பான வசம்புபலங் காலி னோடு
சேர்க்கத்தை வேளைசிறு தும்பை நொச்சி
திடமுருங்கை யிவைபெல்லா மிலைவ கைக்கு
தீர்க்கமொரு பிடியரைத்துக் காடி தன்னிற்
செவ்வையாய்க் கலக்கியூட் டிடவே தீரும்.
மூர்க்கமிந்த நோயகல வேறு மார்க்கம்
மொழிகுவேன் வெங்காயம் பலமி ரண்டே. (222)

## செங்கமாரி நோய்.

இரண்டுடனே யதிமதுர மிளகு சுக்கு
இயலுஞ்சீ ரகமும்வகைக் கரைப்ப லந்தான்
மிரண்டிடாப் பெருங்காயம் பலமும் வீசம்
மிக்கவரைத் தேசிந்தி யிலையின் சாறு
முரண்டிடாப் படியொன்றிற் கலக்கி யூட்டி
முக்கியமா யிடதுவிலாச் சூடு போட
திரண்டபிணி யதுவிலகுஞ் செங்க மாரி
திடநோயின் செய்கையதைச் செப்பு வேனே.

## இதுவுமது.

செப்பவே கண்சிவக்கும் புருவம் வீங்கும்
தீவனத்தின் ஞதுதண்ணீ ராகப் பீச்சும்
ஒப்பவே யபானமதுங் கடுத்து முக்கும்
உதிரம்போல் நீர்விடுக்குந் திரு தற்கு
தப்பிலா மாம்பட்டை நாவற் பட்டை
சரியாக நீர்ப்பூலா வேரின் பட்டை
வெப்பிலா முசுட்டையிலை வீழியிலை வகைக்கு
விரும்பிமாங் காயினள வாய வரைத்தே. (224)

## இதுவுமது.

அரைத்துமே யிரண்டுபடி நெற் பொரித்து
அதையிடித்து மாவாக்கி யொன்று சேர்த்து
கரைத்திடுவாய்ப் பசுவானு லெருமை மோரும்
கருதுமெரு மைக்கானு லாவின் மோரும்
உரைத்திடுவே னதிற்கலக்கிக் கொடுக்க நன்றும்
உத்தமனே யின்னமொரு மருந்தைச் சொல்வேன்
நிரைத்திடுநல் லெண்ணெய்படி யரையி னேடு
நேரிழையின் குயப்பாலும் படியுங் காலே. (225)

## கோமாரி நோய்.

படியமாங் காயளவு சந்தனந் தான்
பழங்காடி படியொன்றிற் கலக்கி யூட்டி
துடியாக விடதுவிலாச் சூடு போட
சுகமாகுங் கோமாரி நோயின் செய்கை
கொடிதா மாரம்பமதிற் பசித்தி டாது
கூறவா யுலர்ந்துநா சியுஞ்சி வக்கும்
வடிவுமெய் காயுமசைப் போட்டி டாது
வாய்மூக்குக் காற்குளம்பின் றேலின் மேலே. (226)

## இதுவுமது.

மேலதிலுங் காற்குழம்பி னிடுக்குக் குள்ளும்
மிகுந்தகொப் பளங்களுண்டாஞ் சோம்பி நிற்கும்
சாலவிரை தின்னுமுத் தினத்துக் கப்பாற்
றுன்மூக்கில் நீர்வடியுங் காலினடிப் பக்கம்

ஓலமிட் டிடவீங்கும் சிறியகுளம் புண்டாம்
உற்றவைந்தாம் நாளில்மேற் சொன்னகொப் பளங்கள்
கோலமுறச் சிறியபுண்க ளாகத் தோன்றும்
கூசியது நடக்காது நொண்டும் பாரே. (227)

## இதுவுமது.

பார்க்கவிந்த வியாதியற் பமான போதும்
பாரிதுவுண் டானவுடன் பார்க்கா விட்டால்
தீர்க்கமுன்சொல் லிடங்களிலே புழுவுண் டாகி
திகழ்நொண்டி யாமலது மோச மாகும்
ஏர்க்கமுன்னே யிந்நோயைத் தடுப்ப தற்கு
இசைந்தவரைப் படிதேங்கா யெண்ணெய் தன்னில்
சேர்க்கவே கற்பூர மெட்டுத் தோலாத்
திடமாகப் பொடிசெய்து போட்டு வைத்தே. (228)

## இதுவுமது.

போட்டுவைத் திருந்துபுண் களிலே பூச
பொருந்தியதோர் புழுவகன்று சாந்த மாகும்
மாட்டுக்குக் காய்ச்சலுந்தா னதிக மானல்
வளமான கற்பூர மரைய ரைக்கால்
நாட்டுபொட்டி லுப்பதுவு மரைய ரைக்கால்
நவிலிரண்டுந் தோலாவா மிதைநு ணுக்கி
ஊட்டிடவே சுகமாகு மதன்பின் பாக
உற்றகடுக் காய்த்தோடும் பலம தொன்றே. (229)

## இதுவுமது.

ஒன்றான மாச்சக்கா யன்ன பேதி
உயர்கொட்டைப் பாக்குவெள்ளைக் காசுக் கட்டி
நின்றான நிறைவகைக்குப் பலம தொன்று
நேராகும் படிக்காரம் பலம ரைக்கால்
நன்றாக யிவையனைத்தும் பொடிதான் செய்து
நல்லகரு வாடுறப் போட்ட தண்ணீர்
குன்றும லிரண்டுபடி யதனிற் சேர்த்து
குணமாகப் புண்களின்மே லாகப் போடே. (230)

## இதுவுமது.

போடநல மேற்சொன்ன மருந்தி னேடு
பொருந்தும்வா ழைக்கனியும் நான்கு சேர்த்து
நாட்மா டதற்குநீ யூட்டி ணக்கால்
நன்மையாம்ஆறுசேங் கொட்டை தன்னை
சாடவே பொடித்துக்கேழ் வரகின் மாவும்
தானுமரைப் படிசேர்த்துத் தண்ணீர் விட்டு
தேடவே பிசைந்தூட்டச் சுரமுந் தீரும்
தீர்ந்தபின் குளிர்ந்தநீ ரதனிற் றுனே. (231)

## இதுவுமது.

நீரதனி லிரண்டரை நாழிகை நிறுத்த
நோாகுஞ் சாந்தியொன்று நிகழ்த்தக் கேளு
சாரம்தி வாரத்திற் கொடிவேலி யிலையைத்
தான்பரித்து வந்துசெவ்வா யுதிக்கு முன்பு
நேரவே வாசலதிற் பொங்க விட்டு
நினைத்துபக வான்றனக்கு பூசை செய்து.
சேரவே வாசலிலும் புரையி லுந்தான்
திடமாகப் புதைத்திடவே சாந்த மாமே. (232)

## புலமாரிநோய்.

ஆமப்பா புலமாரி நோயின் செய்கை
அதுவுமத்தி யானத்தில் வலிப்புத் தோற்றும்
தாமப்பா வாயில்நொங்கு நுரையாய்த் தள்ளும்
தன்பின்னங் காலதனைத் தூக்கி நிற்கும்
வாமப்பா நெகிழ்ச்சியதாய்ச் சாணம் போடும்
வகையாகத் தீவனமுந் தின்றி டாது
வேமப்பா திருதற்கு வெப்பூ லாத்தி
வேரும்பேய் முசுட்டைபலம் வகைக்கு மைந்தே. (233)

## வாய்கோமாரி நோய்.

பலமரையாம் வேப்பம்பூச் சேர்த்த ரைத்து
பசுவின்பாற் படியிரண்டிற் கலக்கி யூட்டி
நலமான வெந்நீரைக் குடிக்கக் காட்டி
நாற்காலுஞ் சூடிடவே நோயுந் தீரும்

இல்குவாய்க் கோமாரி நோயின் செய்கை
இயம்புவாய்ப் புண்ணாகி நீருஞ் சிந்தி
நிலமதனிற் புல்வைக்கோல் மேய்ந்தி டாது
நிலைமயங்கித் தியங்கியுலர்ந் தயரும் பாரே. (234)

## இதுவுமது.

பார்க்கவிந் நோயதுவுந் தீர வாழைப்
பழங்க ளைம்பதுவெல்லம் பலந்தா னைந்து
சேர்க்கைபல நெய்யுங்காற் படிய தாகத்
திரட்டியே கொடுக்கநன்ரு மிதுவு மன்றேல்
கோர்க்கைபச் சரிசிபச்சை பயறுங் கூட்டி
கொதிக்கவைத்துக் கஞ்சியதாய் கலக்கி யூட்டு
தீர்க்கவே யின்னமிந்த முறையைக் கேளு
செப்புவேன் கடுக்காயின் பிஞ்சு பத்தே. (235)

## இதுவுமது.

பத்ததனிற் பாதிவாழைக் கனியி னோடு
பகர்வீழி யிலைசின்னத் தேங்காயி னளவு
வைத்தரைத்தே யரைப்படியாம் பசுவின் பாலில்
வாகாகக் கலக்கியே கொடுக்க நன்ரும்
உத்தமனே யின்னமொரு மருந்தைக் கேளு
உற்றநா வற்பட்டை யளவு மாங்காய்
சுத்தநீர் விட்டரைத்துத் துளசியிலைச் சாறு
சொற்பசுவின் படிவகைக்குப் படிகா லாமே. (236)

## இதுவுமது.

ஆமப்பா சேர்த்தூட்டச் சாந்த மாகும்
அதன்பிறகு மாச்சக்கா யன்ன பேதி
தாமப்பா வெண்மையாங் காசுக் கட்டி
தனிக்கொட்டைப் பாக்குடனே கடுக்காய்த் தோடும்
நேமப்பா நிறைவகைக்குப் பலம தொன்று
நிதானமாய்ப் படிக்காரம் பலம ரைக்கால்
வாமப்பா யிவையெல்லாந் தூளாய்ச் செய்து
வளமான நாக்கதனிற் றடவ நன்றே. (237)

## செம்மாரி நோய்.

நன்றதாஞ் செம்மாரி நொயின் செய்கை
நவிலுடம்பு மெலிவாகிக் குளிர்ந் திருக்கும்
நின்றதுநீர் விடும்போது நிலம்ப றண்டும்
நீழ்வெயிலிற் கால்நீட்டிப் படுத்துக் கொள்ளும்
அன்றதுவால் வீசாது தீரு தற்கு
அருமையுள வெள்ளறுகு பலமி ரண்டு
வென்றவெங் தயமிஞ்சி வெள்ளைப் பூடு
மேலுயர்ந்த சித்திரப்பா லாடை சேரே. (238)

## நெறி நோய்.

சேரப்பா வகைவகைக்குப் பலம தொன்றை
சேகரமா யரைத்திரண்டு படியாங் காடி
நேரப்பா கலக்கியிட் டிடநன் றாகும்
நிகழ்த்துவேன் நெறிநோயின் செய்கை தன்னை
தேரப்பா சாணிநூர் நாற்ற முண்டாம்
செப்புவயி றிறையுங்கண் பீளை சாடும்
சீரப்பா வாயில்நீர் வடியுமுடப் புல்லைத்
தின்னுமது தீருதற்குச் சுக்குபல மிரண்டே. (239)

## இதுவுமது.

பலமரைசீ ரகமெருக்கி னிலைபிடியு மொன்று
பாங்காக வரைத்துமிரு படியாவின் பாலில்
நலமாகக் கலக்கியதை கொடுக்கத் தீரும்
நாட்டுவே னின்னமொரு மருந்தைக் கேளு
பொலமான சீரகமுங் கரியசீ ரகமும்
பொருந்துபழம் புளியோமங் கீழ்க்காய் நெல்லி
நிலமதனில் வகைக்குமொரு பலமெ டுத்து
நிறுத்துகுழித் தாமரையி னிலைபிடிய தொன்றே. (240)

## அமுது நெறிநோய்.

பிடியொன்றைச் சேர்த்தரைத்துக் கொடுத்துப் பின்பு
பிசகிலா திரண்டுவிலாச் சூடு போடத்
துடியாமிந் நோயகலும் அமுதுநெறி நோயை
சொல்லநீர்த் தாரைவழி யிரத்தஞ் சிந்தும்

சூடு சூர் ட

அடிக்கடிதண் ணீர்குடிக்கும் பற்க டிக்கும்
அரியசெவி தாழுங்கண் பீளை சாடும்
கொடிதகல விலாமிச்சம் வேர ரைத்துக்
குணமான செங்கழுநீர்த் தண்டின் சாறே. (241)

பொரி நோய்.

தண்டின்சா றுடன்சேர்த்தே இளவெந் நீரிற்
றுன்கலக்கிக் கொடுத்திடவிந் நோயுந் தீரும்
விண்டிடுவேன் மற்றுங்கற் றாழை வேரும்
விரும்பிமுடக் கத்தானின் வேருஞ் சேர்த்து
பண்டரைத்துக் காடியதிற் கலக்கி யூட்டப்
பகலவனைக் கண்டபனிப் போல நீங்கும்
கண்டிடுவாய்ப் பொரிநோயின் செய்கை தன்னை
காணுமுடற் புள்ளிபுள்ளி யாகத் தானே. (242)

இதுவுமது.

புள்ளிபொரி யாமயிரு முதிர்ந்து புண்ணும்
புகலுஞ்சீ ரகமோமம் இனமுமொரு பலமாம்
உள்ளிபல மைந்துமதி மதுரப் பட்டை
உற்றலவங் கப்பட்டை வகைக்குமிரு பலமாம்
*நள்ளியாம் பற்பூமாங் காயளவ தாக
நாடியரைத் திருபடிமோ ரிற்க லக்கி
உள்ளிதமாய்க் கொடுத்திடநோய் சாந்த மாகும்
உன்னதமா மின்னமொரு செய்கை கேளே. (243)

இதுவுமது.

கேளப்பா மயிருதிர்ந்து புண்ண தாகும்
கீர்த்தியுறப் பெருங்குமட்டிக் காய றுத்து
வாளப்பா வதிலுப்பைப் போட்டு வைத்து
வளமாமுப் பதுநாழி சென்ற பின்பு
தாளப்பா மாட்டினுட சரீர முற்றுந்
தான்றேய்த்து விட்டுமறு நாளிற் காலை
கோளப்பா விலகுழுப் பாட்ட வேண்டும்
கூசாதிப் படிநான்கு தினமுஞ் செய்யே. (244)

* நள்ளி—உறவு.

### இதுவுமது.


செய்யநன் காகுமின்னோர் செய்கை கேளு
தேகமெங்குஞ் சிரங்காக வெடிக்குந் திர
துய்யகண்டங் கத்திரிசெந் தட்டிமுசு முசுக்கை
துலங்குநெருப் படியிலையாம் பிரண்டைத் தண்டு
உய்யவகைக் கொருபலமாந் துருசு துத்தம்
உறவகைக் குப்பலங்கா லாமிவைக ளெல்லாம்
நய்யவே யிடித்துச்சா றெடுத்துத் தண்ணீர்
நவிலிரண்டு படிவிட்டு நாள்மூன் றாட்டே. (245)

### இதுவுமது.

ஊட்டநன்றுந் தவளைநண் டுடும்பு பன்றி
உறுமிவையின் நெய்வகைக்குப் படிகா லாக
நாட்டவொரு மண்பாண்டந் தன்னி விட்டு
நலமான வவ்வாலைப் பிடித்துப் போட்டு
பூட்டமேற் சட்டியிட்டுப் பூமி தன்னில்
புதைத்துமொரு மண்டலந்தான் சென்றெ டுத்து
தேட்டமாய்ப் பன்றிநெய்ப் படியுஞ் சேர்த்து
தினமுங்காற் படிவீதங் கொடுக்க நன்றே. (246)

### சொரி நோய்.

நன்றதாம் விலாவிரண்டிற் சூடு போட
நவிலுவேன் சொரிநோயின் செய்கை தன்னை
ஒன்றதுடல் நமச்சலுண்டா யுரசுமயி ருதிரும்
உற்றவிடம் புண்ணுகுந் தீரு தற்கு
வென்றவீ ருள்ளிவசம் பெட்டிக் கொட்டை
விளம்புமிவை சமனிடையா யிடித்துக் கொண்டு
தொன்றவித்த விளக்கெண்ணெய் தனிற்கு முப்பி
சூரியன்முன் காயவைத் தெடுத்துப் பூசே. (247)



### வரிநோய்.

பூசிவா நலமாகும் வரிநோய் செய்கை
புகலவே யுடல்நடுங்கும் வாய்நீர் சிந்தும்
கூசியே நாயோட்ட மாக வோடிக்
குறுகிநிற்கும் நடக்காது நாக்கை நீட்டும்




பேசிடுவேன் விலகவெருக் கலையின் சாறு
பேணுமரைக் காற்படிவேப் பெண்ணெய்ப்படி காலும்
யோசிக்கா மற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
ஓங்குவிலா விரண்டதனிற் சூடு போடே. (248)

### விரிநோய்.

போடசுக மாம்விரிநோய் செய்கை சொல்வேன்
பொருந்தவே யளிமேய்ச்ச லாக மேயும்
நாடவே கலைந்தலைந்து பறபறெனப் பார்க்கும்
நார்களைக்கண் டாற்றுரத்திப் பாயும் பின்பு
சாடக்கண் தெரியாது தியங்குந் தீர
சாளைமீன் முப்பதையுங் கொணர்ந் தரைத்து
தேட*தே சிச்சாறு படியி ரண்டில்
திடமாகக் கலக்கியிட்டு வெந்நீர் காட்டே. (249)

### யானைச்சொரி நோய்.



காட்டிப்பின் பிடதுவிலாச் சூடு போட
கதித்தநோய் சுகமானைச் சொரிநோய் செய்கை
வாட்டியுடற் சொரிசொரியாய் நவச்ச லுண்டாம்
வகையதற்கு வசம்பெட்டிக் கொட்டையீ ருள்ளி
கோட்டியிலா வகைவகைக்குப் பலம தைந்து
கூசாமற் றனித்தனியா யிடித்துக் கொண்டு
நாட்டவித்த விளக்கெண்ணெய் தன்னிற் போட்டு
நலமாகச் சூரியன்முன் காய வைத்தே (250)

### எரிநோய்.

வைத்ததனை யுடம்பெங்கும் பூசிக் கொண்டு
வாத்திரு மெரிநோயின் செய்கை கேளு
நத்தியுடற் றினவெடுத்துத் தேய்த்துக் கொள்ளும்
நடுங்குங்காற் குளம்புகளும் நேடுமூச் சுண்டாம்
சுத்திவாய் நீர்வடியுந் தீரு தற்கு
சொல்லுவேன் கற்பூர வல்லிச் சாறு
பத்திபடி யிரண்டுவெற் றிலையின் சாறு
படியாம்வேப் பெண்ணெயரைப் படிய தாமே. (251)


* தேசி—எலுமிச்சம் பழம்.

### சுரி நோய்.

ஆமப்பா யிவையெல்லா மொன்றாய்ச் சேர்த்து
அப்பனே குடிக்கவிட்டு வெந்நீர் காட்ட
பேர்மப்பா பிணியதுவுஞ் சுரிநோய் செய்கை
புகலுவேன் பற்கடிக்கும் வெயிலிற் காயும்
தாமப்பா கொட்டாவி விட்டு நிற்குந்
தானுமசைப் போடாது தீரு தற்கு
நாமப்பா வசம்புபலங் காலி னோடு
நல்லதொரு வெங்காயம் பலம தொன்றே. (252)

### எரிகால் நோய்.

ஒன்றநிம் பப்பட்டை பலம தைந்து
உற்றதோர் நெல்லரிசிப் படிதா னைந்து
கன்றபுளித் தக்காடி விட்டுக் கூழாய்க்
காய்ச்சியொரு வேளையிரு படிய தாக
மன்றதனி லூட்டியிட விலாவிற் சூடு
வளமாகப் போட்டிடவே சுகமுண் டாகும்
வென்றவெரி கால்நோயின் செய்கை தன்னை
விளம்பநாற் காலுதறி எறியும் பாரே. (253)



### இதுவுமது.

பார்க்கவே செவிதாழு முதிரம் வீழும்
பண்பான வுடம்பெங்குங் குஷ்டம் போலாம்
சேர்க்கையிது தீரவா வரையின் பட்டை
செப்புமுப் பலங்கடுக்காய்ப் பூப்பலம தொன்று
தீர்க்கமிவை யரைத்துக்கா டியிற்க லக்கி
திடமாகக் கொடுநலமா மின்ன மொன்று
கோர்க்கைக்கோ டங்கிழங்கை யரைத்தா வின்பால்
கொடுக்ககுண மாகுமற் றொன்ற தாமே. (254)

### இதுவுமது.

ஆமப்பா யிப்பிணியு முதிர்ச்சி யானால்
அதுவுமே வலிப்பாகத் தோன்றும் பாரு
தாமப்பா வதற்குநல் ணெய்ப்படி காலும்
தனிக்கரிப்பான் சாறுபடி யரையி னோடு

நாமப்பா காணமொரு பலம ரைத்து
நன்றாக வேகலக்கிக் கொடுக்கத் தீரும்
வாமப்பா யின்னமொரு விபரங் கேளு
வழுத்துவேன் தகரையிலைப் பிடியு மைந்தே. (255)

## நாரைக்கால் நோய்:

ஐந்தையுங் காடிவிட் டிடித்து நன்றாய்
அரைப்படிச்சா றெடுத்துமொரு பலங்கோஷ் டத்தை
முந்தவரைத் தேகலக்கிக் கொடுக்கத் தீரும்
முறையும்வே றௌ்ளுப்பிண் ணாக்குக் காணம்
தொந்தமா யிடித்துக்கா டியிற்க லக்கித்
துணிவாகக் கொடுத்திடவே சாந்த மாகும்
மந்தமாம் நாரைக்கால் நோயின் செய்கை
மயிர்சிலிர்த்துக் கொண்டுவயி றாதும் பாரே. (256)


## இதுவுமது.

பாரப்பா நாற்காலுங் கூனி நிற்கும்
பண்பான வாயதனில் வடியும் நீரு
நேரப்பா விப்பிணியுந் தீரு தற்கு
நிகழ்த்துவே னீருள்ளி சுரைப் பழுப்பு
சேரப்பா வகைக்குமொரு பலம தாக
சிந்திடா தரைத்துமரைப் படியாஞ் சாறு உ ஓம் ஸ்ரீ
சீரப்பா வெடுத்துநாள் மூன்ற நூட்டி
திடமாக யிடதுவிலாச் சூடு போட (257)

## பந்தக்கால் நோய்.

போட்டுகருங் காணம்வர கரிசி சேர்த்துப்
பொருந்தவரைத் தேகொஞ்சங் காடி விட்டுத்
தீட்டுவாய் நசியமதாய்ச் சாந்த மாகும்
திடமான பந்தக்கால் நோயின் செய்கை
நாட்டுவயி றாதுமது தீரு தற்கு
நல்லசிறு வழுதலங்காய்க் கொண்டு வந்து
மூட்டுசட்டி யிற்போட்டு வறுத் தெடுத்து
முத்தாம ணக்கெண்ணெ யுழக்கு விட்டே. (258)

## குடலெரி நோய்.



விட்டுக்கல் லுப்பதுவு மொருசி ரங்கை
விரைவாகப் பொடிசெய்தே குழப்பி யூட்டித்
திட்டமுடன் கட்டாரிச் சூடு போடத்
திடமாகும் குடலெரிநோய் செய்கை சொல்வேன்
நட்டமிலா திருந்தவுடற் சூடுண் டாகி
நாடிவந்த வயிற்றுவலி தீர்க்கா தாலும்
தொட்டுகுளி ரீரத்தும் நடந்த தாலும்
தொடர்ந்தபிணி யிதுவயிற்று நோயைப் போலே (259)

## இதுவுமது.

போலவே நிலைத்துவர வரப்பி லக்கும்
பொருந்துநடுக் கத்தோடு காய்ச்ச லுண்டாம்
சாலக்கண் களினிரப்பைத் தொலியி ரத்தங்
தான்கட்டி வீங்குங்கால் காது கொம்பும்
மேலதுவுங் குளிர்ந்திருக்கு மூச்சுதீ விரமாம்
மெல்லியதோர் நாடிபட படத்த டிக்கும்
கோலவடி வயிறதனை யமுக்கில் நோகும்
கொடுமைமிகு மிப்பிணியுந் தீரு தற்கே. (260)

## இதுவுமது.

தீரவபீன் றேலாமுக் காவி னேடு
சிறந்தநெய்ப் படியதுவு மூணு வீசம்
சேரவே கொடுத்துவெது வெதுப்பாம் வெந்நீர்
திடபீச்சாங் குழலதினு லாச னத்துள்
நேரவே யடித்துகொதி வெந்நீர் தன்னில்
நிகழுங்கம் பளியமுக்கிப் பிழிந்தெ டுத்துத்
தேரவொத் தனங்கொடுக்க நோயுந் தீரும்
செப்புவேன் காரைநோய் செய்கை தானே. (261)

## காரைநோய்.

தானப்பா சினங்கொண்டு நரரைப் பாயுங்
தண்ணீரைப் பலகாலு மிகக்கு டிக்கும்
வேனப்பா வளிமேய்ச்சல் மேயுந் தீர
விளங்குகருங் காணமரைப் படியி னேடு


கானப்பா வாவரையும் பலம தொன்று
கதித்தகரு ணைக்கிழங்கு மரைப்ப லந்தான்
கோணப்பா வரைத்துவைத்து மறுநா டன்னில்
கூசாமற் காற்படிவேப் பெண்ணெய் விட்டே. (262)

## இதுவுமது.

விட்டதனைக் கலக்கியே கொடுக்க நன்றாம்
விளம்புவே னின்னமொரு வகையைக்கேளு
அட்டுமா வரையிலையுஞ் சிறிய தேங்காய்
அளவிடித் திளநீரி லூற வைத்து
திட்டமறு நாளிற்காற் படிநல் லெண்ணெய்
சேர்த்துமே கொடுத்திடது விலாவிற் சூடு
மட்டுமே போட்டிடநோ யதுவுந் தீரும்
வரும்பிணியின் செய்கையதைச் சொல்லுவேனே (263)

## கோரை நோய்.

சொல்லக்கண் தெரியாது அசைப்போ டாது
சுழற்றியே வாலதனை விரைந்து வீசும்
நல்லுடம்பு வற்றிவருந் தீரு தற்கு
நாவற்பட் டையுந்தேங்கா யளவ ரைத்து
புள்ளவிரு படிகாடி கலக்கி யூட்டி
பொருந்தக்கா விற்சூடு போட நன்றாம்
வெல்லவருங் கோரைநோய் செய்கை கேளு
விளம்புவேன் வாய்மூக்கில் வடியும் நீரே. (264)



## இதுவுமது.

நீரப்பா மூக்கதனில் வேர்க்கும் பாரு
நேரின்றி யரைமேய்ச்ச லாக மேயும்
சீரப்பா மயிர்சிலிர்க்குந் தீரு தற்கு
செப்புமா வரைவேரின் பட்டை தன்னை
நேரப்பா வெந்நீர்விட் டிடித்துச் சாறு
நிறைநாழி யிரண்டுநல் லெண்ணெய்படி யரைக்கால்
சேரப்பா கலந்துநாள் மூன்ற தூட்டி
திடமிடது விலாவதனிற் சூடு போடே. (265)


### சாரைநோய்.

போடசுக மாஞ்சாரை நோயின் செய்கை
புகழுவேன் மயிர்சிலிர்க்குஞ் செவியுந் தாழும்
நாட்வயி றாதுமெழுந் திடாது தீர
நன்மிளகு மஞ்சள்வகைக் கரைப்ப லந்தான்
தேடவே சுக்குபல மொன்ற தாகும்
செப்புசா ரணைவேரும் பலம தைந்து
சாடவே பிரண்டைவேர்ப் பலமுங் காலாம்
தக்கபூ வரசுவே லிப்பருத்தி யிலையே. (266)

### இதுவுமது.

இலைவகைக்குப் பிடியொன்று சேர்த்தி டித்து
ஏற்றசா ராயமதிற் பிசைந் துருட்டி
நிலையாகக் கவளமதாய்க் கொடுத்துப் பின்பு
நோதும்பை சிறுகுறிஞ்சா யிலையி ரண்டும்
அலையாம லிடித்துச்சா றெடுத்து மாட்டின்
அங்கமெங்குந் துவாலையிட்டு வெந்நீர் காட்ட
மலைநிகர்த்த பிணியகலு மின்னோர் செய்கை
வழுத்தவாய் நீர்வடியும் நடந்தி டாதே. (267)

### சூரை நோய்.

நடக்காமல் நாயோட்ட மாக வோடி
நடுங்குமுடல் வாடிநிற்குந் தீரு தற்கு
துடக்கமா மெருக்கிலையின் சாறுபடி மூன்று
தூயவேப் பெண்ணெயரைப் படிக லந்து

அடக்கவே கொடுத்துநாற் காலி லுந்தான்
அடைவாகச் சூடிடவே நோயுந் தீரும்
இடக்காக வருஞ்சூரை நோயின் செய்கை
இசைந்தவயி றாதும்வாய் வடியும் நீரே. (268)

### நாரை நோய்.

நீர்வடியுந் தீரவெருக் கிலையின் சாறும்

நிகழும்நல் லெண்ணெயுந்தான் கலந்தே யூட்டி
நேர்மையாம் நெற்றியிற்சூ டிடநோய் தீரும்
நிறையாக வரும்நாரை நோயின் செய்கை

சீர்மையாய் நிற்காமற் கீழ்வி ழுந்து
சிரங்கழுத்தும் நீட்டிக்கொண் டேகி டக்கும்
பார்கன்னம் வீங்குமிரை தின்றி டாது
பண்பாயிந் நோயகலச் சொல்லு வேனே. (269)

## இதுவுமது.

சொல்லவே கிலுகிலுப்பை யிலைப்பிடியு மூன்று
துலங்கிலுப்பைப் பிண்ணாக்குப் பலம தொன்று
புல்லவிவை யரைத்துசிறு நீர்க லக்கி
புகட்டிமேற் படிமருந்தைக் கொதிக்க வைத்து
வெல்லவே நாள்மூன்று துவாலை போட
விலகுமிந்நோ யின்னமொரு முறையைக் கேளு
மல்லிலுப்பைப் பிண்ணாக்குப் பலமி ரண்டு
மதுக்காரை வேர்ப்பட்டைப் பலமி ரண்டே. (270)

## இதுவுமது.



இரண்டதையு மரைத்துக்கா டியிற்க லக்கி
இசைத்தூட்டி யிருகன்னஞ் சூடு போட
திரண்டபிணி யகன்றுவிடு மின்னோர் செய்கை
செப்புவயி றூதும்காற் கால்ந டுங்கும்
முரண்டவாய் நீர்வடியுந் தீரு தற்கு
முன்னம்வே லிப்பருத்திச் சாறுபடி யரையில்
பிரண்டவெள் ளெண்ணெய்ப்படி மூணு வீசம்
பிலமாகக் கலக்கிநாள் மூன்று மூட்டே. (271)

## இதுவுமது.

ஊட்டியே விலாவதனிற் சூடு போட
ஓடுமிப் பிணியதுவு மின்னோர் செய்கை
நாட்டிடுவேன் மயிர்க்காலும் வாயுங் கண்ணும்
நவிலிடத்தில் நீர்வடியும் வயிறு மூதும்
நீட்டியகால் தூக்கிவைக்குந் தீரு தற்கு
நிகழ்வெள்ளைப் பூடுமிளகுடன்வ சம்பு
தாட்டிகமா மிவ்வகைக்குப் பலம தொன்று
தனிக்கோழி யவரையரைப் படியாஞ் சாறே. (272)

## இதுவுமது.

சாறுடனே முன்மருந்தை யரைத்துச் சேர்த்து
தானூட்டி மற்றுநா ளுதய மப்பா
கூறுபுத்து மண்வசம்பு இலுப்ப ரைப்பு
குணமான பூடுவகைக் கொருப லந்தான்
வேறுபழம் பாசியிலைப் பிடியும் நான்கு
விரும்பியிவை யரைத்தூட்டி மாலை தன்னில்
மீறுமெருக் கிலைப்பழுப்பின் சாறெ டுத்து
மேலுமொரு பலக்கடுகை யரைத்துச் சேரே. (273)

## இதுவுமது.

சேர்த்துமே புகட்டிடுவாய் மூன்றும் நாளில்
சிறந்தசங்கி னோடுபீ னறிச் சங்கு
நேர்த்தியிவ் விலைவகைக்குப் பிடியு மூன்று
நிறையான மிளகுபல மொன்ற ரைத்து
சீர்த்தியாம் பசுநெய்யிற் கலக்கி யூட்டத்
தீருமிப் பிணியதுவு மின்ன மொன்று
பூர்த்தியாம் வசம்புள்ளி சுக்கு தன்னைப்
பொருந்தமா விலிங்கவிலைச் சாறெ டுத்தே. (274)

## இதுவுமது.

எடுத்ததனை விட்டரைத்துக் கொடுக்கத் தீரும்
இயம்புவே னின்னமொரு செய்கை தன்னை
அடுத்துமே விழுந்துவிழுந் தெழுந்து நிற்கும்
அதன்வயிறும் வீங்கும்நீர் வடியும் வாயில்
கடுத்தசதி யாயிருக்குந் தீரு தற்கு
கடியவே விப்பருத்திச் சாறுமொரு படியில்
விடுத்தாவின் மோருபடி காலி னோடு
விரும்புப்புப் படியரைக்கா லதனைக் கூட்டே (275)

## எழுநாரை நோய்.

கூட்டியே கலந்துநாள் மூன்ற தூட்ட
குணமாகு மெழுநாரை நோயின் செய்கை
நாட்டிலிரை தின்னாது கிடந்து பீச்சும்
நல்லுடலைத் தான்மடக்கிக் கொண்டி ருக்கும்

தேட்டக்கண் விழியாது தீரு தற்கு
செப்புமா வரைக்கொழுந்துந் தென்னம் பூவும்
கோட்டியிலாப் பீநாறிப் பட்டைதனித் தனியாய்க்
கூறிடுமாங் காயளவு சேர்த்த ரைத்தே. (276)

## இதுவுமது.

அரைத்துமிரு படிக்கமுநீர் தனிற்க லக்கி
அன்பாகக் கொடுத்திரண்டு விலாவி லுந்தான்
உரைத்தசூ டிட்டிடவே குணம தாகும்
உற்றுவரு மிப்பிணியின் செய்கை கேளு
விரைத்தநாற் கால்நடையுந் தளர்ச்சி யாகும்
விரும்பிநிழற் கிடவாது கிடந்து மேயும்
நிரைத்தவாற் கொண்டுதுடை மேல டிக்கும்
நிறையதனிற் புகுந்துநடு நிற்கும் பாரே. (277)

## எலும்புருக்கி நோய்.

பாரதற்கு மிளகோமம் வெங்கா யந்தான்
பகர்வீழி யிலையுடனே பருத்திப் பிஞ்சு
சேரமா தளம்பிஞ்சு மிவை வகைக்கு
செப்புபல மொன்றரைத் திருபடியா மிளநீர்
நேரவே கலக்கியிட் டிடநோய் தீரும்
நிகழ்த்துவே னெலும்புருக்கி நோயின் செய்கை
பாரதனிற் சிவப்பாகச் சாணம் போடும்
பகாதற்குத் தும்பையிலைப் பிடியும் நான்கே. (278)

## இதுவுமது.

நான்கதனைக் காடிவிட் டரைத்துப் பாலில்
நலமாகக் கலக்கிநாள் மூன்ற தூட்டித்

தோன்றவிட விலாவதனிற் சூடு போடச்
சுகமாகு மின்னமொரு செய்கை சொல்வேன்
ஆன்றசா ணத்துடனே யுதிரம் வீழும்
அதுவிலக நிலக்குமிழி வேரின் பட்டை
மூன்றவரைத் தேதயிறிற் கலக்கி நன்றாய்
உத்தமனே மூன்றுநாட் கொடுத்துப் பின்பே. (279)

## தவளை நோய்.

பின்புநெஞ் சுங்கழுத்துஞ் சூடு போடப்
பிணியகலுந் தவளையென்ற நோயின் செய்கை
தன்மையுள காண்மொழிக்கு மொழியும் வீங்கும்
தவழும்பிள் ளையைப்போலா மெழுந் திடாது
நன்மையாங் காற்குளம்பு நீளுந் தீர
நன்மேனி யிலைசுடலை யாவரையி னிலையும்
வன்மையாம் வகைவகைக்குப் பலமும் பத்து
மகிழ்ந்தரைத்து மொருபடிகா டியிற்க லக்கே. (280)

## இதுவுமது.

கலக்கியே கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
கலங்காது வலதுவிலாச் சூடு போட
நலமாகு மின்னமொரு செய்கை கேளு
நாடியே வயிறாது மயிர்சி லிர்க்கும்
பலமின்றி யெழுந்துநடக் காது தாழும்
பகாதற்கு மிளகுசா ரணையின் வேரும்
புலந்தெளியப் பலமந்தைத் தான ரைத்து
புகலுஞ்சா ராயமதிற் கலக்கி யூட்டே. (281)

## இதுவுமது.


ஊட்டிப்பின் மற்றுநா ளுதயந் தன்னில்
உற்றமஞ்ச ளீருள்ளி சுக்குமொரு வகைக்குக்
கூட்டிடுவாய்ப் பலமொன்று வசம்பு காலாம்
குணமிளகு பலமரையாம் பூவரசி னிலையும்
நாட்டுவே லிப்பருத்தி யிலைவ கைக்கு
நற்பிடியொன் றும்பிரண்டை வேர்தே சிக்காய்
பூட்டுமள வாயரைத்துக் கவள மாகப்
புகட்டநன்று மின்னமொரு முறையைக் கேளே. (282)

## இதுவுமது.

கேளப்பா சிறுகுறிஞ்சா யிலையின் சாறு
கிளறுமரைப் படியாக நாள்மூன் றூட்டி
வேளப்பா வச்சாற்றை மேனி முற்றும்
விரும்பியே துவாலையிட் டதன்பின் பாக

நாளப்பா மிளகுவசம் புடனீ ருள்ளி
நற்சிறிய தும்பையிலைக் குப்பை மேனி
மீளப்பா தைவேளை யிலைவ கைக்கு
மிகக்கொஞ்சங் கொணர்ந்திடித்து வடியுங் கட்டே. (283)

## இதுவுமது.



வடிகட்டிக் கண்மூக்குச் செவியி லூற்றி
மறவாமற் குடிக்கவெந் நீரைக் காட்டி
துடியாக யிடதுவிலாச் சூடு போடச்
சுகமாகு மின்னமொரு விபரஞ் சொல்வேன்
கடியவா தம்மடக்கி யிலைநொச்சி யிலையும்
கருதுமா விலிங்கயிலை வன்னியிலை வகைக்கு
படியவே பலம்பத்து மிளகு பூண்டு
பகருவேன் தனித்தனியாய்ப் பலம தொன்றே. (284)

## இதுவுமது.

ஒன்றுவெளிச் சிப்பிசினுங் கரியசீ ரகமும்
ஒருவகைக்கு விராகனிடை யிரண்டு சேர்த்து
நன்றுறவே யரைத்துநாள் மூன்ற தூட்ட
நாடாது பிணியிதுவு மின்னோர் செய்கை
நின்றிருக்கும் நாற்காலும் வீங்குந் தீர
நெற்பொரியை வறுத்துமிகப் பொடியுஞ் செய்து
குன்றிடாப்ப சுமோரை விட்டுக் காய்ச்சி
கூசாமற் கொடுத்துமே லெங்கும் பூசே. (285)

## இதுவுமது.

பூசநன்று மின்னமொரு முறையைக் கேளு
புகலுமா விலிங்கயிலை குப்பை மேனி
நேசத்தை வேளையொடு தும்பையிலை வகைக்கு
நிறையாகப் பலம்பத்து மிளகு பூடும்
வாசமாந் தனித்தனியே பலம தொன்று
வகையெல்லாஞ் சேர்த்தரைத்துக் கவள மாக
மோசமன்று கொடுத்திடவே சுகமுண் டாகும்
மொழியக்கேள் கரணைநோய் செய்கை, தானே. (286)

## கரணை நோய்.

தானதுவும் வெயிலிலிருக் காம லேகித்
தண்ணீரி லேபடுக்குஞ் செவியுந் தாழும்
பேர்னவலப் புறஞ்சாய்ந்து மேயுந் தீர
புகலத்திப் பிஞ்சுடனே பருத்திப் பிஞ்சு
ஆனதுவுந் தனித்தனியாய்ப் பிடிய தொன்று
அத்துடனேதாமீனைக் கழுவுந் தண்ணீர்
ஊனவே சாளைமச்ச மாங்காய் போல
உறவுரைத்து மூன்றுபடி பனையின் கள்ளே. (287)

## இதுவுமது.

கள்ளதனிற் கலக்கியே கொடுக்க நன்றும்
கழறுவே னின்னமொரு மார்க்கந் தன்னை
உள்ளபடி யேயானை வணங்கி யோடு
ஓரிலைத்தா மரைவகைக்கு மாங்காய் போல
துள்ளவரைத் தொருபடிபா லதிற்க லக்கி
சுகமாகக் கொடுத்துப்பின் னிடவி லாவில்
தெள்ளவே சூடிடநோய் சாந்த மாகும்
செப்புவே னின்னமொரு செய்கை தானே. (288)

## இதுவுமது.

தானப்பா அரைவாயாய்த் தீனி தின்னும்
தக்கவெயி லிற்போனு லிளைப்புண் டாகும்
வேனப்பா நிழல்பார்த்து வொதுங்கி நிற்கும்
விளம்பிலிது அசாத்தியமா நோய தாகும்
கோனப்பா விதற்குமா வரையின் பட்டை
கூறுபல மொன்றுபேய்க் குமட்டிக் காயும்
ஆனப்பா பலமிரண்டு மரைத்துக் காடி
யதிற்கலக்கி கொடுக்கநன்று மின்ன மொன்றே. (289)

## இதுவுமது.

ஒன்றப்பா மிளகதுவு மொருப லந்தான்
உற்றபெருங் காயமது பலங்கா லாகும்
நன்றப்பா சிறுதும்பைக் கண்டங்கத் திரியும்
நாடுவகைக் கொருபிடியா யரைத்து வெந்நீர்


அன்றப்பா கலக்கியே கொடுக்க நன்றாம்
அதுவன்றி யின்னமொரு முறையைக் கேளு
என்றப்பா வொருகுள்ள நரியி னீரல்
இரத்தமுந்தான் கூட்டியாற் றயிரை மீனே. (290)

## இதுவுமது.

மீனதுவும் படியொன்றைச் சேர்த்த ரைத்து
மிக்கவே பசுவின்பா விற்க லக்கித்
தானதனைக் கொடுக்கநன்று மின்ன மொன்று
சாற்றுவேன் காக்கைதனை பிடித்து வாட்டி
வேனதனின் காலிறகு ரோமம் போக்கி
விரைந்திடித்து நாய்க்கொட்டான் வேருமை பலத்தை
தோனவரைத் திருபடிகா டியிற்க லக்கி
சுகமாகக் கொடுத்ததன்பின் னுகக் கேளே. (291)


## அங்கிரி நோய்.

கேளப்பா அவரையிலை தனைய ரைத்து
கெடியான வுடம்பெங்குந் துவரலை போட்டு
நாளப்பா வெந்நீரைக் குடிக்கக் காட்டி
நலமான விலாவிரண்டிற் சூடு போட
கோளப்பா விலகுமங் கிரிநோய் செய்கை
கூறவே யிருகண்ணு மிரத்தம் போலாம்
வேளப்பா நீரமோர்ப் படிய தொன்றில்
மிருதுளசிச் சாறுமரைப் படியுங் கூட்டே. (292)



## இதுவுமது.


கூட்டபழம் புளிமாங்கா யளவெ டுத்துக்
குணமாகக் கரைத்ததனிற் கொடுத்துப் பின்பு
தேட்டமாம் வலதுவிலாச் சூடு போட
செப்புவேன் வேறுசெய்கை முக்கி நிற்கும்
நீட்டதற்கு நிலவாகை யிடித்து நன்றாய்
நீராகா ரத்திலதைக் கலக்கி யூட்டி
நாட்டவிரு விலாவிலுந்தான் சூடு போட
நலமாகும் புலத்தியனே யின்னம் பாரே. (293)



## அங்கி நோய்.

பார்க்கவங்கி நோயுங்கண் சிவக்கும் வாயில்
*பாணிசிந்துஞ் செவிதாழுங் கழுத்து வீங்கும்
தீர்க்கவூ மத்தையிலை மதுக்கா ரைவேர்த்
திடப்பட்டை வகைக்குமொரு பிடிய தோடு
சேர்க்கையா மிளகதுவும் படிய ரைக்கால்
செப்பவெருக் கிலைப்பழுப்பு மேழுங் கூட்டி
கோர்க்கையா மையதுபோ லரைத்துக் காடி
குணமாகக் கலக்கியதை நாள்மூன் றூட்டே. (294)

## மன்னி நோய்.



மூன்றுநா ளூட்டிவிலாச் சூடு போட
மொழிந்தநோய் விலகுமன்னி நோயின் செய்கை
ஆன்றவா யைப்பிளக்கு மிகநீர் சிந்தும்
அடுத்தடுத் தருமிநிற்கும் நாக்கை நீட்டும்
தோன்றக்கண் சிவப்பாகுந் தீரு தற்கு
சொல்லுங்கொல் லங்கோவைக் கிழங்க தொன்றும்
ஊன்றப்பேய் பீர்க்கங்காய்க் கூட தொன்றும்
உற்றபெருந் தும்பையிலைப் பிடியும் நான்கே (295)

## குன்னி நோய்.




பிடியிவையெல் லாமரைத்தே யகத்திச் சாறு
பிலக்கவரைப் படியதனிற் கலக்கி யூட்டி
துடியாக முதுகிற்கு டிடநோய் தீருஞ்
சொல்லுவேன் குன்னிநோய் செய்கை யப்பா
நெடியவுட லதைக்குன்னிக் கொண்டி ருக்கும்
நேருமுரோ மஞ்சிலிர்க்குந் தீரு தற்கு
வடிவான வசம்புசுக்கு வகைப்ப லங்கால்
வழுத்தோமம் பலமொன்றைச் சேர்த்த ரைத்தே. (296)

## இதுவுமது.

அரைத்திடுவா யாவரையி னிலையும் மாங்கா
யளவாகச் சேர்த்திளநீர்ப் படியு மொன்றிற்
கரைத்ததனை யூட்டிப்பின் வசம்பு சுக்கு
கருதுவெண் பூடுதை வேளை மேனி

*பாணி—நீர்.

திரைத்தரைத்துச் சிறுநீரிற் கலக்கிப் பின்னுந்
தெளியவடி கட்டிக்கண் காது மூக்கில்
நிரைத்தநசி யஞ்செய்து மிடவி லாவில்
நினைவாய்ச்சூ டிட்டிடவிந் நோயும் போமே.



### இதுவுமது.

போமப்பா யின்னமொரு செய்கை சொல்வேன்
பொருந்தவிரை தின்னாது குன்னி நிற்கும்
தாமப்பா வானத்தைப் பார்த்தி ருக்கும்
தப்பாது சொருக்குநீர் விடுக்குந் தீர
நேமப்பா பெருங்காயம் பலமரைக் கால்
நிறைமிளகு சுக்குவகைக் கொருப லந்தான்
வேமப்பா யிலுப்பரைப்புப் பலமும் வீசம்
வெண்பூண்டு பலமொன்று தேசிச் சாறே. (298)

### இதுவுமது.

சாறுகாற் படிவசம்பு காற்ப லந்தான்
தப்பிடாச் சிறுதும்பை நொச்சி மேனி
வேறுவகைக் கொருபிடியாய்ச் சேர்த்தி டித்து
மேலுமிரு படிசிறுநீர் விட்டே யூட்டிக்
கூறுமல்லி யுப்பரைத்து வடியுங் கட்டி
குணமாக செவிமூக்கு நசியம் பண்ண
மீறுபிணி யகன்றுவிடு மின்னோர் செய்கை
மிகக்குன்னி நடக்குமெல் வினமாய்ப் பாரே (299)


### குன்றி நோய்

பாரதற்கு மீருள்ளிப் பலம தைந்து
பகர்லவங்கப் பட்டையதும் பலமி ரண்டு
சேரமுருங் கைமூங்கி யிலைவ கைக்கு
செப்பவே மாங்காயி னளவ ரைத்து



அடிவயிறு

நேரவொரு படிகாடி தனிற்க லக்கி
நீகொடுத்தே யடிவயிற்றும் நாலு காலும்
தீரச்சூ டிடநன்றாங் குன்றி நோயின்
செய்கைமார் தரைப்பாயுஞ் சிவக்குங் கண்ணே.



நாலுகால்

### இதுவுமது.

கண்ணதற்கு வாகையிலை யிடித்துத் தென்னங்
கள்விட்டுப் பிசைந்துபடிச் சாறெடுத்து
உண்ணவே நாள்மூன்று கொடுத்துப் பின்பு
உற்றிடது விலாவதனிற் சூடு போட
நண்ணநல மாமின்னோர் செய்கை கேளு
நாடிவரும் வலிப்பதுவுந் திகைத்து நிற்கும்
வண்ணக்கண் சிவந்திருக்குந் தீரு தற்கு
வாகான வீழியிலை தனையி டித்தே. (301)

### இதுவுமது.

இடித்துச்சா றெடுத்துக்கோ மியமும் நாழி
இயல்பாக விட்டதனைக் கலக்கி யூட்டி
நடித்திரண்டு விலாவிலுஞ்சூ டிடநன் றாகும் உளளஉ
நற்சத்தி சாரணைவேர் கற்று மும்வேர்
பிடித்துதனித் தனியாக பலம தைந்து
பிசகாமற் காடிதெளித் தரைத்து மைப்போல்
தடித்தநாள் மூன்றாட்டச் சுகம தாகும்
சாற்றுவே னின்னமொரு செய்கை தானே. (302)

### இதுவுமது.

தானப்பா வலமலந்து மாளைப் பாயுந்
தனிவதற்குப் பச்சரிசி மாவுமரைப் படியில்
வேனப்பா வாவின்பால் நாழி விட்டு
விரும்பிநாள் மூன்றாட்டச் சுகம தாகும்
ஏனப்பா விதுவன்றி வேறு செய்கை
இயம்புவே னூற்காலுந் தத்த ளித்து
கோனப்பர் நடக்காது புன்மே யாது
குணமாகக் குன்றுமணி யிலையி னோடே. (303)

### குன்றிக்காய் நோய்.

ஓடவே கோடாரி யிலையுங் கூட்டி
உறவாகத் துவைத்துக்கா டியிற்க லக்கி
நாடவே கொடுக்கசுகங் குன்றிக் காய்நோய்
நவிலவே பொட்டுப்பொட் டாயி ரத்தம்

சாடவா னுடம்பதனில் வீழுந் தீர
சாணமதைக் கொதிக்கவைத்து வேது போட்டு
நீடப்பத் துத்தோலாக் கரியபவ ளத்தை
நிதானித்துக் காற்படிவெந் நீரிலூட்டே. (304)

## இதுவுமது.

ஊட்டப்பின் னும்வேறு செய்கை சொல்வேன்
உறப்பிணியும் வருத்தமதாய் நீர்வி டுக்கும்
நாட்டப்பின் பிசினுகத் தானி ரங்கும்
நலமின்றி யதன்பின்ன ரிரத்தம் வீழும்
சாட்டியமுங் காய்ச்சலுடன் முதுகுவளை வாகும்
தனித்துப்பா ரிடுப்பதனைத் தொட்டால் நோகும்
மேட்டிமையாய் நடக்கவிட்டாற் காலிழுக்கும்
மேலுமதி னுற்காய்ச்சல் மிகவுண் டாமே. (305)

## இதுவுமது.

உண்டாமிப் பிணியிடுப்பி லடித்த தாலும்
உறுங்கொடிய வுழைப்பாலுஞ் சுழிக்கி னுலும்
பண்டான குளிரீரத் திருந்த தாலும்
பழுதானத் தீனிகளைத் தின்ற தாலும்
கொண்டாடி வந்ததிந்த நோயுந் தீர
கூறுசிற்று மணக்கெண்ணெய்ப் படிய ரைக்கால்
மிண்டாகக் கொடுபத்துக் கடிகைக் கப்பால்
மிக்ககற் பூரமரை யபினுங் காலே. (306)

## இதுவுமது.

காலப்பாக் குரோசானி யோமந் தானுங்
கணக்குத்தோ லாவாகு மிவைக ளெல்லாம்
சால நுணுக் கிக்கதலிக் கனியில் வைத்துத்
தானூட்டி யிடுப்பிலொத் தனமு மிட்டு
தாலமதிற் கடுகரைத்து வாட்டுத் தோலிற்
றடவியே யிடுப்பின்மே லாகப் போடக்
கோலமுளப் பிணியகலும் பின்னுஞ் சொல்வேன்
குறிப்புநோ யிலையெனினுங் காய்ச்ச லுண்டே. (307)

### இதுவுமது.

உண்டுவிழி வாயினுக்குள் ளிருக்குஞ் சவ்வும்
உற்றமஞ்சள் நிறங்கண்டா லீர லுக்குள்
கண்டுபா ரீனமென்ற வடையா ளந்தான்
கருதுநீர் துவக்கத்தில் வெண்மை செம்மை
பண்டுகறு நிறம்போலா மிக்கு றிப்பு
பார்த்தறிவாய் முக்கியமா மழைகா லத்தில்
மண்டிவரும் பயிரதனைத் தின்ற தாலும்
மட்டுமிஞ்சிக் காணத்தைத் தின்ற தாலே. (308)

### இதுவுமது

தின்றதினு லும்பிணியுண் டாகுந் தீர
செப்புவிரோ சனமாகக் கொடுக்க வேண்டும்
நின்றதின்பின் சுக்குநில வேம்பி னீர்க்கு
நிறைவகைக்கு மரையரைக்காற் கரியபவ ளந்தான்
மன்றதனி லிரண்டரையாந் தோலா வென்ன
மதித்திடித்துக் கொடுத்துப்பின் முத்தி னத்தில்
வென்றியொரு நாளைக்கு மோர்போ தாக
விருப்பமுடன் கொடுத்திடுவாய்ப் பொட்டி லுப்பே. (309)

### இதுவுமது.

பொட்டிலுப்புத் தோலாமுக் கால ரைக்கால்
புகட்டிவரச் சுகமாகு மின்ன மொன்று
முட்டிவரும் போதசதி யாயி ருக்கும்
முதல்வெண்மைக் களிமண்போற் சாணம் போடும்
கட்டியாம் பின்புமலம் வாய்கண் ணுக்குட்
கலந்தசவ்வு மஞ்சள்நிற மாகக் காணும்
விட்டிடுநீர் கறுப்பூதா நிறமாய்த் தோணும்
மிதமிஞ்சி வருத்தமுறும் விடுக்கும் போதே. (310)

### இதுவுமது.

போதப்பா பித்தமதி கரித்தி ருக்கும்
புகலவதன் மலக்கட்டைக் கழிப்ப தற்கு
ஓதப்பா வொருதோலாக் கரியபவ ளத்தை
உறவெந்நீர் கலக்கிவிடு பேதி யாகும்

ஏதப்பாக் கசடின்ன மிருக்கு தென்று
எண்ணிஞ லிதனுடனே கள்ளேச் சேர்த்து
சூதப்பா நினேயாமற் கொடுத்தா யானல்
சுகமாகுங் குரல்நோயின் செய்கை தானே. (311)

## குரல் நோய்.

தானக வாலதனே விரைந்து வீசுந்
தடுமாறும் வாயைமூ டாதி ருக்கும்
வேணுகச் சத்தமிடு மிரைதின் ஞது
விலகவே திப்பிலியு மரைப்ப லந்தான்
வானக வெண்பூடு பலம தொன்று
வழுத்தும்பூ டளவுமிள கதுவுஞ் சேரு
கோணகப் பெருங்காயம் பலமரைக் கால்
குணமான வசம்புபலங் காலி ஞேடே. (312)

## இதுவுமது.


ஓடப்பா தைவேளைக் குப்பை மேனி
ஓங்குவெள் ளறுகுவகைக் குப்பிடிய தொன்று
நாடப்பா வரைத்துச்சா ராயம் விட்டு
நற்கவள மூட்டிடவே சாந்த மாகும்
ஈடப்பா வேறுவகை வெள்ளேப் பூண்டு
இடகடுகுந் தனித்தனியே பலம தொன்று
தேடப்பா பெருங்காயம் பலமரைக் கால்
சிறுதும்பை மூவரைக்காற் படியாஞ் சாறே. (313)

## குடல் நோய்.

படிவெந்நீர் முக்காவிற் கலக்கி யூட்டிப்
பண்புடனே குடிக்கவெந் நீரைக் காட்டி
துடியிரண்டு விலாவிலுமே சூடு போட
சுகமாகுங் குடல்நோயின் செய்கை தானும்
கடினமிலா வயிறாது மிரைதின் ஞது
கண்குழியு மயிர்சிலிர்க்குங் கிடைகொள் ளாது
நொடியின்ஞே யகன்றிடவீ ருள்ளி யிஞ்சி
நோங்குதனித் தனியாகப் பலம தொன்றே. (314)

### இதுவுமது.


பலமாமூ மத்தம்வே ரமுக்கி ராவேர்
பகர்வசம்பு வகைவகைக்குப் பலங்கா லாக
பிலக்கவரைத் திருபடிகா டியிற்க லக்கி
பிசகாமற் கொடுத்ததனிற் சிறிதெ டுத்து
நலமாகக் கண்மூக்கில் நசிய மிட்டு
நாடிப்பின் னெஞ்சதனிற் சூடு போட



சொலச்சுகமா மின்னமொரு செய்கை கேளு
தூயவயி றூதிவிழுந் தெழுகும் பாரே. (315)

### இதுவுமது.

பார்த்திடநா ளுக்குநா ளுடலம் வற்றும்
பண்பான வாயில்நீர் வடியுந் தீர
நேர்த்திவே லிப்பருத்திச் சாறுபடி காலில்
நிகமுப்புப் படியரைக்கா லேக்க ரைத்து




சீர்த்தியுறக் கொடுத்திடலா மதுவு மன்றேல்
சேருமுன் சாறுப்பு மோருங் கூட்டி
வார்த்துமே யிரண்டுவிலாச் சூடு போட
வல்லபிணி நீங்கிவிடு மென்று சொல்லே. (316

### குடல் முறுக்கு நோய்.

சொல்லவே குடல்முறுக்கு நோயின் செய்கை
குட்சியாய்க் கிடந்தகிடை கிடந்து காலை
மெல்லவே செதுக்கியது சாணம் போடும்
விலகுதற்கு நாய்ப்பாக விலையின் சாறு
புல்லாவின் பால்வகைக்குப் படியிற் பாதி
புகலரைக்காற் படியதனிற் கலக்கி யூட்டி
வெல்லமறு நாளதனி லகிலின் கட்டை
விரும்பியரைத் துக்காடி யூற வைத்தே. (317)

### குட்ட நோய்.

வைத்திருந்து கொடுத்துநெஞ்சிற் சூடு போட
வளமாகுங் குட்டநோய் செய்கை சொல்வேன்



எடுத்துமுடல் வில்வளைந்தாற் போல்வ ளைந்து
இருந்துவியர்க் கும்வாயி லிரத்தம் வீழும்

பத்தியநோய் தீரக்குட் டித்தக் காளி
பகரிலையின் சாறுபடி யரையெ டுத்து
நத்தியவெண் பூடரைத்துக் கலக்கி யூட்டி
நன்மருந்தின் மிச்சத்தைத் துவாலை போடே. (318)

## இதுவுமது.

போட்டுப்பின் விலாவிரண்டிற் சூடு போட
புகலும்நோ யகலுமின்னம் வேறு செய்கை
நாட்டுவே ணிருந்தாற்போ லிருந்தி ரத்தம்
நன்வாயில் வடியுமது தீரு தற்கு
பூட்டுதக் காளியிலை தனையி டித்து
பொருந்தவே சாறுமரைப் படியெ டுத்து
கூட்டுவெள்ளைப் பூண்டுபலங் கால ரைத்து
கூசாமற் கொடுத்ததனைத் துவாலை போடே. (319)

## சூலைப்பன் நோய்.

போடப்பா வின்னமொரு முறையைக் கேளு
புகலும்வே லிப்பருத்தி யிலைகொ ணர்ந்து
நாடப்பா மோரதனை விட்டி டித்து
நற்படிச்சா றெடுத்தூட்டி யிருவி லாவில்
சாடப்பா சூடிடவே நோயுந் தீரும்
சாற்றுவேன் சூலைப்பன்நோய் செய்கை தன்னை
சூடப்பா கண்குழியாஞ் செவியுந் தாழும்
சுருண்டுவிழுந் திருதற்கு வகைசொல் வேனே. (320)

## இதுவுமது.


சொல்முருங்கைப் பட்டையொடு முருக்கம் பட்டை
துலங்குபிராய் பட்டைவகைக் கொருப லந்தான்
புல்லவே யிடித்தெட்டுப் படிநீர் விட்டு
புகலரிசிக் குருணை தனைக் கூடப் போட்டு
நல்லகூ ழாய்க்காய்ச்சி யொருவே ளைக்கு
நாட்டுமொன் றரைப்படிவீ தங்கொ டுத்து
வெல்லவே யிடதுவிலாச் சூடு போட
விலகுமிப் பிணியதுவும் பின்னுங் கேளே. (321)

## கொடு நோய்.

கேளப்பா கொடுநோயின் செய்கை தன்னை
கெட்டலைபாய்ந் தேதிரியும் படுத்துக் கொள்ளும்
பாளப்பா பயித்தியம்போ லோடி நிற்கும்
பறபறப்பாய்த் தான்பார்க்குஞ் சத்தம் போடும்
கோளப்பா தீருதற்கு வில்வயிலை யோடு
கூறுசிறு கீரைவேர் முன்னையிலை மூன்றும்
வேளப்பா தனித்தனியே மாங்காய் போல
விரைந்தரைத்து மொருபடிவெள் ளாட்டு நீரே. (322)

## இதுவுமது.

நீரதனிற் கலக்கியிட்டு நெற்றிச் சூடு
நீபோடச் சுகமாகு மின்னோர் செய்கை
சேரவே காலதனை நகர்ந்து வைக்கும்
செப்புவலிப் புத்தோன்றும் வாய்நீர் சிந்தும்



தீரவே கண்வலிப்பூ விலைய ரைத்து
திடமாகக் காடியதிற் கலக்கி யூட்டி
ஆரவே யிடதுவிலாச் சூடு போட
அந்நோயு மகன்றுவிடு மதன்மேற் பாரே. (323)

## குளிவு நோய்.

பாரப்பா குளிவுநோய் செய்கை தன்னை
பகரவே யுடம்பெங்குந் தடிக்குந் தீர
நேரப்பா சுக்கதுவும் பலம தொன்று
நிகழுஞ்சீ ரகம்பலந்தா னதுபோ லாகும்
சேரப்பா நொச்சியிலைத் தேசிக்காய் போல்
திட்டமா யரைத்துத்தண் ணீர்க லக்கி
தீரப்பா கொடுத்திடது விலாவிற் சூடு
தீட்டிடவே சுகமாகு மதன்பின் னாலே. (324)

## குளிர்நோய்.

பின்னாகக் குளிர்நோயின் செய்கை சொல்வேன்
பெருமழையில் நனைந்தாலிப் பிணியுண் டாகும்
தன்னாகங் குளிர்ந்துமயிர் சிலிர்த்தி ருக்கும்
தானடுங்குந் தீரமிள கைந்து தோலா

முன்னுக மிளகாயவ் வாறு கூட்டி
மொழியுமொரு படித்தண்ணீ ரதனிற் போட்டு
நன்னுக கிசாயம்வைத் தாற விட்டு
நவிலுமரைப் படியாஞ்சா ராயஞ் சேரே. (325)

## அழல் நோய்.

சேர்த்தூட்டி யுடம்பதனிற் சாணி வேது
திடமாகப் போட்டுநனே யாது கட்டி
நேர்த்தியாய் வெந்நீரைக் குடிக்கச் செய்தால்
நீங்குமிப் பிணியதுவு மழல்நோய் செய்கை
சீர்த்தியுடற் புள்ளிபுள்ளி யாக வீழும்
செப்பவெச்சம் நெல்லிக்காய் போல வீங்கும்
பார்த்திடுங்கண் ணிமைதடிக்குந் தீரு தற்கு
பாங்காகச் சூடுமெட் டிடத்திற் போடே. (326)

## குழல் நோய்.

போடப்பா குழல்நோயின் செய்கை சொல்வேன்
பொருந்தியதோர் குரவளையைக் கட்டி வீங்கும்
நாடப்பா செவிதாழுந் தீரு தற்கு
நல்லவு மத்தையிலைப் பிடிதா னென்று
தேடப்பா வெருக்கலையின் பழுப்ப தைந்து
திகழுமழுக் காரைவேர்த் தொலிபிடிய தொன்று
சூடப்பா மிளகுபல மிரண்டி னேடு
தொலிபோக்கி வெங்காயம் படிகால் கூட்டே. (327)

## குளிர்ந்த நோய்.

கூட்டியரைத் திருபடிகா டியிற்க லக்கிக்
கொடுத்திடது விலாவதனிற் சூடு போட
வாட்டியநோ யதுவிலகுங் குளிர்ந்த நோயை
வழுத்தக்கே ளரைமேய்ச்ச லாக மேயும்
தாட்டிகமா யடுத்தடுத்து நீரை யுண்ணும்
தானுமனி தரைக்கண்டாற் சீறிப் பார்க்கும்
நாட்டியதோர் பிணியகல வாவரையி னிலையை
நலமாக யிடித்ததனிற் றண்ணீ ரூற்றே. (328)

### இதுவுமது.

ஊற்றியதை யூறவைத்து மறுநா டன்னில்
உற்றசிறு நீரும்நல் லெண்ணெய் கூட்டி
நாற்றிசையே ருண்டாக வேண்டு மானல்
நற்பழனி மலைதண்ட பாணி பாதம்
போற்றியே கொடுத்திடது விலாவிற் சூடு ஆதி-ஆதி
போட்டிடவிந் நோயகலுஞ் சொல்லா தெல்லாம்
வேற்றுமை யிலாதுரைத்தேன் கடைக்காண் டத்தில்
விரும்பிப்பா ரக்காண்ட மிதுவு முற்றே. (329)

மாட்டு வயித்தியம் நடுக் காண்டம்.
முற்றிற்று.



248
6-6

VIVEKANANDA
PRESS
MADURA